
மணிமேகலைப் பிரசுரம்

# கந்த சஷ்டி சிந்தனைகள்



மூளாய் அருணாசலம்

# கந்த சஷ்டி சிந்தனைகள்

## மூளாய் அருணாசலம்

மணிமேகலைப் பிரசுரம்
தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எண் : 4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24342926
தொலைநகல் : 0091-44-24346082
மின் அஞ்சல் : manimekalai1@dataone.in
இணைய தளம் : www.tamilvanan.com

## நூல் விவரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | கந்த சஷ்டி சிந்தனைகள் |
| ஆசிரியர் | மூளாய் அருணாசலம் |
| மொழி | தமிழ் |
| முதற் பதிப்பு | 2006 |
| உரிமை | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | 11.6 கி.கி. |
| நூலின் அளவு | கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | 132 |
| அட்டைப்பட ஓவியம் | ஏ.எச். கிராஃபிக்ஸ் |
| லேசர் வடிவமைப்பு | கிறிஸ்ட் கம்ப்யூட்டர்ஸ் ✆ 23725639 |
| அச்சிட்டோர் | ஸ்கிரிப்ட் ஆஃப்செட் சென்னை - 94. |
| நூல் கட்டுமானம் | தையல் |
| வெளியிட்டோர் | **மணிமேகலைப் பிரசுரம்** சென்னை - 17. |

நூலின் விலை : ரூ. [redacted]

# காணிக்கை



பத்து மாதம் மடிசுமந்து, தனது உதிரத்தைப் பாலாக ஊட்டி எம்மை இவ் உலகில் ஆன்மீக ஈடுபாடு கொண்ட ஆன்மாக்களாக வாழ வழிகாட்டிச் சென்ற எங்கள் அன்புக்கும், பாசத்திற்கும் உரிய எங்கள் அம்மா, அமரர் அ. மனோன்மணிக்கு எங்கள் அப்பாவால் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பான "கந்த சஷ்டி சிந்தனைகள்" என்னும் இந்நூலினை காணிக்கையாக அளிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறோம்.

பிள்ளைகள் : **கண்ணம்மா, முல்லை,**
**சகுந்தலை, பூங்கோதை**

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை, இலங்கை.**

**Sri Durgadevi Devasthanam**
**Tellippalai, SriLanka.**

தலைவர்:
துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி,
**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J.P.**

**President:**
Durgaduranthari, Sivathamilselvi,
**Dr. Miss. Thangamma Appacuddy, J.P.**

# ஆசியுரை

(மூளாய் அருணாசலம் அவர்களின் ஆக்கபூர்வமான சமயக் கட்டுரைகள்)

எங்கள் மண்ணில் எழுத்தாளர்களாகவும், பேச்சாளர்களாகவும், சிந்தனையாளர்களாகவும் விளங்குபவர் ஒரு சிலர். இவர்களுடைய ஆக்கங்களைப் படித்துப் பயனடைய வேண்டும் என்பது கற்றறிந்தோர் காட்டும் வழியாகும். மூளாய் அருணாசலம் என்னும் இப் பெரியார் சைவ உலகுக்கு அளித்திருக்கின்ற ஆக்கங்கள் பல. இன்றைக்கு இவற்றைப் படித்துப் பயன் பெறுவோர் கூட்டம் அருகிக் கொண்டு போகிறது. ஆனால் எமது சமூகத்துக்கும், சமயத்துக்கும் இக்கட்டுரைகள் மிக மிக வேண்டியவை. வளர்ந்து வரும் சமுதாயம், துரதிருஷ்டவசமாக சமய வரலாற்றைத் திரித்தும், மாற்றியும் வெளிவருகின்ற செய்திகளினால் குழப்பமடைகிறது. ஆனால் புராண இதிகாசங்களை ஆதாரமாகக் கொண்டு வெளிவரும் ஆக்கங்களை எமது பாடசாலைச் சிறுவர்களும் பல்கலைக் கழகப் பயிலுநர்களும் நன்கு படித்து அறிய வேண்டும். இதற்குப் பேருதவியாக அருணாசலம் அவர்களின் ஆக்கங்கள் அமைந்திருக்கின்றன. இவற்றைக் கற்று பின்பற்றுதல் அனைவரதும் இன்றியமையாத கடமையாகும் என்பதைக் கூறி அமைகின்றேன்.

**கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி**
சமாதான நீதிபதி
தலைவர், ஸ்ரீ. துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, ஸ்ரீலங்கா

# அணிந்துரை

மூளாய் அருணாசலம் என்று அழைக்கப்படும் சைவத்தமிழ் அறிஞர், சைவ உலகம் பண்பாட்டு வழியில் ஒழுக வேண்டும் என்ற பெருவிருப்பில் அது பற்றி இலங்கையில் வெளியாகும் வீரகேசரி, தினகரன், உதயன், சஞ்சீவி போன்ற பல்வேறு பத்திரிகைகளில் பல கட்டுரைகள் எழுதி உள்ளார். மனித சமுதாயம் காலம்தோறும் அறிவியல் வளர்ச்சிக்கேற்ப மாறிவருகின்ற போதும், மனித சமூகம் நல்லிணக்கத்துடன் அமைதியாக வாழ்வதற்கு சமூகம் அறநெறியில் வாழ வேண்டியது அவசியமாகும். அறநெறி சார்ந்த விடயங்கள் ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்டவை. இந்த வகையில் அருணாசலம் ஐயா அவர்கள் மக்கள் மத்தியில் தெய்வீக நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு பல கட்டுரைகளைப் பத்திரிகைகளில் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு மனிதனும் இறை வழிபாட்டில் ஈடுபட்டு இறையருளைப் பெற்றுக் கொள்வதுடன், இறை அருள் வழி நடத்தல் வேண்டும். இதற்கு சான்றாக அமைவது இந்நூலின் முதற்கட்டுரையாக இடம்பெறும் ''வேண்டும் வரம் அருளும் வேழமுகன்'' என்னும் கட்டுரையாகும். எமது சைவ சமயத்தில் விநாயக வழிபாட்டிற்கு கொடுக்கும் முதலிடத்தை இது எடுத்துக் காட்டுகின்றது.

எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற்போல் ''சண்முகதரிசனமும் சாமீப பதவியும்'' என்னும் கட்டுரையில் ''கந்தபுராணம் கூறும் மிகச் சிக்கலான, புரிந்துகொள்ள முயற்சிக்காத பல சைவ சித்தாந்த கருத்துக்களை மிக இலகு தமிழில், பாமர மக்களும் படித்து அறிந்துகொள்ளக்கூடிய வகையில் தனது கட்டுரைகளில் எழுதியுள்ளார். சைவ சித்தாந்தம் கூறும் முப் பொருட்களான பதி, பசு, பாசம் பற்றியும், பசுக்களாகிய ஆன்மாக்கள் மீது இறைவன் கொள்ளும் பெரும் கருணை பற்றியும், அக் கருணையினால் ஆன்மாக்கள் அடையும் முத்தி பற்றியும் மிக அழகாக விளக்கியுள்ளார். இவ்வாறு ஆன்மீகத்தின் மிக உயர்ந்த நிலை பற்றி ஆசிரியர் விளக்குவதும் அவரின் உயரிய ஆன்மீக சாதனைகளைக் காட்டுகின்றது. இவ்வாறு ஆன்மீகம் சம்பந்தமான பல கட்டுரைகளையும், அதற்கு அனுசரணையாக விளங்கும் ஜோதிடம் பற்றியும் எழுதுவதில் ஐயா சிறந்த புலமையுடையவராக இருந்தார். ஐயாவின் ஆக்கங்கள் சிலவற்றைத் தொகுத்து ''கந்த சஷ்டி சிந்தனைகள்'' என்னும் தலைப்பினைக் கொண்ட நூலாக அவருடைய மகள் பூங்கோதை அச்சிட முன்வந்திருப்பது பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். தந்தையின் வழியில் சமூகத்திற்கு ஆன்மீகத் தொண்டாற்ற விழையும் அவருக்கு ஆண்டவன் அருளவேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி. நாச்சியார் செல்வநாயகம்**
தலைவர்/ இந்து நாகரிகம்
யாழ் - பல்கலைக் கழகம்
இலங்கை.

# வாழ்த்துரை

## கம்பவாரிதி இ. ஜெயராஜ்

உலகில் நிலவும் அறிவு அனைத்தினதும் மூலமாய்த் திகழ்வது,
வேதங்களே என்பது நம் இந்துமதத்தின் இறுகிய கொள்கை.
அவ்வேத வித்தை இவ்வியனுலகு முழுவதும் பரப்ப.
முனைந்து நின்றனர் நம்மூதாதையர்கள்.
வேதத்தின் உண்மைநெறி உணரும் தகுதியை,
சாதாரணமானுடர் பெற்றாரல்லர்.
அச்சாதாரணரையும் வேதநெறி நிறுத்தி வாழ்விக்க
வேத உண்மைகளை விளக்கிய ஞானியர்,
வேதத்தினைத் தரமிறக்காமற் படியிறக்கிச் செய்த,
நூல்வரிசை என்று ஒன்று உண்டு.
வேத, ஆகம, புராண, இதிகாசம் என்பதே அந்நூல் வரிசையாம்.

***

சைவத்தையும், தமிழையும்
யாழ்ப்பாணம் தம் இருகண்களெனப் போற்றி நின்றது.
சைவத்தின் அருமை தெரிந்த யாழ்ப்பாணத்தவர்கள்,
மேற்சொன்ன நூல் வரிசையை,
தம் வாழ்வின் வளமாக்கி வாழ்ந்தனர்.
இவ்வடிப்படையிலே, யாழ்ப்பாணத்தார் மத்தியில்,
புராண வரிசையில் பதிவுற்று நின்றது கந்தபுராணம்.
யாழ்ப்பாணக் கலாசாரத்தை,
கந்தபுராணக் கலாசாரம் எனப்போற்றி நின்றார்
நம் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள்.
அங்ஙனம் அவர் போற்றும் வண்ணம்,
கந்தபுராணம் நம் வாழ்வோடு கலந்து கிடந்தது.
ஆலயங்கள் தோறும் அன்றாடம் கந்தபுராணப்

படிப்பு நிகழ்ந்தமை,
நம் முன்னை வாழ்வின் பெருமை.
மொத்தத்தில் கந்தபுராணம் நம் யாழ்ப்பாணத்தவரின்,
சொந்த புராணம் ஆயிற்று.

***

இக்கந்தபுராணப் புலமை பெற்ற பலர்,
யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வந்தனர்.
அவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர்
மூளாய் அருணாசலம் அவர்கள்.
கந்தபுராணத்தை ஆழ்ந்து கற்ற அவர்,

'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'
எனும் அடிப்படையில், பத்திரிகைகளில்
கந்தபுராணக் கட்டுரைகளை எழுதி வந்தார்.
எளிமையும், ஆழமும் நிறைந்த அக்கட்டுரைகள்,
வருங்காலச் சந்ததிக்குப் பயன் விளைக்க வல்லன.
அறிவுலகுக்குப் பயன் செய்துவரும் அன்னாரின் மகளார்,
செல்வி பூங்கோதை அவர்கள்,
தன் தந்தையின் கட்டுரைகளை
'கந்தசஷ்டி சிந்தனைகள்' எனும் தலைப்பில்
நூலாய்த்தொகுத்து உலகோர்க்கு வழங்குகிறார்.
பயனுள்ள முயற்சி.
மும்முயற்சி சிறக்க,
என்னை வாழ்விக்கும் கம்பநாட்டாழ்வார் பாடிப்பரவும்
பரம்பொருளின் திருவடியை வேண்டிப் பணிகிறேன்.
**"இன்பமே எந்நாளும் துன்பமில்லை."**

**கம்பன் கோட்டம்**
இல் 11, இராமகிருஷ்ணா தோட்டம்,
கொழும்பு - 06. இலங்கை.

# வாழ்த்துரை

அருள்மொழி அரசி. கலாபூஷணம்,

## திருமதி வசந்தா வைத்தியநாதன்

கந்த புராணக் கலாசாரத்தைப் பேணிப் பெருமை பெறும் பரம்பரையின் வழிவந்தவர்கள் நாம். ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் அயராத முயற்சியின் பயனாக கந்தபுராணச் சிந்தனைகள் புராணப் படிப்பின் வாயிலாகப் பட்டி தொட்டி எங்கும் பரவியது. அதனைத் தூண்டி மேலும் ஒளிரச் செய்தவர் அமரர் பண்டிதமணி கணபதிப் பிள்ளையவர்கள். இவர்கள் இருவரையும் இறுதிச் சைவமகன் இலங்கையில் உள்ளவரை மறத்தற்கியலாது.

"அறம் வெல்லும்; பாவம் தோற்கும்" என்ற அற உணர்வை மக்கள் உள்ளத்தில் ஆழப் பதிக்க எழுந்தவைகள் தாம் இதிகாசங்களும், புராணங்களும் - அதிலும் சிறப்பாகக் கந்தபுராணம். எத்துணை பிழைகள் செய்தாலும், ஒருகணம் இறைவனை உள்ளன்போடு நினைத்தாலும் போதும். பெருமான் அன்புடன் ஆட்கொள்வான் என்பதனை சூரபத்மனின் வரலாறு மூலமாகக் கச்சியப்பர் மெய்ப்பிப்பார்.

"தீயவை புரிந்தோரேனும் குமரவேள் திருமுன் உற்றால் தூயவராகி மேலைத்தொல்கதி அடைவர் என்கை ஆயவும்

வேண்டுங் கொல்லோ அடுசமர் இந்நாள் செய்த மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள்பெற்றுய்ந்தான், குமரப் பெருமானின் அளவில்லாத கருணை சூரனை அழிக்காமல் மயிலாகவும், சேவலாகவும் ஏற்று அருள் செய்தது.

கந்தபுராணம் கூறும் அரிய கருத்துக்களையெல்லாம் சிறுவர்களும் புரிந்துகொள்ளும் வகையில் எளிமை மிகும் சிறு சிறு கட்டுரைகளாக்கித் தந்திருக்கின்றார் சைவப் பெரியார் மூளாய் - அருணாசலம் அவர்கள். போற்றப்பட வேண்டிய பணி. தர்மத்தை மக்கள் மறந்து வருகின்ற இந்த நேரத்தில் குழந்தைகளின் மனத்தில் அறவிதைகளை ஊன்றுவது ஆன்றோர்களின் கடமை.

'மகனறிவு தந்தையறிவு' என்பதற்கொப்ப தந்தையை முன்னோடியாகக் கொண்டு சிந்திக்கும் செல்வி அ. பூங்கோதை அவர்கள் உதயன், வீரகேசரி, சஞ்சீவி முதலிய இதழ்களில் வெளிவந்த கட்டுரைகளைச் செம்மையாகத் தொகுத்து, "கந்த சஷ்டி சிந்தனைகள்" என்ற தலைப்பில் நூலாக்க முன் வந்திருப்பது பாராட்டத்தக்கது. இளையவர்களின் எண்ணங்களை நல்வழியில் திசை திருப்பினால் நற்பயன் விளையும் என்பதற்குப் பூங்கோதையின் முயற்சி சான்றாகும்.

வாழ்க வளமுடன்!

**"கம்பன் கோட்டம்"**

இல - 11, இராமகிருஷ்ணா தோட்டம்

கொழும்பு - 06, இலங்கை.

# வாழ்த்துரை

காலத்திற்குக் காலம் ரிஷிகளும், ஞானிகளும், முனிவர்களும் தோன்றி அதர்மம் வலுவிழக்கவும், தர்மம் மேலோங்கவும் தத்தம் கடமைகளைச் செய்தமை வரலாற்று நூல்களாலும், புராண, இதிகாசங்களினாலும் அறியப்படும் உண்மை. இதே நேரத்தில் சாதாரண மனிதர்களாகப் பிறவி எடுத்த பலரும், தாம் பிறந்த பயனைச் செவ்வனே உணர்ந்து சீரிய முறையில் வாழ்ந்து சமய, சமூகப் பணிகளிலும் ஈடுபட்டுத் தம்மால் முடிந்தவரை மற்றையோரையும் வாழ்வாங்கு வாழ்வித்துச் சென்றுள்ளனர்.

இந்த வகையில் கரணவாயைப் பிறப்பிடமாகவும், மூளாயினை வாழ்விடமாகவும் கொண்ட அமரர் சுந்தரம் அருணாசலம் அவர்கள் ஆக்கபூர்வமான பல சமயக் கட்டுரைகளை எழுதித் தமது பணியினைத் தொடர்ந்துள்ளார். இந்து மதத்திற்கு அடிப்படையாக அமைந்த நூல்கள் - வேதங்கள், ஆகமங்கள், பகவத்கீதை போன்றன. இவற்றை எல்லா மக்களும் அறிந்து கற்றல் எளிதல்ல. ஆனால் புராண, இதிகாசங்கள் கூறும் விடயங்கள் சகல

மக்களும் அறிந்து பக்தி கொண்டு ஆன்மீக நெறியில் ஈடுபட வழிவகுப்பவை. இவை கடவுளர் வரலாறு, அவர்கள் நிகழ்த்திய அற்புதங்கள், கடவுளை வழிபடுவதன் மூலம் ஒருவன் பெறும் பயன் எனப் பல்வேறு விடயங்களைக் கதைகளாகக் கூறுபவை. பொதுவாக மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம், விரத மகிமைகள் பற்றிக் கூறுவனவாகக் கொள்ளலாம். புராணம் பற்றிய ஆழமான அறிவு இன்றைய மக்கள் மத்தியில் இல்லை. புராணங்கள் பழைய கதைகளை வெறும் பொழுது போக்குவதற்காக கூறுபவை அல்ல. அவை, பல்வேறு கதைகள், சம்பவங்களினூடாக உயர்ந்த சமய, தத்துவக் கருத்துக்களை வெளிப்படுத்தும் பயனுள்ள நூல்களாகும். இறை வழிபாடு, பூசை, விரதங்கள், தவம் இவற்றின் மூலம் மக்கள் பெறும் வரங்கள், பலன்கள் போன்றவற்றை விளக்கிக் கூறுபவை.

இந்த வகையில் திரு.சு. அருணாசலம் அவர்கள் புராணங்களில் ஒன்றான ''கந்தபுராணத்தை'' ஆதாரமாகக் காட்டித் தமது கட்டுரைகளுக்கு மூலக்கருவைப் பெற்று மக்களுக்கு வேண்டிய வகையிலும், அவர்களுக்கு விளங்கும் வகையிலும், இலகுபடுத்தி எழுதி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ''கந்த சஷ்டி விரதமும் கந்த சஷ்டி கவசமும், சூரபத்மன் வரலாறு, சூரபத்மனும் தங்கை அசமுகியும், கார்த்திகைப் பெண்களும் கந்தவேளும், தாட்சாயணியாகச் சக்தி பிறந்த கதை, தந்தைக்கே உபதேசம் செய்து சுவாமி நாதராகிய கந்தப் பெருமான், தேவர்கள்

முன் பாலனாகத் தோன்றித் திருவிளையாடல் புரிந்த பெருமான்'' என்று தொடரும் இவரது கட்டுரைகள் புராண சம்பவங்களின் அடிப்படையில் மக்களுக்கு சமய விழிப்புணர்வையும், சமய வழிபாட்டில் ஈடுபாட்டினையும் உண்டு பண்ணுவன.

இத்தகைய தந்தையாரின் கட்டுரைகளைத் தொகுத்து ''கந்த சஷ்டி சிந்தனைகள்'' என்னும் தலைப்பில் நூலாக்கித் தாயாரின் நினைவாக வெளியிட எண்ணம் கொண்ட - அருணாசலம் அவர்களது புதல்வியார் பூங்கோதை அவர்களின் முயற்சியைப் பாராட்டுவதோடு, அருணாசலம் அவர்களின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திப்போம்.

கலாநிதி. *ஏ.என். கிருஷ்ணவேணி*
சிரேஷ்ட விரிவுரையாளர்
நுண்கலைத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம், இலங்கை

உ
சிவமயம்
அன்பே சிவம்

**Aru. Thirumurugan**, B.A., Dip. IN.Ed.,
Vice Principal
Skandavarodaya College
Chunnakam, Sri Lanka

**செஞ்சொற் செல்வர்**
ஆறு. திருமுருகன்
28, கையிலாச பிள்ளையார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்

### செஞ்சொற்செல்வரின்

## பிரார்த்தனையுரை

அறச் சிந்தனைகளும் ஆன்மீக உணர்வுகளும் மானிட வாழ்வைத் தூய்மைப்படுத்தவல்லன. இன்றைய கணனி யுகத்திலே இயந்திரங்களோடு இயந்திரங்கள் ஆகிவிட்ட மானிடர்களின் வாழ்வை ஆற்றுப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும். அந்த வகையிலே சமயக் கட்டுரைகள் மூலம் ஆன்மீகச் சிந்தனைகளை மக்களுக்கு ஊட்டிய அமரர் மூளாய் அருணாசலம் அவர்களின் பணி மகத்தானது. பத்திரிகைகளிலே விரதங்கள், சைவ சமயப் பெரியார்கள், இதிகாச – புராணக் கதைகளில் உள்ள ஆன்மீகச் சிந்தனைகள், சைவ சமய வாழ்வியற் சிந்தனைகள் போன்ற பல கனதியான விடயங்களை கட்டுரைகளாகத் தொடர்ந்து எழுதியுள்ளார். இவரது ஆக்கங்கள் எமது வளரும் சமுதாயத்திற்கு மிகப்

பயனுள்ளதாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அன்னாரது ஆக்கங்கள் யாவும் தொகுக்கப் பெற்று நூலுருப் பெறுவதையிட்டு பேருவகை அடைகின்றேன். பூதவுடல் நீத்தாலும் அவரது ஆன்மீகக் கட்டுரைகள் மூலம் அன்னாரது புகழுடல் மாளாது. அமரர் மூளாய் அருணாசலம் அவர்களது நூலைப் படித்து வளரும் சிறார்களும் ஏனையோரும் பயன்பெறுவதுடன் அச் சிந்தனைகளை மனதில் நிறுத்தி வையத்தில் வாழ்வாங்கு வாழவேண்டுமென்று கூறி அமைகின்றேன்.

**ஆறு. திருமுருகன்**

# பதிப்புரை

வந்த வினையும் வரநின்ற வல்வினையும்
கந்தனென்று சொல்லக் கரைந்துகுமே
செந்தில் நகர்ச் சேவகாயென்று சொல்வார்க்கு
மேவ வராதே வினை.

கலிதீர்க்கும் கந்தன்! இவனைப் பாடிப் பரவ ஆயிரம் நாவிருந்தாலும் போதா!

கந்தனைச் சிந்தையிலிருத்திப் பலர் பாடியுள்ளனர். நூல்கள் பல வெளிவந்துள்ளன. வள்ளிதெய்வானை உடனமர் மயில்வாகனனின் அழகு திருக்கோலத்தை அள்ளியள்ளிப் பருகினாலும் ஆவல் அடங்காது; மேன்மேலும் ஊற்றெடுத்துப் பெருகத்தான் செய்யும்!

நூல்கள் எத்தனை வெளிவந்தாலும் அத்தனையும் படித்து இன்புற ஆயுள் வேண்டுமே! 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்ற முதுமொழிக்கொப்ப, தமிழ்க் கடவுளின் திருநாமம் ஓதியுணரத் தமிழ்மக்கள் கோடிகோடியாய்த் தயங்காமல் முன்வர வேண்டும். 'Better late than never' எனும் ஆங்கில அறிவுரைக்கிணங்க, காலம் கடந்தாயினும் கந்தனைப் பாடிப் பரவ முன்வருவோர்க்கு ஞாலமுதல்வனின் இளையோனருள் நிச்சயம் உண்டு... உண்டு.

அசுர வேகத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் மனித சமுதாயத்திற்கு ஒருக்கணம் நின்று நிதானித்துப் பார்க்கும்

எண்ணமும் வேண்டும். அப்படி நிதானித்துப் பார்க்கும் அளவில் ஏற்படக்கூடிய எண்ண அலைகள், வெறிபிடித்து அலையும் வெற்று மனிதர்களின் அராஜகப் போக்கிற்குத் துணைபோகாமல், நின்று, ஆன்மீக மார்க்கத்தில் அனைவரையும் ஈடுபடச் செய்யும் அருமருந்தான கந்தன் நாமம் பற்றிய எண்ண அலைகளாக மாறிவிட்டால்...(!) 'உலகம் அழிந்துவிடாமல் காக்கும் உன்னதச் செயலை நாமும் புரிந்தோம்' என்ற ஆத்ம திருப்தியாவது கிட்டுமே!

அந்த நோக்குடன் யாழிலங்கையைச் சேர்ந்த மூளாய் அருணாசலம் அவர்கள் எழுதிய கட்டுரைகள் பலவற்றில் கந்தன் புகழ்பாடும் கட்டுரைகளை அவரது புதல்வியார் செல்வி பூங்கோதை அவர்கள் தொகுத்து 'கந்த சஷ்டி சிந்தனைகள்' எனும் தலைப்பில் சிறந்த ஆன்மீக நூலாக ஆக்கித் தந்துள்ளார். அதனை 'மணிமேகலைப் பிரசுர' வெளியீடாகத் தருவதில் நாமும் பெருமை அடைகிறோம். பூங்கோதை அவர்களின் ஆன்மீக உணர்வு என்றென்றும் நிலைத்திருக்க எல்லாம்வல்ல கந்தன் அருள் துணை நிற்கட்டும்.

மணிமேகலைப் பிரசுரம் தனது ஆர்வம் மிக்க வாசக மணிகளுக்கு அளித்துவரும் தேன்கூடுகள் பலவற்றில் சிறந்ததொரு தெவிட்டாத தேன்கூடாக 'கந்தசஷ்டி சிந்தனைகள்' எனும் இந்நூலும் அமையும் என்பதற்கு அத்தாட்சி தேவையில்லை.

- *பதிப்பகத்தார்.*

# இந்நூலைப் பற்றி!

மனிதன் எவ்வளவு காலம் வாழ்ந்தான் என்பது முக்கியமல்ல. வாழ்ந்த காலத்தில் எதனைச் சாதித்தான் என்பதே முக்கியமானதாகும். இத்தகைய சாதனைகளிலும் தனக்காகவும், தன் குடும்பத்திற்காகவும், பெயர் புகழிற்காகவும் செய்யும் சாதனைகள் சுயநலமிக்க சாதனைகளாகும். ஆனால் மாறாக பிறருக்காகவும், பிறர் நலனுக்காகவும் செய்யப்பெறும் சாதனைகள் பொதுநலம் மிக்க சாதனைகளாகும். பொதுநலம் மிகுந்த சாதனைகளிலும் ஆன்மீகம் சம்பந்தமாகவும், ஆன்மீக ஈடேற்றம் சம்பந்தமாகவும், ஆன்மீக உணர்வினைத் தூண்டும் வகையிலும் அமைந்த சாதனைகள் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை ஆகும். இந்த வகையில் இப்பூவுலக வாழ்க்கையில் 16 வருடங்கள் மட்டுமே வாழ்ந்த முருகனின் அவதாரம் எனப் போற்றப்படும் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், 32 வருடங்கள் மட்டுமே வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனார், ஆதிசங்கரர், விவேகானந்தர் போன்றோர், மிகக் குறுகிய காலம்வரை வாழ்ந்தாலும் மனிதவர்க்கம் இவ்வுலகில் பிறந்ததன் நோக்கத்தினை அடைவதற்கான சகல வழிமுறைகளையும் எடுத்துக் காட்டிச் சென்றுள்ளனர்.

இந்த வகையில் எனது தந்தையான அமரர் சுந்தரம் அருணாசலம் அவர்கள் மேற்கூறிய ஞானிகள், ஆன்மீகவாதிகள், சித்தர்கள் போன்றோர் வரிசையில் வைத்து எண்ண முடியாவிட்டாலும், தான் வாழ்ந்த காலத்தில் மானிட சமுதாயம் ஆன்மீக உணர்வால் ஈர்க்கப்பட்டு, உய்ய வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். இதன் காரணமாக எமது சமயத்தின் புராண இதிகாசங்களை ஆதாரமாகக் காட்டி

தனது அறிவுக்கெட்டிய வகையில் பல ஆக்கங்களை பத்திரிகைகளில் எழுதியுள்ளார். அந்த ஆக்கங்களின் மூலம் பயன் பெற்றோர் பலர். ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலைகள் காரணமாக அந்த ஆக்கங்களைப் பேணிக் காக்க முடியாத நிலை ஏற்பட்டது. ஆனால் அவற்றுள் கிடைத்தவற்றையாவது இன்றைய தலைமுறையினர் படித்துப் பயன் பெறவேண்டும் என்ற நோக்கோடு தொகுக்கப்பட்ட தொகுப்பே இன்று உங்கள் கைகளிலுள்ள 'கந்த சஷ்டிச் சிந்தனைகள்'' என்னும் நூலாகும்.

இயல்பாகவே ஐந்து தலைமுறைகளுக்கு முன்னராகவே ஆன்மீக ஈடுபாடு கொண்டது எமது பரம்பரை. ஏனெனில், தற்காலத்தில் யுத்தத்தின் காரணமாகவே பெருந்தொகையான மக்கள் உயிரைப் பாதுகாப்பதற்காகக் கடல் வழியாக தமிழகம் சென்று அங்கு குடியேறி வாழ்கின்றனர். ஆனால் எமது மூதாதையர் பல வருடங்களுக்கு முன்பாகவே ஆன்மீக ஈர்ப்பும், ஈடுபாடும் காரணமாக தமிழகத்தில் வேதாரணியம், சிதம்பரம் போன்ற சிவ தலங்களுக்கருகில் குடியேறி சிவத்தொண்டில் ஈடுபட்டவர்களாவர். அவ்வழி வந்த பரம்பரையினர் இன்றும் அங்கு வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய பரம்பரையில் தோன்றிய என் தந்தையாரும் ஆன்மீக ஈடுபாடு காரணமாக ஆன்மீகம் சம்பந்தமான இந்நூல்களையும், புராண இதிகாசங்களையும் கற்று அது சம்பந்தமான ஆக்கங்களை எழுதுவது புதுமையான விடயம் அல்ல.

எனது தந்தையாரைப் பற்றி இவ்விடத்தில் நான் குறிப்பிட வேண்டியதொன்றாகும். வடமராட்சி கரணவாயைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், சைவக் குருக்கள் பரம்பரையின் வழிவந்தவர். வலிகாமம் மூளாயை வசிப்பிடமாகக் கொண்டவர். மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற இவர், தனது கல்வியினை ஆங்கில மொழி மூலமே கற்றார். இதனால் தன்னால் தமிழறிவினையும்,

சமய அறிவினையும் சிறு வயதில் பெறமுடியாமல் போய்விட்டதாக பல தடவை என்னிடம் தன் ஆதங்கத்தைக் கண்ணீருடன் கூறுவார்.

எமது மதத்தின் அரிய பொக்கிஷங்களை முடிந்தவரை கற்க வேண்டும் என்பதில் தீவிர ஆர்வம் கொண்டவர். இவ்வரிய நூல்களை எல்லாம் கற்பதற்கு தனக்கு ஆயுள் போதவில்லையே என பல தடவை மார்பு விம்ம என்னுடன் பகிர்ந்து கொண்டுள்ளார். இதன் காரணமாக தனக்கு ஓய்வு கிடைக்கும் நேரமெல்லாம் ஏதாவது ஒரு சமய சம்பந்தமான நூலுடனேயே காணப்படுவார். எனது அப்பா நித்திரை செய்ததை நான் கண்டதே குறைவு என்றே கூறலாம். பகற்பொழுது பேரப் பிள்ளைகளுடன் விளையாடுவார், இரவு நடுநிசி நான் தற்செயலாக எழுந்து பார்க்கும்பொழுது ஏதாவது படித்துக் கொண்டிருப்பார்; அல்லது எழுதிக் கொண்டிருப்பார். அவர் நீண்ட நேரம் தூங்கியதை நான் பார்த்தது எப்போதெனில் உடலை விட்டு அவர் ஆன்மா பிரிந்த பின்னரே.

இவ்வாறு தேடுதல், அறிதல், அதன்படி நடத்தல் என்பதில் பழக்கம் கொண்ட என் தந்தை, இவற்றை எல்லாம் எனக்கும் எடுத்துக் கூறி வழிகாட்டிச் சென்றுள்ளார். என் அப்பா எனக்குத் தந்த துணிவே இன்று நான் எழுத்துலகில் ஈடுபடக் காரணமாக உள்ளதுடன், அவருடைய ஆக்கங்களைத் தொகுத்து நூலாகவும் வெளியிட முடிந்துள்ளது எனக் கூறினால் மிகையாகாது.

எனது தந்தை எனக்கு அப்பாவாக மட்டுமின்றி, வேண்டியபோது நண்பனாகவும் ஆசானாக, கடவுளாக, சேவகனாகவும் தனது இறுதி மூச்சு வரை இருந்து அறிவுரை வழங்கியும் ஆறுதல் மொழி கூறியும் என் முயற்சிகள் எல்லாவற்றுக்கும் பக்கபலமாக இருந்து வந்துள்ளார். 'தாயுடன் அன்பு போம், தந்தையுடன் அறிவு போம்' என்பது முதுமொழி. சிஷ்யனுக்குக் குரு என்பவரின் உறவு கல்வி

கற்கும்வரை மட்டுமே. ஆனால் என் விடயம் இதற்கு நேர்மாறானதாகும். எந்த வயதில் என்ன நூல்களைக் கற்க வேண்டும்; அதாவது, என் இறுதிக் காலம்வரை நான் கற்க வேண்டிய நூல்கள் எவை எவை எனக் கோடிட்டுக் காட்டி முன் கூட்டி எனக்கு நேரடியாகவே கூறிச் சென்றுள்ளார். தனது பூவுலக வாழ்க்கையின் முடிவு வெகு விரைவில் என்பதை அறிந்து கொள்ளக் கூடிய ஞானமும் தூர திருஷ்டியும் கொண்டவராகக் காணப்பட்டார். இதன் காரணமாகவே ஒவ்வொரு ஆக்கமும் எழுதி முடித்தபின் "நான் இல்லாத காலத்தில் இவற்றை எல்லாம் தொகுத்து ஒரு நூலாக்க வேண்டியது உனது பொறுப்பு" என்று கூறுவார். அத்துடன் தனது நூலிற்கான பெயரினையும் கூறிச் சென்றுள்ளார்.

மனோதத்துவ அறிஞர்களின் கூற்றுப்படி ஒவ்வொரு உயிரியும் குழந்தைப் பருவம், இளமைப் பருவம், முதுமைப் பருவம் என்னும் மூன்று பருவத்தின் பண்புகளைத் தம்முள் கொண்டுள்ளன. தேவைக்கும், சந்தர்ப்பத்திற்கும் ஏற்றவகையில் அவற்றை வெளிப்படுத்திப் பழகிக் கொண்டால் அனைத்து வயது மனிதர்களுடனும் சந்தோசமாக வாழலாம் என்பதாகும். இந்த நுட்பத்தை என் அப்பா நன்கு தெரிந்து வைத்துக் கொண்டார் என்றே கூற வேண்டும். ஏனெனில், இவர், ஒரு மாதக் குழந்தைமுதல் வயது முதிர்ந்தோர் வரை அனைவரிடமும் அன்புடனும், பாசத்துடனும், உதவும் மனப்பான்மையுடனும், மற்றவர்கள் தன்னில் நம்பிக்கை கொள்ளும் வகையிலும் நட்பு பாராட்டுவார். இதன் காரணமாக இவரின் அறிவுரையையும், ஆலோசனையையும், வழிகாட்டலையும் நாடி வந்தோர் பலர் என்றே கூறலாம். இந்நூலை வாசிப்போருள் அப்பாவின் அறிவுரையைப் பெற்றுக் கொண்டவர்களும் இருப்பீர்கள்.

இவ்வாறு, 'நான் ஏன் இப்பூவுலகில் பிறந்தேன்? ஏன் வாழ்கின்றேன்?' போன்ற வாழ்க்கையின் தத்துவங்களை

நன்குணர்ந்து மிக எளிமையான, அமைதியான, அடக்கமான தியாக சிந்தனை கொண்ட ஆன்மாவாக இறுதிவரை மகிழ்ச்சியாக வாழ்ந்து, தனது இப்பூவுலக வாழ்க்கையை முடித்துக் கொண்டார். இத்தகைய அற்புதமான ஆன்மாவிற்கு மகளாகப் பிறக்கும் வாய்ப்பு இப்பிறப்பில் எனக்குக் கிடைத்ததையிட்டு பெருமையும், மகிழ்ச்சியும் அடையும் இத்தருணத்தில் மீண்டும் ஒரு பிறவி எனக்கு இருக்குமேயானால் இந்த பந்தம் தொடர சிதம்பரத்தில் நடனம் செய்யும் ஆடவல்லானைப் பிரார்த்திக்கின்றேன்.

> *எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை*
> *செய்நன்றி கொன்ற மகற்கு*

என்று மிகவும் வலியுறுத்தி எச்சரித்துப் பேசியுள்ளார் வள்ளுவப் பெருந்தகை. இந்தச் சந்தர்ப்பத்தில் எனது முயற்சிகளுக்கு எல்லாம் தோன்றாத்துணையாக எனது வீட்டிற்கருகில் கோயில்கொண்டு அருள் பாலிக்கும் செல்வ விநாயகப் பெருமானை மனதாரத் துதித்து, வாயார வாழ்த்தும் இத்தருணத்தில் பின்வருவோருக்கு நன்றி கூற என் மனம் அவாவுறுகின்றது.

இந்நூலைப் பொலிவாகவும், அழகாகவும் அச்சிடுவதற்கு ஆலோசனை வழங்கி உதவிய மணிமேகலைப் பிரசுர உரிமையாளர் மதிப்பிற்குரிய திரு. ரவி தமிழ்வாணன் அவர்களுக்கும், அங்கு பணிபுரிபவர்களுக்கும்;

எனது தந்தையின் ஆக்கங்கள் நூல் வடிவம் பெற எனக்கு மிகவும் துணை நின்றவர், மணிமேகலைப் பிரசுரத்தின் உரிமையாளர் திரு. ரவி தமிழ்வாணன் அவர்களை எனக்கு அறிமுகப்படுத்தியவர், - எனது தந்தை கட்டுரைகள் எழுதும்போது உதயன் பத்திரிகை நிறுவனத்தின் சஞ்சீவி, ஞானக்கதிர் போன்றவற்றுக்கு ஆசிரியராக இருந்து என்

தந்தைக்கு நன்கு பரிச்சயமானவரான மதிப்பிற்குரிய திரு. வே. வரதசுந்தரம் ஐயா அவர்கட்கும் நன்றி. நான் அவரை சந்திக்கும் போதெல்லாம் "ஐயாவிற்கு நல்ல விடயம் ஒன்று நான் செய்ய வேண்டும்" என்று கூறுவார். அதாவது, எனது அப்பாவின் கட்டுரைகள் நூல்வடிவம் பெற வேண்டும் என்பதே திரு. வரதசுந்தரம் ஐயா அவர்களின் விருப்பமாகும். இந்நூலாக்கம் சம்பந்தமாக சந்தேகம் ஏற்படும்போது தொலைபேசியில் நான் கேட்கும் போதெல்லாம் மிக அழகாகவும், நிதானமாகவும் விடைபகரும் தியாக சிந்தனை கொண்ட திரு. வே. வரதசுந்தரம் ஐயா அவர்கட்கு இவ்விதம் நன்றி கூறுவதில் பெருமையடைகின்றேன்.

நவீன யுகத்தினால் நலிவுற்றுப் போகயிருந்த எமது சமயத்தின் பண்பாட்டு, கலாசாரங்களை இன்று நிலைநிறுத்தி வைப்பதில் பெரும்பங்கினை ஆற்றிவரும் ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானத்திற்குச் சென்று இந்நூலிற்கான ஆசியுரை வேண்டி நின்றபோது முகமலர்ச்சியுடன் என்னை வரவேற்று ஆசியுரை வழங்கிய, வணக்கத்திற்குரிய அம்மா செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கட்கும் இத்தருணத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மிக ஆழமான ஆன்மீக விழிப்புணர்வு கொண்ட மதிப்பிற்குரிய திருமதி நாச்சியார் செல்வநாயகம் (தலைவர் இந்து நாகரிகம், யாழ் - பல்கலைக் கழகம்) அவர்கள் எமது கிராமத்தின் அருகில் வசிப்பவர். எமது குடும்பத்தை நன்கு அறிந்தவர். இந்நூலிற்கு அணிந்துரை வழங்கி அணி செய்துள்ளார். இவரையும் இத்தருணத்தில் நினைவுகூர்ந்து நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இலங்கையின் தலைநகராம் கொழும்பில் இன்று சமயமும், தமிழும் பேணப்பட்டு வருவதற்கு தமது காத்திரமான பங்களிப்பினை வழங்கி வருவதில் முன்னோடியாகத் திகழும்

நிறுவனங்களுள் இலங்கை கம்பன் கழகமும் ஒன்றாகும். இந்த வகையில் இலங்கை கம்பன் கழக தலைவரான கம்பவாரிதி இ. ஜெயராஜ் ஐயா அவர்களும், அருள்மொழி அரசி, கலாபூஷணம் திருமதி வசந்தா வைத்தியநாதன் அம்மா அவர்களும் இந்நூலிற்கு வாழ்த்துரை வழங்கி வாழ்த்தியுள்ளனர். வாழ்த்திய இந்நெஞ்சங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலிற்கு பெரும் சிரமத்தின் மத்தியிலும் மதிப்புரை வழங்கியவரும், எனக்கு இந்துநாகரிக பாடத்தில் ஈடுபாட்டை ஏற்படுத்தியவரும், என்றும் என் நெஞ்சை விட்டு நீங்காத என் ஆசான் மதிப்பிற்குரிய கலாநிதி ஏ.என். கிருஷ்ணவேணி (சிரேஷ்ட விரிவுரையாளர், நுண்கலைத்துறை யாழ் - பல்கலைக் கழகம்) அவர்கட்கும் இந்தத் தருணத்தில் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்து நெறியின் பண்பாட்டு, விழுமியங்கள் பற்றி இன்றைய காலகட்ட மக்கள் கூடுதலாக அறிய வேண்டிய சூழ்நிலையில் உள்ளனர். இந்நிலையில் தமது சொல்லின் வண்மையால் மக்கள் அகங்களில் மீண்டும் பதிய வைக்கும் மதிப்பிற்குரிய திரு. ஆறு. திருமுகன் அவர்கள் இந்நூலிற்குப் பிரார்த்தனையுரை வழங்கியுள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். எனவே இத்தருணத்தில் திரு. ஆறு. திருமுகன் அவர்கட்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் இந்நூலாக்கத்திற்கு உதவிய அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் என் நன்றி.

அன்புடன்

**அருணாசலம் பூங்கோதை**

"அருணோதயம்"
ஆஸ்பத்திரி வீதி, மூளாய்,
யாழ்ப்பாணம், இலங்கை

# உள்ளே...


1. வேண்டும் வரம் அருளும் வேழமுகன் ........................ 27
2. விரதங்களுள் முதன்மையானது கந்தசஷ்டி ................ 32
3. கலிதீர்க்கும் கந்தசஷ்டி பதினாறு செல்வங்களையும் தரும் 37
4. தாட்சாயணியாக சக்தி பிறந்த கதை ............................ 41
5. சூரபன்மனும் தங்கை அசமுகியும் ............................ 45
6. அகத்தியரிடம் பலிக்காத தந்திரம் ............................ 48
7. கடவுளுக்கு வில்வ பூசை செய்த முசு ........................ 51
8. கார்த்திகைப் பெண்களும் கந்தவேளும் ...................... 54
9. பிரமதேவரின் யாகமும் தேவர்கள் பெற்ற சாபமும் 58
10. மன்மதனின் தியாகம் ........................................... 61
11. முருகவேளின் அவதாரம் ........................................ 64
12. .கனவில் தோன்றிய கந்தவேள் ................................. 66
13. சண்முக தரிசனம் ................................................. 69
14. சேவலும் மயிலும் ................................................ 72
15. தேவர்கள் முன் பாலனாகத் தோன்றி திருவிளையாடல் புரிந்த பெருமான் ........................ 75
16. யாகம் குழம்பியதால் அவதியுற்ற தேவர் துயர் தீர்த்த முருகப் பெருமான் ........................ 80
17. பிரமனைச் சிறையில் அடைத்து, படைத்தலை மேற்கொண்ட முருகன் ............................ 84

18. தந்தைக்கே உபதேசம் செய்து சுவாமி நாதராகிய கந்தப் பெருமான் ........................ 88

19. சடாட்சரமந்திரம் ஜெபித்து தவமிருந்த கன்னியர்க்கு அருளிய கந்தவேள் ........................ 92

20. சூரபன்மனின் வரலாறு - 1 ........................ 96

21. சூரபன்மனின் வரலாறு - 2 ........................ 99

22. அசுரன் பிறந்தான் ........................ 102

23. சூரபன்மனின் ஆதிக்க வெறி ........................ 104

24. குறுமுனி சமன் செய்த பூமி! ........................ 106

25. கணபதியும் காவிரியும் ........................ 108

26. குறுகு குறுகு குற்றாலா! ........................ 111

27. வீரவாகு கேட்ட வரம் ........................ 113

28. கடலிற்குள் இறுதிக் கிரியை ........................ 115

29. கந்தன் நாமம் பாடி அமைதி காண்போம் ........................ 117

30. ஞானக் குழந்தையாக அவதரித்த அழகன் முருகப் பெருமான்தானா? ........................ 120

31. அம்பிகையின் சாபம் அனைவருக்கும் வரம் ........................ 124

32. ஐந்தாம் குரவரெனப் பக்தர் பரவசப்படும் அருணகிரிநாதர் ........................ 129

# கந்த சஷ்டி சிந்தனைகள்

## வேண்டும் வரம் அருளும் வேழமுகன்



கயமுகன் என்ற அசுரன் அமராவதியை அழித்துத் தேவர்களைத் தனது ஏவலர்களாக்கினான். இந்திராதி வானவரை அழைத்து "தேவர்களே, இன்று முதல் அதிகாலையில் நீங்கள் என் முன் வந்து, சிரசில் மூன்று முறை குட்டி, செவிகளைக் கைகளால் மாறிப்பிடித்தபடி இருந்து எழுந்து, தோப்புக் கரணம் இட வேண்டும். அதன் பின்னரே உங்களுக்கு விதிக்கப்பட்ட பணிகளைச் செய்ய வேண்டும்" என்று கட்டளையிட்டான். தேவர்கள் அவ்வாறே ஒழுகி உடலும் உள்ளமும் நொந்தனர்.

காமதேனு, கற்பகம், சங்கநிதி – பதும நிதி, சிந்தாமணி ஆகியனவும் சென்று ஏவல் புரிந்தன.

சுக்கிராச்சாரியார் கயமுகனுக்கு அமைச்சராக இருந்தார். பிரம தேவரும் தேவமாதரும் அவன் இட்ட பணிகளைச் செய்தனர். மனம் வெம்பிய தேவர்கள் தமக்கு ஏற்பட்ட துன்பங்களைச் சிவபிரானிடம் முறையிடக் கைலையங்கிரிக்குச் சென்று "கருணைக் கடலே காளகண்டப் பெருமானே, கயமுக அவுணனால் அல்லல் உறுகின்றோம். அவனை அழித்து எங்களைக் காத்து அருள வேண்டும்" என்று இரந்து நின்றனர்.

"தேவர்களே, கயமுகன் (வேழமுகன்) மூவாயிரம் ஆண்டுகள் எம்மைக் குறித்துத் தவம் செய்து, வலிமையான வரங்களைப் பெற்றுள்ளான். மனிதர் தேவர், விலங்குகள் போன்றவற்றால் மட்டுமன்றி, எந்த ஆயுதத்தாலும் அவனுக்கு மரணம் சம்பவியாத வரத்தையும் யாம் வழங்கியுள்ளோம். வருந்தாதீர்கள்; ஒரு புதல்வனைத் தந்து உங்கள் துயர்களைக் களைவிப்போம்" என்று அருள்புரிந்தார் சிவபிரான்.

கைலை மலையில் உள்ள ஒரு நறுமலர்ச் சோலைக்குப் பரமனும் பராசக்தியும் எழுந்தருளி, சோலையின் நடுவே உள்ள மந்திர சித்திர மண்டபத்துக்குள் சென்றார்கள். அந்த மண்டபத்தில் இருந்த மந்திர ஓவியங்களுக்கு இடையே "சமஷ்டி பிரணவம்," "வியஷ்டி பிரணவம்" என்கின்ற இரண்டு மந்திரங்களும் பிரகாசத்துடன் இலங்கின. அவ்விரு பிரணவ மந்திரங்களையும் அம்மையும் அப்பனும் கருணையுடன் திருநோக்கம் செய்தலும், அவை யானை வடிவு கொண்டு கூடின.

பிரணவத்திலிருந்து பிரணவ சொரூபியான விநாயகப் பெருமான் அவதரித்தார்.

விநாயகர் தாய் தந்தையரது தாள் மலரில் தாழ்ந்து வணங்க, இறைவனும் இறைவியும் மைந்தனைத் தழுவி "எந்தக் காரியம் தொடங்குமுன்பும் உன்னைத் துதித்துத் தொடங்காதவருடைய கருமத்துக்கு விக்கினம் விளைவிப்பாயாக" என்று கூறி அருள்புரிந்தனர்.

**என்னரே ஆயினும் ஆவது என்று எண்ணுதல்**
**முன்னரே உனது தாள் முடியுறப் பணிவரேல்**
**அன்னர் தம் சிந்தைபோல் ஆக்குதி; அலதுனை**
**உன்னவர் செய்கையை ஊறு செய் திடுதி நீ.**

(கந்தபுராணம்)

ஒரு தினம் நாராயணமூர்த்தி சிவ பிரானைத் தரிசிக்க ஆவலுற்றுக் கைலையங்கிரியை அடைந்தார். அந்தச் சமயம் திருவிளையாடல் ஒன்றைத் திருவுளங் கொண்ட சிவபிரான், சக்கர பாணியைச் சாட்சியாக வைத்து உமையம்மையைச் சூதாட அழைத்தார். ஆட்டத்தில் அம்பிகை வெற்றி பெற, சிவபிரான் தாமே வெற்றி பெற்றதாகக் கூற இறைவனுடன் வாதம் புரிய அஞ்சிய அம்பிகை, அருகில், நடுவராக இருந்த நாராயணரைப் பார்த்தார். அம்பிகையின் நோக்கத்தை உணர்ந்த சிவபிரான் நாராயணருக்குக் கண்ணால் சைகை செய்தலும், நாராயணர் 'சிவபிரானே வென்றவர்' என்று பொய் கூறினார்.

சீற்றமடைந்த சிவசக்தி ''மாயவனே உனது மேனி கருமை என்பார்கள். இப்பொழுது உனது மனமும் கருமையாகி விட்டது போலும். பக்கத்தில் பார்த்திருந்தும் நடுநிலை பேணாமல் பொய் பேசினாய். நீ பாம்பு ஆகக் கடவது'' எனச் சாபமிட்டார். அந்தக் கணமே கொடிய நெடிய விடப் பாம்பு உருவம் நாராயணரை வந்து அடைந்தது. அச்சம் கொண்ட அச்சுதன் சிவ பிரானை வணங்கி, ''பெருமானே! இந்தப் பயங்கர உருவம் நீங்கும் வழி என்ன? சொல்லியருளும்'' என்று வேண்டி நின்றார்.

சிவபிரான் ''மாயவரே, மைத்துனரே! என்பால் நீர் கொண்ட அன்பின் காரணமாகப் பொய்ச் சாட்சி கூறிச் சாபம் பெற்றீர். பூமியின் தென்பால் ''திருவாலங்காடு'' எனப்படும் வனத்தில் நிற்கும் பாரிய ஆலமரப் பொந்தில் சில காலம் தவம் செய்திடும். உரிய காலத்தில் நமது குமாரனான விநாயகன் அங்கு வருவான். அவனைத் தரிசித்ததும் உம்மை வந்தடைந்த பாம்பு உருவம் அகலும்'' என்று கூறி விடையளித்தார்.

கயமுகனுடன் யுத்தம் புரிந்த விநாயகப் பெருமான் ''இவன் எந்த ஆயுதத்தாலும் சாகாத வரத்தை எம் தந்தையிடம் பெற்றவன்'' என்று சிந்தித்துத் தமது முகத்தில் உள்ள கொம்பு ஒன்றை முறித்து, சிவமூல மந்திரத்தைக் கூறி அதை ஏவினார். கோடு ஆயுதம் கயமுகனுடைய மார்பைப் பிளந்து நன்னீர்க் கடலில் மூழ்கிப் புனிதமடைந்து, மீண்டு, கணேசருடைய திருக்கரத்தில் அமர்ந்தது.

இறவாத வரம் பெற்ற கயமுகன் பெருச்சாளி வடிவுடன் விநாயகப் பெருமானை எதிர்த்தான். அவருடைய

கிருபா நோக்கத்தால் பெருச்சாளி மெய்ஞ்ஞானம் பெற்றுப் பணிந்தது அதை வாகனமாக ஏற்று அருள்புரிந்தார் விநாயகப் பெருமான். கயமுகனுடைய உடம்பினின்றும் பெருகிய இரத்த வெள்ளம் கானகம் எங்கும் பரவியது. அந்தக் கானகம் 'திருச் செங்காடு' என்றும், விநாயகப் பெருமான் சிவலிங்கப் பிரதிட்டை செய்து அர்ச்சித்ததால் 'கணபதீச்சுரம்' என்றும் பெயர் பெற்றது.

கணபதீச்சுரத்தை விட்டுத் தேவர்களுடன் புறப்பட்ட விநாயகர் பெருமான் திருவாலங்காட்டை அடைந்தார். அம்பிகையின் சாபத்தால் பாம்பு உருவம் பெற்று ஆலமரப் பொந்தில் தவம் புரிந்து கொண்டிருந்த திருமால், அவரைத் தரிசித்துத் துதித்ததும் பாம்பு வடிவம் நீங்கியது.

"ஐயனே! தேவரீரைத் தரிசித்துச் சாப விமோசனம் பெற்ற இத்தினத்தில் தங்களைப் பூசிக்க விரும்புகிறேன்" என்று இரந்த திருமால், சிறந்த பூஜையைப் பக்தியுடன் இயற்றி "பெருமானே! மார்கழி மாத பூர்வ பக்க 'ஷஷ்டி' திதி எனப்படும் இன்றைய நாளில் யான் தேவரீரை அர்ச்சித்தது போன்று வழிபாடு செய்பவர்களுக்கு, இஷ்ட சித்திகளை அளிப்பதுடன் நோய் பிணி போன்ற துன்பங்களை அகற்றி, நீண்ட வாழ்நாளையும் அழிவில்லாத செல்வத்தையும் அளித்து அருள வேண்டும்" என்று பிரார்த்தித்தார். அவ்வண்ணமே ஆகுக என்று கிருபை புரிந்தார் விக்கினேஸ்வரப் பெருமான்.

- தினகரன், 05.04.99

# விரதங்களுள் முதன்மையானது கந்தசஷ்டி



ஆன்மாக்கள் அநாதியாகவே ‘‘செம்பிற்களிம்பு போல் ஆணவ மலத்தினால் மிகவும் பந்திக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக அறியாமைக்குட்பட்ட ஆன்மாக்கள் கன்மங்களை ஈட்டுகின்றன. கன்மம் காரணமாகவே ஆன்மாக்கள் தொடர்ந்து பிறப்பு, இறப்புக்கு உட்படுகின்றன. ஆனால், ஒவ்வொரு ஆன்மாவின் இறுதி இலட்சியமாக இந்து மதம் கூறுவது மோட்சம் ஆகும்.

இம்மோட்ச நிலையை ஆன்மாக்கள் அடைய வேண்டுமானால், இறைவன் ஆன்மாக்கள் மீது கருணை கொண்டு குருவாக எழுந்தருளி அறிவினைக் கொடுத்து, ஆன்மாக்களில் பந்தித்துள்ள மலங்களைக் கெடுக்க வேண்டும். இது ‘மலபரிபாகம்’ எனப்படும்.

மலபரிபாகம் காரணமாக ஒவ்வொரு ஆன்மாவும் பற்றற்ற செயலில் ஈடுபடுகின்றது. இதன் காரணமாக ‘‘இருவினையொப்பு’’ என்னும் நிலையை ஆன்மா அடைகின்றது. நல்வினையையும், தீவினையையும்

சமமாக நோக்கும் நிலையே "இருவினையொப்பு" எனப்படும். இந்நிலையில் இறைவனின் திருவருட் சக்தியானது ஆன்மாக்களில் படிகின்றது. இந்நிலையே மோட்சம் எனப்படும் சத்திரிபாதம் ஆகும்.

இம் மோட்ச நிலையை ஆன்மாக்கள் அடைய பல வகையான வழிமுறைகளை இந்துமதம் குறிப்பிட்டபோதும், இவற்றுள் விரதம் இருத்தல் என்பது முக்கியத்துவம் உடையதாகும். விரதம் என்பது மனம், வாக்கு, காயம் என்னும் முக்கரணங்களாலும் கடவுளை விசேடமாக வழிபடுதல் ஆகும்.

தமிழர்கள், - குறிப்பாக இந்துக்கள், பல விரதங்களை அனுஷ்டிப்பதன் மூலம் இறைவனை வழிபடுகின்றனர். குறிப்பாக முருகனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் மதமான 'கௌமாரம்' தன்னகத்தே பல நோன்புகளைக் கொண்டிருந்த போதிலும், 'கந்தசஷ்டி' விரதமே மேலானதாகவும் எல்லோராலும் போற்றி அனுஷ்டிக்கப்படுவதாகவும், கன்ம வினையை விரைவில் அறுத்து மோட்சநிலை தருவதாகவும் கூறப்படுகின்றது.

குறிஞ்சி நிலத்திற்குரிய தமிழ்க் கடவுளான முருகனை வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் உள்ளவர்கள் தமது கர்ம வினையினை அறுப்பதற்காக கந்த சஷ்டி நோன்பினை அனுஷ்டிப்பதன் மூலம் வழிபடுவர். இந்நோன்பானது ஐப்பசி மாதம் சுக்கில பட்சப் பிரதமையிலிருந்து ஆறு நாட்கள் காக்கப்படவேண்டும்.

சூரனும், முருகக்கடவுளும் போர்புரிந்து, சூரனின் ஆணவத்தை அடக்கி சூரனை முருகன் ஆட்கொண்ட நாளே இறுதி நாளாகிய கந்தசஷ்டி எனப்படும். இக் கந்தசஷ்டி நோன்பினைப் பற்றி ஒரு புராண வரலாறு உண்டு.

பிரம்மாவுக்கு தக்கன், காசிபன் என்னும் இரு புதல்வர்கள் இருந்தனர். தக்கன் கடும் தவம் புரிந்து சிவனிடம் பல வரங்களைப் பெற்று இருந்தபோதிலும், இறுதியில் சிவனால் தோற்றுவிக்கப்பட்ட வீரபத்திரக் கடவுளால் கொல்லப்பட்டான். காசிபனும் கடும் தவம் பூண்டு சிவனிடம் இருந்து மேன்மையான சக்தியைப் பெற்று இருந்தான். ஒருநாள் சுக்கிரனால் ஏவப்பட்ட மாயை என்னும் பெண்ணின் அழகில் மயங்கித் தனது தவவலிமை எல்லாவற்றையும் இழந்தான்.

இதன் காரணமாக இருவரும் மனித உருவத்தில் முதலாம் சாமத்தில் இணைந்ததால் மனிதத் தலையுடன் கூடிய சூரனும், இரண்டாம் சாமத்தில் சிங்க உருவில் இவர்கள் இருவரும் இணைந்ததால் சிங்க முகத்துடன் கூடிய சிங்கனும், மூன்றாம் சாமத்தில் யானை உருவில் இணைந்ததால் யானை முகத்துடன் கூடிய தாரகனும், நான்காம் சாமம் ஆட்டின் உருவில் இவர்கள் இணைந்ததால் ஆட்டுத்தலையுடன் கூடிய அசமுகி என்னும் பெண்ணும் பிறந்தனர்.

மாயை காரணமாக தோற்றுவிக்கப்பட்ட இந்நால்வரும் ஆணவமிகுதியால் செருக்கு கொண்டு

இருந்தனர். இவர்களின் கடுமையான தவம் காரணமாக சிவன் இவர்களுக்குக் காட்சி கொடுத்து, ''என் சக்தியால் அன்றி வேறு எந்தச் சக்தியாலும் உங்களை வெல்ல முடியாது'' என அருளினார். இவ்வரத்தைப் பெற்ற சூரன் முதலானோர் தம்மைப்போல் பலரை உருவாக்கி அண்டங்கள் எல்லாவற்றையும் ஆண்டு இந்திரன் முதலான தேவர்களை சிறையிலிட்டுச் சொல்லொணாத் துன்பங்களைக் கொடுத்து அதர்ம வழியில் நடந்தனர்.

இக்கொடுமைகளைத் தாங்க முடியாது தேவர்கள் சிவனிடம் முறையிட்டனர். சூரன் முதலானவர்களை அழிப்பதற்காக சிவன் தனது நெற்றிக்கண்ணில் இருந்து ஆறுதீப்பொறிகளை ஏவி, அதன் மூலம் உருவாக்கப்பட்டவரே ஆறுமுகக்கடவுள் ஆவர். சரவணப் பொய்கையில் ஆறு கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்ட சரவணனை உரிய காலம் வந்ததும் பார்வதி ஆறு முருகனையும் ஒரு முருகனாக்கி ஆறுமுகக் கடவுளாக்கினார்.

இவ் ஆறுமுகக் கடவுள் சூரனை வதை செய்து, மாயையினால் மாமரமாக நின்றவனை தனது ஞானவேலால் பிளந்து அவனது ஆணவத்தை அடக்கி சேவலும், மயிலுமாக்கி, சேவலைத் தன் கொடியாகவும், மயிலைத் தன் வாகனமும் ஆக்கி சூரனை ஆட்கொண்டார். இவ்வாறே சிங்க முகன் தாருகனின் ஆணவம் அழிக்கப்பட்டு சிங்க முகன் அம்பிகையின் வாகனமாகவும் தாருகன் ஐயனாருக்கு யானை வாகனமும் ஆயினர்.

இவ்வாறு சூரன் முதலானோர் மாயையினால் தோற்றுவிக்கப்பட்டு, பலகன்மங்களை செய்தபோதிலும் இறுதியில் ஆணவ முனைப்புடன் கூடிய அக்கன்மங்கள் ஆறுமுகக் கடவுளின் ஞான வேலினால் அழிக்கப்பட்டு முருகனின் திருவருள் கிடைக்கப் பெற்று நற்கதியடைந்தனர்.

இதனைக் கூறும் கந்தசஷ்டி நோன்பினை கடைப்பிடிக்க ஆகமங்கள் சில விதிமுறைகளை கூறியுள்ளன; ஆறு நாட்களில் காமம், வெகுளி, ஈயாமை, மயக்கம், செருக்கு, பொறாமை என்னும் ஆறு பகைகளை வென்று முருகனின் அருளைப் பெற விரும்புபவர்கள் இந்நோன்பினை கைக்கொள்வர். இந்நோன்பு நாள் முழுவதும் உபவாசம் இருத்தல் மிகச்சிறந்ததாகும். உபவாசம் இருக்க முடியாதவர்கள் ஒருவேளை மட்டும் பால், பழம் உண்டு விரதம் இருப்பது நன்று. அதுவும் இயலாதவர்கள் ஒருவேளை மதியம் உண்டு கடைசிநாளில் உபவாசம் இருப்பது நன்று.

இந்நோன்பு காலங்களில் கந்த சஷ்டி கவசம், கந்த புராணம் போன்றவற்றை பாராயணம் செய்தல் நன்று.

வீரகேசரி, 17.11.93



# கலிதீர்க்கும் கந்தசஷ்டி பதினாறு செல்வங்களையும் தரும்

"ஐப்பசி மாதம் பூர்வ பக்க முதல் நாளாகிய பிரதமை தொடக்கம் ஷஷ்டி வரையுள்ள ஆறு நாள்களுக்கு அனுட்டிக்கப்படுவது கந்தஷஷ்டி விரதமாகும். இதன் போது, தினமும் அதிகாலையில் நீராடி சந்தியா வந்தனம் முதலாய காலைக்கடன்களைக் குறைவற முடித்து, முருகப் பெருமானை அன்புடன் வழிபாடு செய்து, பகலில் அவருடைய ஈடு இணையில்லாத புகழ்களைக் கேட்டு, இரவில் நல்ல நீர் சிறிது அருந்தி, ஆறு நாளும் முடிந்த மறுநாள் காலை நீராடி கந்தப் பெருமானுக்குச் சிறந்த பூஜை வழிபாடுகளை இயற்றிப் பின்னர் பாராயணம் பண்ணல் வேண்டும்.

கந்த ஷஷ்டி விரதம் அனுட்டிப்போர் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறை பற்றிய விபரங்களை கந்தபுராணம் கூறுகிறது. அதில் கூறப்பட்டிருக்கும் விதிகளின் பிரகாரம்

ஆறுநாள்களும் சிறிது நீர் மட்டும் அருந்தி உபவாசம் இருக்க முடியாதவர்கள் ஐந்து நாள்கள் பால் பழம் உண்டு, ஆறாவது நாளான ஷஷ்டி அன்று உபவாசம் இருக்கலாம் என்றும் இப்படிச் செய்ய முடியாதவர்கள் ஐந்து நாள்கள் உச்சி வேளையில் இறைவனுக்கு நிவேதனம் செய்த உணவை உண்டு இரவு பட்டினி இருந்து ஆறாவது நாள் உபவாசம் இருந்து வழிபாடு செய்யலாம் எனவும் கூறப்படுகின்றது.

இவ்வாறு ஷஷ்டி விரதம் இருந்தோர் மகப்பேறு முதலாய பதினாறு செல்வங்களைப் பெற்றுச் சிறப்புடன் வாழ்ந்த வரலாறுகளை இதிகாச புராணங்கள் காட்டுகின்றன.

விரத காலமாகிய ஆறுநாள்களிலும் பாராயணம் செய்யக்கூடியதும் முருகப் பெருமானின் பெருமைகளையும் புகழையும் எடுத்துக் கூறுவதுமான நூல்கள் பலவுண்டு. உதாரணமாக கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, கந்தர் கலிவெண்பா, திருமுருகாற்றுப்படை, திருப்புகழ், கந்தர்ஷஷ்டி கவசம் ஆகியவற்றைக் கூறலாம்.

இவைகளில் எல்லோராலும் இலகுவாகப் பாராயணம் செய்யக்கூடியதும் அளவில் சிறியதுமாக அமைந்தது கந்த ஷஷ்டி கவசம். இதைப் பாடியருளியவர் தேவராசன் என்பவர்.

தேவராசனுக்கு ஒருகால் கொடிய வயிற்று நோய் ஏற்பட்டது. மருத்துவர்கள் பல மருத்துவ முறைகளைக்

கையாண்டு நோய் குணமடையவில்லை. மனமுடைந்து வருந்திய தேவராசனுக்குச் செந்தில் முருகப் பெருமானின் ஞாபகம் வந்தது. முருகனைத் தரிசிக்கத் திருச்செந்தூருக்குச் சென்றார். அவர் அங்கு சென்றது கந்த ஷஷ்டி விரதத்தின் முதல் நாள் அன்று ஆகும்.

முருகப் பெருமான் சந்நிதிக்குச் சென்றதும் வயிற்று நோய் சிறிது சிறிதாகக் குறைவதை உணர்ந்த தேவராசன், பெருமானின் திருவருளை நினைந்து கசிந்து உருகி ஆனந்தக் கண்ணீர் ஆறாகப் பெருக கந்தன் புகழைப் பலவாறாகப் பாடத் தொடங்கினார்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு படை வீட்டைக் கருத்திற் கொண்டு ஆறுபாடல்களைப் பாடினார். இந்தப் பாடல்களே கந்தர்சஷ்டி கவசம் என்ற சிறப்புப் பெயர் பெற்றது. தற்போது யாவரும் படிக்கும் 'ஷஷ்டியை நோக்கச் சரவணபவனார்' என்ற பாடல் இரண்டாவது படைவீட்டைச் சார்ந்தது.

பல ஆண்டுகளாக அவரை அல்லற்படுத்திய வயிற்றுநோய் முருகப்பெருமானின் திருவருளால் அகன்றது. தேவராசன் திருச்செந்தூரிலேயே காவியுடை புனைந்து துறவு பூண்டு 'தேவராய சுவாமிகள்' என்ற திருப்பெயருடன் விளங்கி வந்தார்.

இந்தக் கந்தர் ஷஷ்டி கவசத்தை முருகனடியார்கள் பலரும் குமரவேளைத் துதித்துப் பாராயணம் செய்து, பேய்,

பூதம், பில்லி, சூனியம், பிணி, பகை என்பவற்றால் வரும் துன்பங்களினின்றும் விடுதலை பெற்று, செல்வம் மக்கட்பேறு தீர்க்காயுள் முதலாய ஏனையவற்றையும் பெற்று வாழவேண்டும் என்ற சீரிய நோக்கில் தேவராசனால் பாடப்பட்டது.

இகத்தில் உடலைக் காத்தற்குமன்றி, பரத்தில் முத்தியையும் அளிக்கவல்ல கந்தர்ஷஷ்டி கவசத்தை முருகனடியார்கள் பக்தி சிரத்தையுடன் பாராயணம் செய்து பயனடைவார்களாக.

- வீரகேசரி, 20.10.1995

# தாட்சாயணியாக சக்தி பிறந்த கதை



ஒரு தினம், கைலையங்கிரியில் சிவபிரானின் இடப்பாகத்தில் அமர்ந்திருந்த உமையம்மை ஏதோ நினைவு கொண்டு எழுந்து இறைவனின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி "பெருமானே! உமது தத்துவ நிலையை (உண்மை நிலையை) அடியேன் அறியும் வண்ணம் உரைத்தருளும்" என்று வேண்டினாள்.

குறுநகை புரிந்த கைலைவாசன் "தேவி! பேரும், ஊரும், உருவமும், குணமும் குறியும் இல்லாத நாம் சக்தியால் அருளுருவம் கொண்டு பஞ்ச கிருத்தியங்களைச் செய்கிறோம். பராசக்தி, ஆதி சக்தி, இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானா சக்தி எனப்படுகின்ற ஐம்பெரும் சக்திகளால் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்கின்ற ஐம்பெரும் தொழில்களை ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு இயற்றுகின்றோம்" என்றார்.

அதைக்கேட்டு மகிழ்ச்சியடைந்த உமையம்மையார் "ஸ்வாமி! தங்களுக்கு உருவம் இல்லை என்றீர்கள்.

அப்படியாயின் பஞ்சமூர்த்தங்களின் (5 சக்திகளின்) தோற்றங்களைக் கூறிய காரணம் யாது?'' என வினவினாள்.

''உமையே! எமக்கு எக்காலத்தும் உருவம் இல்லை. ஆயினும் யாம் கூறிய பஞ்ச மூர்த்தங்களும் நமது அருள் உருவங்களே அன்றி வேறு அல்ல'' என்றார் சிவமூர்த்தி.

''அவ்வகை உருவங்கள் அனைத்தும் தங்கள் அருளினால் உதிக்கின்றதால் 'தேவரீரின் அருள்' எனது 'உரு' என்னும் உண்மையைக் கண்டேன்'' - என்றார் உமையம்மை புன்னகையுடன்.

சிறிது சீற்றமடைந்த சிவமூர்த்தியானவர் ''பெண்ணே! உனது புகழை எனது சந்நிதியில் வியந்து கூறினை. உயிர்களிடத்து யாம் நீக்கமற வியாபித்து நிற்கும் நிலையினின்றும் நீங்குவோமாயின் அவை சடத்தன்மை (அசைவும் உணர்ச்சியும் அற்ற நிலை) பெறும். உன்னிடத்தும் யாம் பொருந்தாத காலத்து உனது உயிரும் உணர்ச்சி பெறாது. அதனைக் காட்டுவோம் காண்பாயாக!'' என்று கூறி ஐம்பெருந்தொழில்களினின்றும் நீங்கினார்.

உயிர்த்தொகை செயலற்றுச் சடப்பொருள்களாகிய தன்மையைக் கண்டு மனம் பதறிய உமையம்மை ''பெருமானே! இவ்வாறாகிய நிலை எமக்குக் கணப்பொழுதாயினும் உயிர்களுக்கு அனேகயுகங்கள் கழிந்தன. அவை கொடிய இருளில் மூழ்கக் காரணமாக இருந்த எனது பிழையைப் பொறுத்து முன்போல் இயங்க அருள் புரிவீர்'' என்று வேண்டினாள். எல்லாம்வல்ல

இறைவனின் ஆணைப்படி உயிர்கள் சடத்தன்மை நீங்கி வாழத் தொடங்கின.

சிவபிரான் உமையம்மையை நோக்கி "தேவி! முன்பு நீ உன்னைப் பற்றிப் புகழ்ந்தாய். யாம் சிறிது கோபித்து உயிர்களிடமிருந்து விலகியதும் அவை சடமாய்க் கிடந்தன. எனவே அந்தப் பாவம் உன்னையே சாரும். அந்தப் பாவம் நீங்கிட நீ செய்ய வேண்டியது ஒன்று உண்டு. நீ காளிந்தி நதியில் (யமுனை நதியில்) வலம்புரிச் சங்கின் உருவாகி இருந்திடு; அந்தநாளில் தக்ஷப்பிரசாபதி என்பவன் உன்னை எடுத்தலும், ஒரு குழந்தையாகி அவனிடம் சில நாள் வளர்ந்து தவம் செய்து மீண்டும் நம்மை அடைவாயாக!" என்று கூறி விடைகொடுத்தருளினார்.

ஒரு தினம் காளிந்தி நதிக்கு நீராடும் பொருட்டு மனைவி வேதவல்லியுடன் வந்த தக்ஷப் பிரசாபதி ஆயிரம் இதழ் தாமரை மலர் ஒன்றின் மீது அழகும் பிரகாசமும் கொண்ட வலம்புரிச் சங்கு ஒன்று இருப்பதைக் கண்டு ஆவலுடன் கையில் எடுத்தலும், அது அழகு எல்லாம் ஓருருவாகத் திரண்ட பெண் குழந்தையாயிற்று.

சிவபிரான் தந்த வரத்தின்படி பராசக்தியே குழந்தையாகி வந்தாள் என உணர்ந்த தக்ஷப்பிரசாபதி மனதில் தான் ஆயிரம் ஆண்டுகள் அவரை நோக்கித் தவம் செய்து பெற்ற வரத்தின் ஞாபகம் வந்தது.

சிவபிரான் தன் முன்னே தோன்றியபோது "பெருமானே! மூன்று உலகங்களிலும் உள்ளவர்கள் எனது ஆணையின்படி நடக்கவும், தேவரீரை வணங்குவோர்

அனைவரும் என்னைப் பணிந்து போற்றவும், உமது இடப்பாகம் பிரியாத பராசக்தி எனக்கு மகளாக அவதாரம் செய்யத் தேவரீர் பிராமண வடிவுடன் எழுந்தருளி அவளைத் திருமணம் புரிந்து எனக்கு மருமகனாகவும் வேண்டும்'' என்று வேண்ட அவரும் ''அவ்வண்ணமே ஆகுக'' என்று அருள்புரிந்து மறைந்ததும் தக்ஷப்பிரசாபதியின் மனக்கண்முன்னே தோன்றின.

மிகவும் மகிழ்ச்சியடைந்த தக்ஷப்பிரசாபதி குழந்தையை வேதவல்லியிடம் கொடுத்து, தன் மாளிகைக்கு எடுத்துப் போய் தாலாட்டி தாட்சாயணி என்று பெயர் சூட்டி அன்புடன் வளர்த்தான்.

– உதயன், 12.11.96



## சூரபன்மனும் தங்கை அசமுகியும்

சூரபன்மன் தங்கை அசமுகி. இவள் ஒருவனுக்கு மனைவி என்னும் முறை தவறி, அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பவற்றின் சாடையே இல்லரதவளாக வாழ்ந்தாள். அழகு நிறைந்த தேவபத்தினியரைத் தனது தமையன்மாருக்கு மனைவியராகும்படி நிர்ப்பந்தம் செய்தாள். முனிவர்கள் செய்யும் வேள்விகள் பூர்த்தியடையாமல் பின்னடைவு காண அவ்விடத்தில் அசிங்கமான காரியங்கள் செய்வாள். அவர்களைத் தன்னுடன் கூடிக்களிக்குமாறும் அழைப்பாள்.

கட்டழகுள்ள ஆடவரைத் தேடி இரவு பகல் பாராமல் அலைந்து திரிந்துவந்த அசமுகி, ஒரு தினம் தவசிரேட்டராகிய துர்வாச முனிவர் வாசம் செய்யும் வனத்துக்குச் சென்று அவருடைய தவத்தைக் கெடுக்க எண்ணம் கொண்டாள்.

துர்வாச முனிவர் தன் முன்நின்ற அவளை நோக்கி "பெண்ணே நீ யார்? இங்கு வந்த காரணம் என்ன?" என்று வினவினார். குறுநகை புரிந்த அசமுகி "ஓ!

குற்றம் அற்ற தபோதனரே! நான் உம்மைக் கூடி, வலிமை நிறைந்த புத்திரரைப் பெற்று அசுரர் குலத்தை மேலும் விருத்தி செய்ய விரும்பி வந்தேன். தயை கூர்ந்து எனது ஆசையை நிறைவேற்றும்'' என்று தயங்கி நின்றாள்.

தவசிரேட்டர் அவளது வேண்டுதல் முறையற்றது என்று எவ்வளவோ எடுத்துரைத்தார். அசமுகியோ எதனையும் கேட்டாள் இல்லை. தனது வார்த்தைகளால் முனிவரை அவரது நிலை தளர வைத்தாள்.

அதன் விளைவாக வில்வலன் வாதாவியாகிய இரண்டு ஆண்பிள்ளைகள் உதித்தனர்.

அவர்கள் இருவரும் துர்வாசரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினர். தமது தவம் அவமாகியதை நினைத்து மனம் வெம்பிய துர்வாசர் கண்களில் கோபக்கனல் பறக்க ''உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டார்.

அவர்கள் ''முனிவரே! தங்கள் வசமுள்ள தபோ பலத்தை எங்கள் இருவருக்கும் தாருங்கள்'' என்றனர். தனது துரதிர்ஷ்டத்தை உணர்ந்த துர்வாசர் ''குமாரர்களே, வெகுகாலம் வருந்திப் பெற்ற தவத்தின் பயனைத் தந்துவிட்டு வறியவனாக இசையேன். உங்களுக்கு வேண்டிய வேறு எதுவானாலும் கேளுங்கள், தருவேன்'' என்றார்.

வில்வலனும் வாதாவியும் அடங்காத கோபம் கொண்டு ''இந்தப் பிராமணனின் பிராணனை வாங்கி அவரது தவத்தின் பயனையும் பெறுவோம்'' என்று கூறியபடி துர்வாசரை நெருங்கினர்.

கடும் சினமடைந்த முனிவர் ''பாவிகாள்! இன்றுமுதல் குற்றம் அற்ற தவத்தருக்குத் துன்பங்களைச் செய்து உழல்வீர்களாக; ஒருநாள் தவ சிரேட்டராகிய அகத்திய முனிவரால் அழிந்து போகக் கடவீர்கள்'' என்று சாபமிட்டு அவ்விடத்தில் நின்றால் கொன்றுவிடுவார்கள் என்று எண்ணி மாய மந்திரம் ஒன்றைச் செபித்து மறைந்து போனார்.

தந்தையைக் காணாத வில்வலனும் வாதாவியும் தாயை வணங்கி விடை பெற்று வேறு ஒரு வனத்துக்குச் சென்று வெய்யில், மழை, பனி எதையும் பொருட்படுத்தாமல் பிரம தேவரை நோக்கி அனேக காலம் தவம் இருந்தனர்.

வீர மகேந்திர புரியில், தேவர்களுக்குத் துன்பம் செய்து கொடுங்கோல் ஆட்சி செய்த சூரபன்மனுக்கு, தேவர்களின் அரசனான இந்திரனின் ஞாபகம் வந்தது. இந்திரனைப் பிடித்து வரும்படி படைத்தலைவர்களையும், இந்திராணியை இழுத்து வருமாறு வீரம் நிறைந்த அசுரப் பெண்களையும் ஏவினான்.

இந்தச் செய்தியை ஒற்றர் மூலம் அறிந்த அசமுகி இந்திராணியைப் பிடித்துத் தமையனுக்கு மனைவியாக்கும் ஆசையுடன் அவளைத் தேடி மேரு மலைக்குச் சென்றாள்.

- உதயன், 13.11.96



# அகத்தியரிடம் பலிக்காத தந்திரம்

அசமுகியிடம் விடைபெற்றுச் சென்ற வில்வலனும் வாதாவியும் வேறு ஒரு வனத்தை அடைந்து பிரமதேவரைக் குறித்து நெடுங்காலம் தவம் இருந்தனர்.

அவர்களுடைய தவத்துக்கு இரங்கிப் பிரமதேவர் காட்சி கொடாமையால், மனமுடைந்த வில்வலன் வேறு ஒரு காரியத்தை மனதில் எண்ணி, தம்பியாகிய வாதாவியின் சிரத்தை வாளால் கொய்து உடலைப் பல துண்டங்களாக வெட்டி தசையையும் இரத்தத்தையும் சேர்த்து அவிப் பொருளாக ஓம குண்டத்தில் இட்டு, பிரம மந்திரங்களை அட்சர பின்னம் இன்றி உச்சரித்து, மன உறுதியுடன் பல நாள்கள் வேள்வி செய்தான்.

யாக அக்கினி உலகம் எங்கும் பரவி உயிர்களை வருத்துவதையும் அசமுகியின் மைந்தனது மன உறுதியையும் கண்டு இரங்கிய பிரமதேவர் அவன் எதிரில் அன்ன வாகனத்தின் மீது எழுந்தருளினார்.

தனது தம்பி மீண்டும் உயிர் பெற வேண்டும் என்று வரம் கேட்டுப் பெற்றான். அத்தோடு பிரமதேவனிடம் வேறு பல வரங்களையும் பெற்றான்.

அதன் பின்னர் வில்வலனும் வாதாவியும் வீரமகேந்திரபுரிக்குச் சென்று, சூரபன்மனை வணங்கி "ஐயனே! நாம் வேறுயாருமல்ல, தங்கள் தங்கையின் மைந்தர்கள். உங்களுக்கு மருமகர் ஆவோம். பிரமதேவரை வழிபட்டு முனிவர்களை வாட்டும் வரத்தையும் பெற்றுள்ளோம்" என்று தமது வரலாற்றைக் கூறினர்.

மகேந்திரபுரியில் அரச உபசாரம் பெற்றுச் சில காலம் தங்கியிருந்த வில்வலனும் வாதாவியும், தேச சஞ்சாரம் செய்து திரும்புவதாகச் சொல்லி மாமனிடம் செலவு பெற்றுக் குடகநாட்டை அண்மித்த ஒரு வனத்தை அடைந்தனர். அங்கு முக்கிய சந்தியில் ஆச்சிரமம் ஒன்றை அமைத்தனர்.

தம்பியாகிய வாதாவியோ முறுகி வளர்ந்த ஆட்டுக்கடாவின் உருக்கொண்டு மேய்வான். தவயோகி போல மாய வேடம் பூண்ட வில்வலன் அவ்வழியால் வரும் ரிஷிகளைப் பணிவுடன் எதிர்கொண்டழைத்து ஆச்சிரமத்தில் இளைப்பாறி அமுது உண்டு போகுமாறு வேண்டுவான்.

பின்னர் அறுசுவை உணவு தயாரித்து ஆட்டுக்கடாவாக நிற்கும் தம்பியை வெட்டிக் கறி சமைத்து, வாழை இலை பரப்பிப் போசனம் படைப்பான். முனிவர்கள் உணவைச் சாப்பிட்ட பின்பு ஓ! வாதாவி வா" என்று அழைப்பான். பிரமனிடம் பெற்ற வரத்தின் பயனாக வாதாவி உருவம் பெற்றுக் கூரிய கொம்பினால் முனிவரின் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளியே வருவான்.

உயிர் பிரிந்த உடலை இருவருமாகப் புசித்துப் பசியாறி, பழையபடி தம்பி ஆடாக மேய்ந்தும் தமையன் ரிஷியாக வேடம் பூண்டும் பல முனிவர்களை நாள்தோறும் கொலை செய்து உண்டு வாழ்ந்து வந்தனர்.

சிவபிரானின் கட்டளைப்படி பொதிய மலையை நோக்கிச் சென்று கொண்டிருந்த அகத்திய முனிவர் அந்த வழியே வருவதைக் கண்ட வில்வலன் அவரை எதிர்கொண்டழைத்து உபசார வார்த்தைகள் கூறி, வழக்கம் போல அறுசுவை உணவு படைத்தான்.

பின்னர் ''ஓ! வாதாவி வா'' என்று அழைத்ததும் ''இதோ வந்தேன்'' என்று வயிற்றில் இருந்து வாதாவி குரல் கொடுத்தான். இது அசுரர்கள் சூழ்ச்சி என்று உணர்ந்த குறுமுனியோ திருநீற்றைக் கையில் எடுத்து ''கறியாகப் புசிக்கப்பட்ட வாதாவி ஜீரணமாகுக'' என்று கூறி வயிற்றைத் தடவுதலும், வாதாவி ஜீரணமாகி மலமாகி விட்டான்.

கோபங் கொண்ட வில்வலன் முனிவரைக் கொல்ல ஒரு தண்டத்தை எடுத்ததும், அகத்தியர் தருப்பைப் புல்லைக் கிள்ளி பசுபத மந்திரத்தை உச்சரித்துச் செலுத்துதலும் அது வில்வலனைக் கொன்றது.

கோபம் தணிந்த குறுமுனி சிவபிரானைத் துதித்துக் கொண்டு தென்திசை நோக்கிச் சென்றார்.

– உதயன், 14.11.96



## கடவுளுக்கு வில்வ பூசை செய்த முசு

திருக்கைலாய மலைச்சாரலில் ஒரு பூஞ்சோலை. அதில் கொன்றை, குருக்கத்தி, புன்னை, பாதிரி, பாரிஜாதம், அரி சந்தனம், வில்வம் ஆகிய மரங்கள் பூத்துக் குலுங்கின. இளம் தென்றல் பொன்னை அன்ன மகரந்தத்தை அள்ளி வீசி நறுமணம் பரப்பியது.

வில்வ மரம் ஒன்றின் அடியில் அமர்ந்திருந்த சிவபிரான், சிவசக்திக்குச் சிவாகம நுட்பங்களை உபதேசித்துக் கொண்டிருந்தார். அந்த மரத்தின் கிளைகளில் பல முசுக் கூட்டங்கள் களித்தும், இளித்தும், தாவியும், ஓடியும் விளையாடின.

எந்தக் கூட்டத்திலும் சேராத ஒரு முசு (குரங்கு) முந்தைய பிறவிகளில் செய்த சிவ நல்வினையின் பயனாய், வில்வ இலைகளைப் பறித்துச் சொரிந்து கொண்டிருந்தது. வில்வ இலைகள், மரத்தின் அடியில் இருந்த இறைவன் இறைவியரின் சிரசுகளில் விழுந்து கொண்டிருந்தன. முசு, ஏதோ மகிழ்ச்சி மேலிட ஆரவாரம் செய்து ‘கீச் கீச்’ என்று குரல் எழுப்பி, பற்கள் விளங்க பலமாக நகைத்து வில்வ இலைகளைப் பறித்துப் பறித்து வீசிக் கொண்டிருந்தது.

முசுவின் விளையாட்டான செய்கையால் சிறிது சினம் கொண்ட சிவசக்தி மேலே பார்த்தார்.

அம்பிகையின் திருக் கண்ணோக்கம் முசுவின் மையலை ஒழித்துப் பேரறிவை நல்கியது. அஞ்ஞான இருள் அகன்று மெய்ஞ்ஞான ஒளி பெற்ற முசு, நடுக்கமடைந்து மரத்தை விட்டிறங்கி, அதிக வருத்தத்துடன் உடலை ஒடுக்கி, அம்மையையும் அப்பனையும் வலம் வந்து மும்முறை வணங்கியது.

பின்னர், ''தேவாதி தேவா! நல்லுணர்ச்சி சிறிதும் இல்லாத மிருக சாதியில் பிறந்த அடியேன் செய்த பிழையை மனதிற் கொள்ளாது மன்னித்தருளுக'' என்று இரந்து நின்றது.

சிவ மூர்த்தி முசுவைப் பார்த்து, ''கவியரசே! நீ கவலையடைய வேண்டாம். குற்றம் புரிந்தாரையன்றோ பொறுப்பது. நீ நமக்கு உவப்பாயிருக்கின்ற வில்வ இலைகளைத் தானே முடிமீது சொரிந்தாய். இதை நீ எமக்குப் பிரியத்துடன் செய்த அர்ச்சனையாக ஏற்றுக் கொண்டோம். உனது பிராரத்துவ வினை முற்றும் ஒழிந்து நீ பரிசுத்தனாகி விட்டாய். நீ மண்ணுலகில் மனுச்சக்கரவர்த்தி மரபில் (சூரிய குல மரபில்) உதித்து சகல செல்வங்களையும் அனுபவித்து அரசு செலுத்தி மீண்டும் கைலைக்கு வருவாயாக'' என்று கூறினார்.

சிவபிரான் கூறியவற்றைக் கேட்ட முசு மனம் பதற உடல் நடுங்க, கண்கள் நீரைப் பொழிய பாதங்களில் விழுந்து ''கிருபைக் கடலே! ஒப்பற்ற இக்கைலை மலையில் வாசம் செய்யும் பேற்றை நீக்கிப் பொய்யாகிய பூவுலகுக்குச்

செல்லும் அவல நிலையை என் மனம் சிறிதும் விரும்பவில்லை. அடியேன் இவ்விடமே தங்கி தங்கள் பாதங்களைச் சேவிக்கக் கருணை கூருங்கள்'' என்று வேண்டியது.

''உயிர்கள் கன்மங்களை நுகர்கின்ற இடம் பூவுலகமே ஆகும். ஆகையால் நல்லறிவையும், நம்மிடத்து அன்பையும் ஆதாரமாகக் கொண்டு சிலகாலம் அரசனாக வாழ்ந்து மீண்டும் கைலையை அடைவாய்'' - என்று சிவபிரான் அருள் புரிந்தார்.

முசு ''தேவாதி தேவா! அடியேன் தேவரீர் கட்டளைப்படி பூவுலகம் சென்றாலும், இந்த முகத்துடனேயே பிறந்து நல்ல நெறிகளை அனுட்டித்து, தங்களிடத்து நீங்காத பக்தியுடன் வாழும் வரத்தைச் சிறியேனுக்குத் தந்தருளும்'' என்று வேண்டிப் பெற்றுக் கொண்டது.

கைலை மலையை நீங்கிப் பூவுலகம் வந்த முசு, திலீபன் என்னும் அரசனின் பட்டத்துத் தேவியான மங்கலவதியின் (சூரிய குல அரசனான அரிச்சந்திரனின் சகோதரியின்) திருவயிற்றில், மானிட தேகம் தாங்கி உற்பவித்து, முசு முகத்துடன் பிறந்தது. அந்தக் குழந்தைக்கு முசுகுந்தன் என்று பெயர் இட்டனர்.

தக்க வயது வந்ததும் முசுகுந்தன் மாமன் மகளான (அரிச்சந்திரனின் மகளான) விசித்திரவதியை மணந்து, முசுகுந்தச் சக்கரவர்த்தி என்னும் பெயருடன் கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்தான்.

- உதயன், 15.11.96



## கார்த்திகைப் பெண்களும் கந்தவேளும்

சப்த (ஏழு) ரிஷிகள் எனப்படுபவர்கள் அத்திரி, மரீசி, ஆங்கிரசர், புலத்தியர், புலகர், வசிட்டர், கிரது ஆகியோர். இவர்களின் பத்தினிகளான சப்த மாதர் மகா பதிவிரதைகள். கார்த்திகைப் பெண்கள் என்று அழைக்கப்படுபவர்களும் இவர்களே. இந்தப் பதிவிரதைகளின் அழகில் மோகமுற்ற அக்கினி தேவன், இவர்களை அடைந்து இன்புற விரும்பினான்.

அக்கினி தேவனுடைய மனைவி "ஸ்வாஹை" இதை அறிந்தாள். பதிவிரதைகளின் கற்புக்கனல் தனது கணவனான அக்கினி தேவனையே தகிக்கும் சக்தி வாய்ந்தது என்பதை உணர்ந்து மிகவும் கலக்கமுற்றாள்.

எப்படியும் கணவனை ரிஷி பத்தினிகளின் சாபத்திலிருந்து காப்பாற்ற வேண்டும் எனத் தீர்மானித்து, சப்தரிஷிகளின் மனைவியர் போன்று, நாளுக்கு ஒரு பத்தினி உருவம் எடுத்து அக்கினி தேவனின் ஆவலைப் பூர்த்தி செய்து வந்தாள்.

இறுதியில் வசிட்ட முனிவரின் பத்தினியான அருந்ததியின் உருவம் எடுக்க முயன்று, ஸ்வாஹையால் அது முடியாமல் போயிற்று. தன் மனைவி ஸ்வாஹையின் தந்திரம் அறியாமல் அக்கினிதேவன் நேரே உண்மையான ரிஷிபத்தினி அருந்ததியைக் கண்டு அவளிடம் மையல் கொண்டு அதன் விளைவாய் அருந்ததியின் சாபத்திற்கு ஆளானான்.

இந்தச் செய்தியை அறிந்த மற்ற பத்தினிகளின் கணவர்களான ஆறு ரிஷிகளும் ஒன்று கூடி, 'அக்கினியின் மனைவியால் தங்கள் பத்தினிகளின் உருவம் எடுக்க முடிந்தது; ஆனால் அருந்ததியின் உருவம் மட்டும் எடுக்க முடியாமற் போயிற்று என்றால், தமது பத்தினிகள் அருந்ததியை விடப் பத்தினித் தன்மையிற் குறைந்தவர்கள் ஆயினர்' எனச் சிந்தித்து அந்தக் குறையைப் போக்குவதற்குத் தீர்மானித்தனர்.

ரிஷிகள், பத்தினிகளை அழைத்து ''நீங்கள் அறுவரும் சரவணப் பொய்கையில் சிவகுமாரராகத் தோன்றப் போகும் முருகனுக்குப் பாலூட்டி வளர்த்து அவருடைய திருமேனியின் ஸ்பரிசம் பட்டுப் புனிதராகி வாருங்கள்'' என்று கட்டளையிட்டுப் பூவுலகுக்குச் செல்லும் படி விடை கொடுத்தனர்.

கணவர்களைப் பிரிய மனம் இல்லாத ரிஷி பத்தினிகள் கவலையுடன் தயங்கினர். ''பத்தினிகளே! கவலையடையாதீர்கள். முருகனை அணைப்பதால் நீங்கள் புனிதராவீர்கள். அதுமட்டுமன்றி அருந்ததியை விட

மேலான புகழும் உங்களை வந்தடையும். சென்று வாருங்கள்'' என்றனர்.

திரிகாலமும் தெரிந்த ரிஷிகளின் வார்த்தைகளால் கவலையும் தயக்கமும் நீங்கிய கார்த்திகைப் பெண்கள் பூவுலகுக்கு வந்து சரவணப் பொய்கைக் கரையில் முருகனின் அவதாரத்தை எதிர்பார்த்துத் தவமிருந்தனர்.

சிவபிரானின் நெற்றிக் கண்களினின்றும் தோன்றிய ஆறு அக்கினிப் பொறிகளை வாயுவும், தேயுவும், கங்கையும் சேர்ந்து சரவணப் பொய்கையில் சேர்த்தனர். அவை சோதிப்பிழம்பே திருமேனியான ஒரு உருவாகி, ஆறு திருமுகங்களும் பன்னிருகரங்களும் கொண்ட குழந்தையாகித் தாமரை மலரில் தவழ்ந்தது.

மாதர் அறுவரும் ஆறுமுகம் கொண்டு ஒரு உருவாக விளங்கும் குழந்தையை யார் எடுப்பது என்று அறியாது துதி செய்து வணங்கி நின்றனர். தம்மை அடைந்து துதித்த கார்த்திகைப் பெண்களுக்கு அருள் புரியத் திருவுளங் கொண்ட அறுமுகவேள் ஒருவரே, ஆறுகுழந்தைகளாகப் பிரிந்து ஆறு தாமரை மலர்களில் வீற்றிருந்தார்.

தமது வேண்டுதலுக்கு இரங்கிய கந்தவேளின் கருணையை வியந்த கார்த்திகை மாதர் அறுவரும் ஆளுக்கு ஒரு குழந்தையை எடுத்துத் தழுவி, அன்புடன் அணைத்துப் பாலூட்டி வளர்த்துப் புனிதராயினர்.

ஒரு தினம் சரவணப் பொய்கைக்கு அம்பிகையுடன் எழுந்தருளிய சிவபிரான், கார்த்திகைப் பெண்களை நோக்கி ''நம் புதல்வனை நீவிர் அன்புடன் பாலூட்டி வளர்த்தமையினால், அவனுக்கு கார்த்திகேயன் என்னும் திருநாமம் வழங்குவதாகுக, உங்கள் தினமாகிய கார்த்திகையில் முருகன் திருவடிகளை அன்புடன் வழிபடுவோருக்கு, நாம் இகபர நலன்களை அருளுவோம்'' என்று வரம் கொடுத்து அவர்களை விண்ணுக்கு ஏகுமாறு விடை கொடுத்தருளினார்.

''கந்தன்தனை நீர் போற்றிய கடனால்
இவன் உங்கள் மைந்தன் எனும் பெயராகுக.
மகிழ்வால் எவரேனும் நுந்தம் பகலிடை
இன்னவன் நோன்றாள் வழிபடுவோர்
தந்தம் குறை முடித்ததே, பரந்தனை நல்குவம்''

என்றான்.

- உதயன், 16.11.96



## பிரமதேவரின் யாகமும் தேவர்கள் பெற்ற சாபமும்

படைப்புத் தொழில் புரியும் பிரமதேவரின் பத்துப் புதல்வர்களில் மூத்தவன் தக்கன். தந்தையிடம் வேதங்களை ஓதி உணர்ந்து, கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினான். சிவபிரானின் பெருமைகளை அறிந்து, அவரை நோக்கி ஆயிரம் ஆண்டுகள் அரிய பெரிய தவம் இயற்றினான்.

தக்கனின் தவத்துக்கு இரங்கிய சிவபெருமான் அவன் வேண்டியவாறு ''சகல உலகங்களையும் ஆட்சி செய்யும் ஆணையையும், உலக மாதாவாகிய உமாதேவி அவனுக்கு மகளாக அவதரித்து தன்னை (சிவனை) மணம் புரிந்து தக்கனுக்கு மருமகனாகும் பேற்றையும், தன்னை வணங்குவோர் அனைவரும் அவனை வணங்கவும்'' வரம் கொடுத்து மறைந்தருளினார்.

உமையம்மை தக்கனின் மகளாக அவதரித்து தாட்சாயணி என்னும் நாமத்துடன் வளர்ந்து மணப்பருவம்

எய்தினார். திருமண நாளன்று அம்பிகையின் கரத்தை சிவபிரான் கைகள் மீது வைத்துக் கன்னிகாதானம் செய்து கொடுத்தான் தக்கன். பிரமதேவர் திருமணச்சடங்குகளை இயற்றத் தொடங்கினார். இறைவன் திடீரென மறைந்தருளினார்.

சடங்குகள் பூர்த்தியடையுமுன்பே மறைந்த சிவபிரான் மேல் ஆறாத கோபம் கொண்டான் தக்கன். தாட்சாயணி மனங்கலங்கி மீண்டும் கன்னி மாடத்திற்குச் சென்று சிவபிரானை நோக்கி தவத்தை மேற்கொண்டார். சில நாள் கழிந்தபின், சிவபிரான் அந்தண வேடம் தாங்கி கன்னி மாடத்துக்கு எழுந்தருளி, தாட்சாயணிக்குத் தன் திருவுருவைக் காட்டி, விடைமீது இருத்திக் கைலையங்கிரிக்குக் கொண்டு சென்றார்.

தாய் தந்தையர் அறியாமல் பெண்ணைக் கவர்ந்து சென்ற சிவபிரானைத் தக்கன் பலவாறு நிந்தனை செய்தான். நன்றிமறந்தான். 'சிவபிரான் தனது மருமகன் என்பதனால் தன் கட்டுபாடுக்கு உட்பட்டவன்' என எண்ணித் தக்கன் செருக்குற்றான். தேவரையும் மூவரையும் அழைத்து "இன்று முதல் நீவிர் சிவனை வணங்குதல் கூடாது; என்னையே வணங்க வேண்டும்" என்று ஆணையிட்டான். செய்வதறியாத தேவர்கள் தக்கனின் ஆணைக்கு அடங்கி ஒடுங்கினர். சிவபிரானை மறந்தனர்.

தக்கனின் ஆணையால் துயரமடைந்த பிரமதேவர் ஒரு யாகம் செய்தார். யாகசாலையில் சிவபெருமானின் பிரதிநிதியாக நந்தி நடுநாயகமாக வீற்றிருந்து அவிப்பாகம்

ஏற்பதை வெறுத்த தக்கன் சிவபிரானைப் பலவாறு நிந்தனை செய்து, அவிப் பாகத்தைச் சிவனுக்குக் கொடுக்க வேண்டாம் என்று தந்தையாகிய பிரமனைத் தடுத்தான்.

தக்கனின் சிவ நிந்தையைத் தாங்கொணாத நந்தியெம்பெருமான் சீற்றமடைந்து, தக்கனை நோக்கி, "இரக்கம் என்பது இல்லாத கெட்ட மனமுடைய பேயனே! உன்னை ஆதரிக்கும் இந்தக் கடவுளர் ஒருநாள் மாண்டு மீண்டும் உயிர் பெற்று எழுந்து அதன் தொடர்பாக அளவில்லாத யுக காலம் சூரபன்மன் என்னும் அசுரனால் துன்பமடைவார்களாக" எனச் சாபமிட்டுக் கைலையங்கிரிக்கு ஏகினார்.

அவ்வாறே சிலநாள் கழித்து சிவனை மதியாது தக்கன் செய்த யாகத்தில் பங்கு கொண்ட தேவர்கள் அனைவரும் வீரபத்திரக் கடவுளால் சங்காரம் செய்யப்பட்டு சிவபிரானின் திருவருளால் உயிர் பெற்றனர். பின்னர் சூரபன்மனுடைய ஆட்சியில் நூற்றெட்டு யுகங்கள் துன்பத்தை அனுபவித்தார்க்ள்.

- உதயன், 12.10.90



## மன்மதனின் தியாகம்

கைலையங்கிரியில் வீற்றிருக்குங்கால், அம்பிகை தான் தக்கனின் மகள் என்ற நிலை நீங்க அருள வேண்டுமெனச் சிவபிரானிடம் பணிந்தார். நெடுங்காலம் தவம் செய்து வந்த இமவான் என்ற அரசனுக்கு மகளாகப் பிறக்க சிவபெருமான் அம்பிகைக்குத் திருவருள் செய்தார்.

பத்மையில் ஆயிரத்தெட்டு இதழ் தாமரை மலர் ஒன்றில் பராசக்தி கண்ணையும் கருத்தையும் கவரும் கட்டழகுடைய குழந்தையாக, மரகதமேனியுடன் திருவவதாரம் செய்திருந்தார். குழந்தையைக் கண்ட பர்வதராஜன் (இமவான்) ஆனந்தக் கண்ணீர் சொரிந்து மகிழ்ச்சியுடன் அதை எடுத்துச் சென்று மனைவி மேனையிடம் கொடுத்தான். பர்வத ராஜனுக்கு மகளாக வந்ததனால் குழந்தைக்கு பார்வதி என்று பெயர் சூட்டி அன்புடன் வளர்த்தனர்.

பார்வதிக்கு ஐந்து வயது நிறைவடைந்தது. சிவபிரானின் ஆணையை நினைத்தது குழந்தை, இமவான் தவச் சாலை அமைத்துக் கொடுக்க பாங்கியர் பணிபுரிய சிவபிரானை நோக்கித் தவத்தை மேற்கொண்டார் பார்வதி.

பார்வதி தவம் செய்து கொண்டிருந்தபோது அசுரர் தலைவனான சூரபன்மன் ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் ஆட்சி செலுத்தி, அமராவதியை அழித்து தேவர்களை வருத்தி ஏனையோர்க்கும் கடும் கொடுமை செய்து கொண்டிருந்தான். சிவபிரான் சனகாதி முனிவர்களுக்குச் சின்முத்திரை கூட்டி, யோகத்தின் செயல்முறை காட்டி மோன நிலையில் வீற்றிருந்தார்.

இறைவன் மோன நிலையில் இருந்த ஒரு கணம், பிரமன் முதலாய தேவர்களுக்கு அனேக யுகங்கள் கழிந்தன. சிவ மூர்த்தியின் தவநிலையால் விண்ணவரும் மண்ணவரும் காம இச்சையும் அறவே நீக்கி முற்றும் துறந்த முனிவர் போலாயினர். உலகங்கள் இயக்கத்தை இழந்தன.

சிவபிரானின் யோகநிலையைக் கலைத்து தவநெறியில் நிற்கும் பார்வதி தேவியை மணந்து கொள்ளச் செய்தால்தான் தங்கள் துன்பங்கள் நீங்க முருகவேள் அவதாரம் நிகழும் என்று தெரிந்தனர் தேவர்கள்.

பிரமதேவர் தனது தம்பி மன்மதனை அழைத்து "நீ போய் சிவபெருமான் மீது மலர்க்கணை தொடுத்து யோகநிலையைக் கலைத்துப் பார்வதி தேவியை சிவன் மணந்துகொள்ளும்படி செய்வாயாக" என உத்தரவிட்டார்.

பிரமதேவரின் கட்டளையைக் கேட்ட மன்மதன் பதறிப் போனான். "ஐயனே! சிவபிரானின் கையில் நெருப்பு, சிரித்துப் புரம் எரித்த அவரது வாயில் நெருப்பு, கண்ணிலும் அக்கினி. அவரது திருமேனி அக்கினியின்

வடிவம், தழலே உருவான சங்கரன்மீது மலர்க்கணை தொடுத்து உயிருடன் மீள முடியுமா? 'அக்கினிமலை'யுடன் பொருதும் இந்தப் பணியை என்னிடம் தராதீர்கள்'' என்று கவலையுடன் கூறினான்.

''மன்மதா! தேவர்களின் நன்மைக்காகத்தான் இந்தப் பணியை உன்னிடம் தந்தேன். நீ போய் சிவபிரானால் உயிரிழந்தால், அது தேவர்களுக்காக நீ செய்யும் பெரிய தியாகமல்லவா? துன்பத்தில் ஆழ்ந்து கிடப்பவர்களுக்கு, உதவுவது பெரிய தர்மம் அல்லவா? போய் வா'' என மீண்டும் கூறினார் பிரம தேவர்.

'இனியும் மறுத்தால் தம்பி என்றும் கருதாமல், பிரமதேவர் சாபமிடுவார். அவரின் சாபத்தால் அழிவதை விட சிவபிரானால் அழிந்தால் உய்வதற்கு வழி உண்டு' என்று சிந்தித்த மன்மதன் கைலையங்கிரியை நோக்கிப் புறப்பட்டான்.

மன்மதன் திருக்கோவிலுள் சென்று, மோனத் திருக்கோலத்தில் வீற்றிருக்கும் சிவபிரான் மீது குறிவைத்து, ஐந்து மலர்க் கணைகளை ஏவினான். கணைகள் தாக்கிய போது, இறைவன் விழி திறந்து மன்மதனை நோக்கலும், நெருப்புப் பொதிந்திருந்த நெற்றிக்கண் திடீரென மன்மதனைச் சுட்டது. அவன் சாம்பலாகி விட்டான்! அதனால் உண்டாகிய புகை கைலைமலை முழுவதையும் சூழ்ந்தது.

- உதயன், 20.10.90



## முருகவேளின் அவதாரம்

சூரபன்மன் தம்பியருடன் சிவபிரானை நோக்கி பதினாயிரம் ஆண்டுகள் வைராக்கியத்துடன் வேள்வி செய்தான். அரிய பெரிய தவத்தின் பயனாக பிருதிவியிலுள்ள ஆயிரங்கோடி அண்டங்களுள், ஆயிரத்தெட்டு அண்டங்களை, நூற்றெட்டு யுகம் ஆட்சி செய்யும் ஆணையையும், என்றும் அழியாத வச்சிர தேகத்தையும், சிறந்த படைக்கலங்களையும், அளவற்ற செல்வத்தையும், அண்டங்கள் அனைத்தையும் நொடியில் வலம் வரும் வலிமை கொண்ட இந்திரஞாலம் என்னும் தேரையும் சிவபிரானிடம் பெற்றான்.

ஆட்சியையும் அதிகாரத்தையும் இறைவனிடம் பெற்ற சூரபன்மனை ஆணவமும் மாயையும் ஆட்சி செய்யத் தொடங்கின! வானில் சஞ்சரித்த தேவர்களை ஏவலர்களாக்கி, அசுரர்களுக்கு மீன்பிடித்துக் கொடுக்குமாறு பணித்தான். நாராயணக் கடவுளும் பிரமனும் அவனுடைய ஆணைக்குப் பணிந்து நடந்தனர்.

சூரபன்மனின் கொடுமைக்கு அஞ்சிய இந்திரன், இந்திராணியோடும் ஏனைய தேவர்களோடும் மேருமலை சென்றான். சூரபன்மனின் மகன் பானுகோபன்

பொன்னுலகமாகிய அமராவதியை எரித்து, எதிர்த்த இந்திரனின் மகன் சயந்தனையும் தேவர்களையும் சிறைபிடித்துச் சென்ற செய்தியைக் கேட்டு இந்திரன் மனம் வருந்தினான். துன்பத்தைத் தாங்கொணாத இந்திரன் மேருமலையின் ஒருபுறத்து இருந்து சிவபிரானை நோக்கித் தவம் செய்தான்.

இந்திரன்மேல் கருணை கொண்ட சிவமூர்த்தி அவன் முன்தோன்றி "தேவராஜனே, நம்மை நிந்தித்து தக்கன் யாகம் செய்தபோது, அதில் நீயும் ஏனைய தேவர்களும் பங்கு கொண்டதால், சூரபத்மனால் இப்போது துன்பம் அடைகிறீர்கள். வருந்தாதே, சூராதி அவுணரை அழித்து உங்கள் துன்பத்தைப் போக்கவல்ல புதல்வனை விரைவில் தருவோம்" எனக்கூறி மறைந்தருளினார்.

சிவபிரானின் நெற்றிக்கண்கள் ஆறிலும் இருந்து புறப்பட்ட அக்கினிப் பொறிகள் ஆறையும் இறைவனின் கட்டளைப்படி, வாயுதேவனும், அக்கினிதேவனும், கங்கையும் சரவணப் பொய்கையில் சேர்த்தனர். ஆறு பொறிகளும், சோதிப்பிழம்பே ஒரு திருமேனியாகவும் ஆறு திருமுகங்களும், பன்னிரு திருக்கரங்களும் கொண்டு உலகம் உய்யும் பொருட்டு முருகக்கடவுளாகத் திரு அவதாரம் செய்தருளின.

**அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்**
**பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பது ஓர் மேனியாகக்**
**கருணை கூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே**
**ஒருதிரு முருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகம் உய்ய**

- உதயன், 21.10.1990



## கனவில் தோன்றிய கந்தவேள்

சூரபன்மனின் கொடுமைக்கு அஞ்சிய இந்திரன், இந்திராணியோடு மேருமலை சென்று, ஒரு புறத்தே சிவபிரானை நோக்கித் தவம் செய்து கொண்டிருந்தபோது; பானுகோபன் அமராவதியை அழித்துச் சுடுகாடாக்கி விட்டு இந்திர குமாரனான சயந்தனையும் ஏனைய தேவர்களையும் சிறையிட்டான்.

ஒரு தினம் துன்பத்தின் சுமை தாங்க முடியாமல் சயந்தன் மூர்ச்சையடைந்துவிட்டான். கண்கள் மூடிக்கொண்டன. சயந்தன் கண்மூடியிருந்தபோது, அவனுக்குத் திருவருள் புரிய அதுவே தக்க தருணம் எனக் கொண்டார் கந்தவேள். பச்சை மயிலேறி ஆறுமுகக் கோலத்தோடு அவனுடைய கனவிலே காட்சி தந்தார்!

சயந்தன் கந்தவேளைக் கண்டதே இல்லை! அவன் சிறைப்பட்ட பின்னர்தானே முருகன் திருவவதாரம் நிகழ்ந்தது. ஆறுமுகமும், பன்னிரு கைகளுமுடைய

இத்தெய்வம் யாரென யோசித்தான். ''வந்திருப்பவர் நாராயணர் அல்லர்; அவரது மேனியின் நிறம் நீலம். இவரோ அந்தி வான வண்ணர். பிரமனும் அல்லர்; பிரமனுக்கு நாலுமுகம்; இவரோ ஆறுமுகத்துடன் விளங்குகிறார். ஆனாலும் இவர் அவர்களுக்கெல்லாம் மேலானவர்'' எனத் தெளிந்தான்.

கூப்பிய கையனாய் ''பெருமானே! அடியேன் படுகின்ற துன்பத்தை நீக்குதற் பொருட்டு, பெருங்கருணையால் வந்து காட்சி தந்திருக்கிறீர். நீர் திருமாலும் அன்று, பிரமனும் அன்று, அவர்களுக்கு மேலான சிவபெருமானும் அன்று. தேவரீர் யார்?'' எனக் கந்தவேளையே வினவினான் சயந்தன்.

புன்முறுவல் பூத்த கந்தவேள் -

''சயந்தா! நான் சிவகுமாரன். உனது தந்தை தமது குறையையும் உங்கள் குறையையும் எம்மிடம் முறையிட்டுக் கொண்டார். அந்த வேண்டுகோளின் படி உன்னையும் உன்னுடன் சிறையில் வாடும் தேவர்களையும் மீட்பதற்காக எண்ணற்ற படைகளுடன் வந்து திருச்செந்தூரில் வீற்றிருக்கின்றோம்.

''பிரமதேவரும், நாராயணரும் உனது தந்தையும் ஏனைய தேவர்களும் எம்முடன் இருக்கின்றார்கள். சூரபன்மனிடம் வீரவாகு என்ற தூதரை அனுப்பியிருக்கிறோம். அவன் சென்று நீதி நெறிகளைச் சொல்லுவான்.

"ஆனால் அவற்றையெல்லாம் சூரபன்மன் கேட்கமாட்டான் என்பதும் எமக்குத் தெரியும்; நாம் நாளையே வீரமகேந்திராபுரிக்கு வருவோம். போர் மூளும். சூராதி அவுணர்கள் அனைவரும் அழிவர். தேவர்களுக்கு எல்லா நலன்களும் விளையும். சயந்தா! நாம் அனுப்பியுள்ள தூதன் உன்னையும் தேவர்களையும் சந்தித்து ஆறுதல் கூறுவான்" - என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார்.

சயந்தனுக்கு ஆறுதல் கூறியது போலவே ஆறுமுகவள்ளல் மற்றைய தேவர்களின் கனவிலும் தோன்றி ஆறுதல் கூறி மறைந்தார். கனவு நீங்கி நனவு வரப் பெற்றதும் தேவர்கள் கனவில் கண்ட கந்தவேளின் கருணையை நினைந்து ஆனந்தக் கடலில் மூழ்கினர்.

- வீரகேசரி, 08.11.94



## சண்முக தரிசனம்

திருச்செந்தூரில் தேவாதியர்களின் துயர்களைத் திருச்செவிமடுத்த முருகவேள், அவர்களுக்கு அபயமளித்தார். இந்திரனை நோக்கி, "தேவராஜனே! வருந்தாதே. உனது மகன் சயந்தனையும் தேவர்களையும் சிறைமீட்டு அமராவதி ஆட்சியை விரைவில் உனக்குத் தருவோம்" என வாக்களித்தார்.

போருக்குப் புறப்படுமுன் சூரபன்மனுடைய தவறுகளை எடுத்துச் சொல்லி அவனை நல்வழிப்படுத்த திருவுளங்கொண்ட கந்தவேள், வீரவாகுத் தேவரை விளித்து "நீ வீரமகேந்திரபுரிக்குச் சென்று சூரபன்மனை அணுகி சயந்தனையும் தேவர்களையும் சிறையில் இருந்து விடுவித்து நல்வாழ்வு வாழுமாறு அறநெறியை எடுத்துக் கூறு. அவன் செவிசாய்க்காவிட்டால் அவனையும் அவனது சுற்றத்தையும் அழிக்கப் படைகளுடன் யாம் வருவோம் என்று தெரிவித்து மீள்க" எனக் கட்டளையிட்டார்.

தூதுவனாகச் சென்ற வீரவாகுத் தேவர் சூரபன்மனிடம் "தேவர்களும் அசுரர்களும் காசிபருடைய

புதல்வர்கள். உனது தாயாகிய மாயைக்குப் பிறந்தவர்கள் அசுரர்கள். தேவர்கள் உனது மூத்த சகோதரர்கள் எனவே சயந்தனையும் தேவர்களையும் விடுதலை செய்து முருகப்பெருமானின் திருவருளைப் பெற்று நெடுங்காலம் வாழ்வாயாக, தவறினால் உன்னையும் உன் குலத்தையும் அழித்து விடுவார்'' என நீதி நெறிகளை இதமாக எடுத்துச் சொன்னார்.

கண்களில் கனல் பறக்க ''நீ தூதுவனாக இருப்பதால் உன்னைக் கொல்லாமல் விட்டுவிடுகிறேன் தேவர்களை ஒருகாலும் விடுதலை செய்ய மாட்டேன். பாலகனின் பேச்சைக் கேட்டுத் தூதுவனாக வந்த உன்னை ஒரு பேதை எனக்கருதி உனக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தேன். பிழைத்துப் போ. ஓடு'' என்று ஆர்ப்பரித்தான் சூரபன்மன்.

வீரவாகு தேவர் மீண்டும் வந்து நடந்தவற்றை முருகப் பெருமானிடம் கூறினார்.

போர் தொடர்ந்தது.

இரண்டாம் நாள் போரில் தான் பாலகன் என்று எண்ணி நகையாடிய முருக வேளை முதன் முதலாகச் சந்திக்கிறான் சூரபன்மன். பயங்கரமும் பகைமையும் தலை விரித்தாடும் யுத்த பூமியில் கருணை பொழியும் முகத்துடன் காட்சி தந்தார் கந்தவேள்!

தாமரை மலர் மலர்ந்தது போன்ற ஆறு திருமுகங்களையும் பன்னிருகைகளையும், பன்னிரு

குண்டலங்களையும், செம்பொன்னால் ஆன திருமுடிகளையும், அழகிய திரு மார்பினையும், பன்னிருகரங்களில் விளங்குகின்ற படைக்கலங்களையும், தண்டையும் சிலம்பும் ஒலிக்கின்ற திருவடிகளையும் சூரபன்மன் கண்டான்.

**முண்டக மலர்ந்ததன்ன மூவிரு முகமுங் கண்ணும்**
**குண்டல நிறையுஞ் செம்பொன் மவுலியுங் கோலமார்பும்**
**எண்டரு கரம் ஈராறும் இலங்கெழிற் படைகள் யாவும்**
**தண்டையும்சிலம்பும் ஆர்க்கும் சரணமும் தெரியக்கண்டான்**

- உதயன், 23.10.1990

## சேவலும் மயிலும்



சூரன் பதுமன் என்னும் இரண்டு பூதர்கள் விண்ணில் உலாவும் கருடன் முதலாய ஊர்திகளுக்கு இடையூறு செய்தமையால், சுப்பிரமணிய சுவாமியினால் அசுரராகப் பிறக்குமாறு சபிக்கப் பெற்றனர். சாபம் பெற்ற இருவரும் (சூரன், பதுமன்) ஒரு உடல் கொண்ட சூரபன்மனாகப் பிறந்தனர். இந்த நிகழ்ச்சியை "இருபேர் உருவின் ஒரு பேர் யாக்கை" என நக்கீரதேவர் திருமுருகாற்றுப்படையின், திருப்பரங்குன்றப் பாடலில் விபரித்துள்ளார்.

சூரபன்மன் காசிப முனிவருக்கு மாயையின் வயிற்றிற் பிறந்தான். மாயையின் உபதேசப்படி, சிவபிரானை நோக்கிப் பதினாயிரம் ஆண்டுகள் வேள்வி செய்து, பிருதுவியிலுள்ள ஆயிரங்கோடி அண்டங்களுள் ஆயிரம் அண்டங்களை நூற்றெட்டு யுகம் ஆளும் ஆணையையும், என்றும் அழியாத வலிமை படைத்த தேகத்தையும், அளவற்ற செல்வங்களையும் வரமாகப் பெற்றான். ஆணவ சொரூபியான சூரபன்மன் தேவர்களை ஏவலர்களாக்கியும், சிறையிலிட்டும் துன்புறுத்தினான்.

சூரபன்மனின் கொடுமையைத் தாங்கொணாத அரி பிரமேந்திராதி தேவர்கள் தங்கள் இடுக்கண்ணைக் களைந்து, காத்தருளுமாறு சிவபிரானை வேண்டினர். "சூரபன்மனை அழிக்கவல்ல ஒரு புதல்வனை விரைவில் தந்தருளுவோம். வருந்தாதீர்கள்" என அபயமளித்தார் சிவபிரான்.

ஆதியில் சூரனுக்கும் பதுமனுக்கும் சாபம் கொடுத்த சுப்பிரமணிய சுவாமியையே. சூரசம்ஹாரத்துக்காக, முருகனாகத் தோற்றுவிக்கத் திருவுளங் கொண்டார் சிவபிரான். (சாபமிட்டவரே சாப நிவர்த்தியையும் அருள வேண்டும் என்பது நியதி)

நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு அக்கினிப் பொறிகளை உற்பவித்து, அவற்றை சரவணப் பொய்கையில் சேர்ப்பித்து, உலகம் உய்யும் வண்ணம் கந்தவேளாக உதிக்கச் செய்தார்.

முருகவேளைப் போர்க்களத்தில் சந்தித்த சூரபன்மன் "பால் மணம் மாறாத பாலகன் என்னை வெல்ல வல்லவனா?" எனச் சிரித்து எண்ணிறந்த மாயங்களைச் செய்து போர் புரிந்தான். இறுதியில் ஆறுமுகப் பெருமான் ஏவிய வேற்படை ஆயிரம் கோடி சூரியர் போன்று, ஒளியைப் பரப்பி தீப்பிழம்பை உமிழ்ந்து, சூரபன்மனுடைய மாயங்கள் அனைத்தையும் அழித்தது. தனது மாயைகள் அனைத்தையும் அழித்துவிட்டு வேற்படை எதிரே வருவதைக் கண்ட சூரபன்மன் சமுத்திர நடுவே சென்று விண்ணளாவிய ஒரு மாமரமாக உருவெடுத்துக் கிளைகளை அசைத்து ஆரவாரம் செய்தான்!

வேற்படை சீற்றத்துடன் மிக வேகமாகச் சென்று ஆணவத்துடன் ஆரவாரம் செய்த சூரபன்மனாகிய மாமரத்தை இரு கூறாக்கியது. கூறின் ஒரு பாதி சேவலாகவும், மற்றொருபாதி மயிலாகவும் மாறி மீண்டும் வலிமையுடன் போர் புரிய வந்ததைக் கண்ணுற்ற கந்தவேள், சூரனையும் பதுமனையும் ஆட்கொள்ளத் திருவுளங் கொண்டு அருள் பொழிகின்ற திருக்கண்ணோக்கம் செய்தலும், அவை பகைமையும் ஆணவமும் நீங்கி தெளிந்த சிந்தையுடன் சரவணபவனைச் சரணடைந்தன! முருகவேள் சேவலைத் தனது கொடியாகவும், மயிலை வாகனமாகவும் ஏற்றுத் திருவருள் புரிந்தார்.

சூரபன்மனின் மார்பைத் துளைத்த நெடுவேல் அனல் வடிவமும், வெப்பமும் மாற்றத் தேவ கங்கையில் மூழ்கிப் புனிதமடைந்து மீண்டும் செவ்வேளின் திருக்கரத்தில் அமர்ந்தது.

**மூவிருமுகங்கள் போற்றி முகம் பொழி கருணை போற்றி**
**ஏவருந் துதிக்க நின்ற ஈராறு தோள் போற்றி காஞ்சி**
**மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றியன்னான்**
**சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி**

- உதயன், 24.10.1990



# தேவர்கள் முன் பாலனாக தோன்றி திருவிளையாடல் புரிந்த பெருமான்

சிவபிரானுக்கும், பார்வதி தேவியாருக்கும் இடையிலே எழுந்தருளியிருந்த முருகக் கடவுள் பற்பல திருவிளையாடல்களைச் செய்யத் திருவுளங்கொண்டார். அவருடைய கழலிணைகளிலே தண்டையும் சிலம்புச் சதங்கையும் ஒலித்தன. திருவரையிலே கிண்கிணி இசைத்து இனிய ஓசை பதினான்கு உலகங்களிலும் பரவியது.

கந்தவேள், மன்றங்களிலும் குன்றங்களிலும் உலாவினார்; சோலைகள், ஆறுகள், கடல்கள், தடாகங்கள் தோறும் உலாவினார். சிவத்தலங்கள், வடமொழி, தென்மொழி கற்கும் கழகங்கள் தோறும் உலாவினார். மண்ணிலும், விண்ணிலும், இந்திரலோகம், சத்தியலோகம் முதலாய ஏனைய உலகங்களிலும், அண்டங்கள் புவனங்களிலும் உலாவினார்.

ஆறுமுகம் கொண்டு பாலராய்த் திரிவார். ஒரு முகங்கொண்டு ஒருவராய் வேதியராய், முனிவராய், வீரராய் திருவடிகளால் நடந்து சென்றார். யானை, குதிரை, தேர், யாளி ஆகியவற்றின் மீதும் சென்றார். மலைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் கொண்டு வந்து சேர்ப்பார். பின்னர் அம் மலைகளைத் தலைகீழாகப் பூமியில் நிறுத்துவார். ஏழு கடல்களையும் ஒன்றாக்குவார். கங்கை நதியை ஓடவிடாமல் அடைப்பார். அட்ட நாகங்களையும் பிடித்து, மேருமலை முதலாய பெரிய மலைகளில் பூட்டி, தேராக உருட்டிச் செல்வார். திக்கு யானைகளை ஒன்றோடொன்று போர் புரியுமாறு செய்வார். சந்திரனைச் சூரிய மண்டலத்திலும் சூரியனைச் சந்திர மண்டலத்திலும் சேர்ப்பார்.

கந்தக் கடவுளின் திருவிளையாடலைக் கண்ணுற்று வியந்த உமையம்மை சிவபிரானை வணங்கி, ''பெருமானே! நமது குமரன் குழந்தைப் பருவத்தே செய்யும் திருவிளையாடல்கள் அதி அற்புதமாக இருக்கின்றன! இதனை எண்ணிப்பார்க்கின்றபோது மாயையில் அவன் தங்களுக்கு ஒப்பானவன் எனக் கருதுகிறேன். அவன் பெருமைகளைத் திருவாய் மலர்ந்தருள வேண்டும்'' என்று வேண்டினார்.

''உமையே! நமக்கு ஆறுதிருமுகங்கள்; அவையே கந்தனின் ஆறுமுகங்கள். ''ஓம்'' என்ற குடிலையுடன் (பிரணவத்துடன்) நமது மந்திரம் ஆறு எழுத்து (ஓம் நமசிவாய. உனது மகனுடைய மந்திரம் ஆறு எழுத்து

(சரவணபவ). கந்தன் நமது சக்தியே. அவனுக்கும் நமக்கும் வேற்றுமை இல்லை.

"பார்வதி; யான் நிட்களன் (உருவம் இல்லாதவன்) நீ அழியாத சக்தி. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து தொழிலுக்கும் அதிபனாக, ஐந்து முகமுடைய சதாசிவனாக யாம் இருக்கின்றோம். நீ பலவாறாக (பல சக்தியாக) இருப்பினும் ஒரு முகமுடைய புவனேஸ்வரி. குமரன் உனது சொரூபத்தையும், எமது சொரூபத்தையும் ஒருங்கே கொண்டுள்ளான். ஐந்தொழில்களை அவன் விளையாட்டாகவே புரிகிறான். அவனுடைய பெருமைகளை உனக்குச் சுருக்கமாகவே சொன்னோம். விரித்துக் கூறின் பலகோடி ஆண்டுகள் ஆகும்" என்றார் சிவமூர்த்தி.

திருவிளையாடல் புரியும் பெருமானின் திருவுருவத்தைக் காணாது அதிர்ச்சியூட்டும் பெரும் செயல்களை மட்டுமே உணர்ந்த தேவர்கள், சூரபன்மனின் ஆட்சிக்குப் பயந்து மேரு மலையில் மறைந்து வாழும் தேவேந்திரனிடம் சென்று அதிசயங்களைத் தெரிவித்தனர். அந்தச் சமயம் அவர்களுடைய கண்களுக்குத் தெரியும் வண்ணம் ஒரு முகத்துடன் பாலராகத் தோன்றினார் சண்முகர்.

மண்ணுலகத்தையும், விண்ணுலகத்தையும் மாறுபடச் செய்தவன் இவனே. அசுரர்களைக் காட்டிலும் ஆற்றல் மிகுந்த இவனைப் 'பாலகன்' என்று கருதாது போர் செய்து வெல்வோம் என்று தீர்மானித்த இந்திரன்

ஐராவதத்தின் மீது ஏறி முருகக் கடவுளுடன் போர் செய்யத் தொடங்கினான். இந்திரன் ஏவிய ஆயுதங்கள் முருகன் மேல் மலர்கள் போல் விழுந்தன. இந்திரன் வச்சிராயுதத்தை ஏவினான். அது பெருமான் முன் சென்று பொடியாயிற்று. இறுதியில் கந்தப் பெருமானின் கணைகள் பட்டு இந்திரன், வருணன், இயமன், அக்கினி, சந்திரன், வாயு ஆகியோர் வீழ்ந்து மடிந்தனர்.

இந்த நிகழ்ச்சிகளைக் கேள்வியுற்ற தேவகுரு (வியாழபகவான்) போர்க்களத்துக்கு விரைந்து சென்று மாண்டுகிடந்த தேவர்களைக் கண்டு கவலை கொண்டார். அற்புதத் திருவிளையாடல்களைப் புரிந்துகொண்டிருந்த கந்தவேளின் திருவடிகளில் விழுந்து, ''எம்பெருமானே! சூராதி அவுணர்களின் தொல்லையால் பெரும் துயர் கொண்ட இந்திரன் தனது பொன்னுலகத்தையும் விட்டு இம் மேரு மலையில் மறைந்திருக்கிறான். தேவரீரது கருணையால் அசுரர்களை அழிக்க எண்ணியிருந்தான். அதற்காகப் பலகாலம் தவம் செய்து வாடினான்.

''தேவரீருக்குத் தொண்டு செய்ய விரும்பிய இந்திரன் தாங்கள் திருவிளையாடல் புரிந்ததை அறிந்திலன். அவனுக்குப் பக்கபலமாக நின்ற தேவர்களும் தங்களை எதிர்த்து மடிந்தனர்; அவர்கள் அறியாமல் செய்த பிழையைப் பொறுத்தருளி அனைவரும் அறிவு பெற்று எழுமாறு திருவருள் செய்ய வேண்டும்'' என்று இறைஞ்சி நின்றார்.

திருமுறுவல் செய்த முருகவேள் இந்திரன் முதலாய தேவர்கள் ஆயுதங்களுடன் எழும் வண்ணம் திருவுளங்

கொண்டார். உடனே தேவர்கள் யாவரும் உயிர் பெற்று மெய்யறிவுடன் எழுந்தனர். பாலகனை முருகன் என்று தெளிந்து மனமுருகினர். தாங்கள் செய்த பிழையை உணர்ந்து உள்ளம் கலங்கி முருகன் பாதங்களில் வீழ்ந்து பணிந்து துதிப்பாராயினர்.

**கந்த நம; ஐந்துமுகர் தந்த முருகேச நம; கங்கை உமைதன்**
**மைந்த நம; பன்னிரு புயத்தநம; நீபமலர்மாலை புனையும்**
**தந்தைநம! ஆறுமுக ஆதிநம; சோதிநமா தற்பரமதம்;**
**எந்தைநம; என்றும் இளையோய்நம; குமரநம**

தொழுது நின்ற தேவர்களுக்குக் கந்தவேள் திருவருள் செய்து அச்சமும் துன்பமும் நீக்கினார்.

23.10.98

# யாகம் குழம்பியதால் அவதியுற்ற தேவர் துயர் தீர்த்த முருகப் பெருமான்



சிவபிரானைத் திருப்திப்படுத்த விருப்பம் கொண்ட நாரதமுனிவர் ஒரு வேள்வி செய்ய எண்ணினார். அரி, அயன், இந்திரன் மற்றும் ஏனைய தேவர்களுடன் பூமிக்கு வந்து, யாகத்திற்குத் தகுந்த சேத்திரம் அமைத்து, அந்தணர், அருந்தவத்தோர் ஆகியோருடன், வேத ஆகம விதிப்படி வேள்வி செய்யத் தொடங்கினார்.

வேள்வியின்போது மந்திர அட்சர ஒலி மாறுபட்டதால் யாக அக்கினியில் இருந்து செவ்வானம் போன்ற நிறமுடைய ஆட்டுக்கடா ஒன்று தோன்றியது! கோர உருவத்துடன் வேள்வித் தீயினின்று எழுந்த ஆட்டுக்கடா பெரும் சீற்றத்துடன் ஆரவாரம் செய்தது. அதனைக் கண்டு அங்கு இருந்தோர் அனைவரும் அஞ்சி நடுங்கினார்கள். உயிர்களைக் கொல்ல எண்ணிய ஆட்டுக்கடா, அட்டதிக்கு

மலைகளும் அசைந்தாட ஆர்த்தது. வயிரத்துக்கு நிகரான கொம்புகளை நிலத்தில் குத்தித் தூளி கிளப்பியது. அதனைக் கண்ட நாரதமுனிவர் முதலாயினோர் நடுநடுங்கி யாகத்தை விட்டு வெளியேறினர்.

ஆட்டுக் கடா அவர்களைத் துரத்திச் சென்று போரிட்டது. போரில் சிலருடைய கால்கள் ஒடிந்தன. சிலரது குடல்கள் சரிந்தன. சிலர் கைகளை இழந்தனர். ஆட்டுக் கடா உயிரினங்களைத் துன்புறுத்தி உலகங்கள் யாவும் அஞ்ச உலாவியது.

ஆகாயத்தில் பாய்ந்து சூரியனின் தேரில் பூட்டப்பட்ட குதிரைகளுடன் போர் புரிந்தது. அதன் செய்கைகளைக் கண்ட நாரத முனிவரும் தேவர்களும் கைலை மலைக்கு ஓடினர். மலையில் ஏறிச் செல்லும்போது, எல்லா ஆற்றலும் அனுக்கிரகமும் கொண்ட கந்தவேள் இலக்கத்தொன்பது வீரர்களுடன் கூடி, விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டனர். அவரைக் கண்டதும் பூரணசந்திரனைக் கண்ட கடல்போல உவகை பொங்க உள்ளம் பூரித்து மகிழ்ந்தனர்.

''நாம் ஆட்டுக் கடாவுக்கு அஞ்சி, சிவபிரானிடம் அடைக்கலம் பெற ஓட வேண்டியதில்லை. நமது துயர் தீர்க்கும் பொருட்டே அவதாரம் செய்த குமரக் கடவுள் இங்கு எழுந்தருளியிருக்கிறார். எமது அவல நிலையை அவரிடம் கூறுவோம்'' என்று தீர்மானித்து அவருடைய திருவடித் தாமரையில் வீழ்ந்து ஓலமிட்டுத் துதிப்பாராயினர்.

**மூவர்கள் முதல்வா ஓலம், முக்கண்ணன் புதல்வா ஓலம்,**
**சேவலங் கொடியாய் ஓலம்; சிறந்த சிற்பரனே ஓலம்;**
**தேவர்கள் தேவே ஓலம்; தெய்வ நாயகனே ஓலம்;**
**ஆவலுற்று அருள்வாய் ஓலம்; ஆறுமுகா ஓலம்; ஓலம்;**

கந்தப் பெருமான் தேவர்களுடைய பெருந் துன்பத்துக்கான காரணத்தைக் கேட்டு மனமிரங்கி "அஞ்சாதீர்கள்" என்று அபயம் தந்தார். பின்னர் தம் அருகே நின்ற வீரவாகு தேவரைப் பார்த்து "தம்பீ! வேள்வித் தீயில் தோன்றி உயிர்களைக் கொன்று செருக்குடன் எங்கும் திரிகின்ற ஆட்டுக்கடாவை நீ விரைந்து சென்று இப்பொழுதே பிடித்துக் கொண்டு வா" என்று பணித்தார். வீரவாகுதேவர் முருகவேள் ஆணையைச் சிரமேல் தாங்கி ஆட்டுக் கடாவைத் தேடிச் சென்றார்.

ஆட்டுக்கடா பூமியில் உள்ளவர்களைச் சிதைத்து, கீழ் ஏழுலகிலும் சென்று அங்குள்ளோரையும் வதைத்து, சுவர்க்கலோகம் முதலாய மேல் உலகங்களையும் தன் கொம்பால் தகர்த்தது. இறுதியில் நான்முகனுடைய சத்தியலோகத்தில் இறுமாந்து ஆரவாரித்து நின்றது.

வீரவாகு தேவர் அதன் கொம்பைப் பற்றி 'கரகர'வென்று சப்தம் உண்டாகுமாறு இழுத்துக் கொண்டு போய் திருக்கைலை மலையை அடைந்து முருகன் திருமுன் விடுத்துப் பணிந்து நின்றார். தேவர்கள் அனைவரும் கண்டு நடுங்கிய ஆட்டுக்கடாவை வீரவாகுதேவர் ஆறுமுகனின் அருளாலும், ஆறுமுகக் கடவுளிடம் அவருக்கிருந்த அளப்பரும் பக்தியாலுமே அடக்கினார்.

முருகக் கடவுள் முறுவல் பூத்து தேவர்களையும் முனிவர்களையும் பார்த்து "கொடிய செய்கைகள் புரிந்த ஆட்டுக்கடா நம்மிடம் வந்துவிட்டது. இனி நீங்கள் தொடங்கிய யாகத்தை இனிதே முடியுங்கள்" என்று அருள் புரிந்தார். தேவர்கள் எல்லையில்லாத திருப்தியும் ஆனந்தமும் அடைந்தனர். பின்னர், "எம்பெருமானே! அடியோங்களுக்கு ஒரு வரம் தர வேண்டும். இந்த ஆட்டுக்கடாவை வேறெங்கும் விடாமல் தாங்கள் வாகனமாக ஏற்றுக்கொண்டு அருளுதல் வேண்டும்" என்றனர். கந்தவேள் கடாவை வாகனமாக ஏற்றுக் கொண்டார்.

அஜம் என்றால் ஆடு ஆட்டுக்கடாவை ஊர்தியாக ஏற்றுக் கொண்டதால் 'அஜவாகனன்' என்ற திருநாமமும் முருகனுக்கு உண்டு.

சஞ்சீவி 24.10.98

## பிரமனைச் சிறையில் அடைத்து படைத்தலை மேற்கொண்ட முருகன்



குமரக் கடவுள் ஆட்டுக் கடாவை வாகனமாகக் கொண்டு எல்லா உலகங்களிலும் உலாவிப் பற்பல திருவிளையாடல்களைப் புரிந்து, இலக்கத்தொன்பது வீரர்கள் புடைசூழ வெள்ளி மலையில் எழுந்தருளியிருந்தார்.

ஒரு தினம் பிரமதேவர் இந்திராதிதேவர்களுடன் சிவபிரானைச் சேவிக்கும் பொருட்டுக் கைலைமலையை அடைந்தார். சிவசந்நிதிக்குச் செல்லும் வழியில் முதற்கோபுர வாசலின் ஒரு புறத்தே செவ்வேள் வீரவாகு முதலாய தம்பியருடன் உலாவிக் கொண்டிருந்தார். பிரமதேவர் தவிர்ந்த அனைவரும் முருகவேளை வணங்கி வழிபட்டுப் பின்னர், திருக்கோயிலுட்சென்று சிவபிரானையும், உமாதேவியாரையும் வலம் வந்து வணங்கித் திருவருள் பெற்றுத் திரும்பினார்கள்.

வரும் வழியில் இலக்கத்தொன்பது வீரர்கள் சூழ நவரத்தின சிங்காசனத்தில் வீற்றிருந்தார் முருகவேள். எல்லாத் தேவர்களும் அவரை வலம் வந்து அடிதொழுது தோத்திரம் செய்தனர். முருகப் பெருமானை ஒரு பாலனாகக் கண்ட பிரமதேவர், 'இவரை நான் வணங்க வேண்டுமா?' என எண்ணி இறுமாப்புடன் நின்றார். சூராதி அவுணர்களை அழித்து இந்திரன் முதலாய தேவர்களையும் தம்மையும் காத்தற் பொருட்டே முருகவேள் அவதாரம் செய்தவர் என்பதை மறந்தார்.

செருக்குடன் நின்ற நான்முகனை அழைத்தார் ஆறுமுகன். பிரமதேவர் ஆறுமுகனை அணுகி சிறிது கைகுவித்து வணங்குவது போன்று பாவனை பண்ணி நின்றார். முருகப் பெருமான் பிரமனை நோக்கி "நீ என்ன தொழில் செய்கின்றனை?" என்று கம்பீரமாகக் கேட்டார். அந்தக் குரலில் "எத்தொழிலுக்கும் அதிபதியாகி, மற்றைய தேவர்களை அவரவர் தொழிலில் செலுத்துபவர் யாமே என்பது உனக்குத் தெரியாது போலும்" என்ற பொருள் புதைந்திருப்பதைப் புரிந்து கொண்ட பிரமதேவர் சிறிது அச்சமடைந்தார்.

"சிவபெருமானின் ஆணையினாலேயே படைத்தல் தொழில் செய்கின்றேன்" என்று மனம் நடுங்கிக் கொண்டே கூறினார் பிரமதேவர். "படைப்புத் தொழில் புரியும் உனக்கு வேதம் வருமோ?" என்று வினாவினார் முருகவேள்.

"ஆம். சிவபெருமான் அளவற்ற வேத சிவாகமங்களை அருளிச் செய்து, அவற்றில் சிலவற்றை

எனக்கு உபதேசித்துள்ளார்; அவற்றை நான் அறிவேன்'' என்றார். பிரமன் வேதத்தை அறிந்திருந்தானே அன்றி உணர்ந்திருக்கவில்லை என்பதைத் தெரிந்துகொண்ட கந்தன் கடகடவென உரக்கச் சிரித்து ''நன்று நன்று. வேத அறிவு உனக்கு இருக்குமாயின் முதல் வேதமாகிய இருக்குவேதத்தின் சில சாகைகளை ஓதக்கடவை'' என்றார்.

வேத மந்திரங்களுக்கு முதலில் சொல்லப்படும் ''ஓம்'' என்ற குடிலையை உரக்கக் கூறி, இருக்கு வேதத்தின் சாகை ஒன்றை ஓத ஆரம்பித்தார் பிரம தேவர், ''பிரமனே நிறுத்து! முதலில் நீ சொன்ன 'ஓம்' என்ற சொல்லின் பொருள் யாது? கூறுக'' என்றார்.

**தாமரைத் தலை இருந்தவன் குடிலை முன்சாற்றி**
**மாமறை தலை எடுத்தனன் பகர்தலும் வரம்பில்**
**காமர் பெற்றுடைக் குமரவேள் நிற்றி முன் கழறும்**
**ஓம் எனப்படும் மொழிப்பொருள் இயம்புக என்றுரைத்தார்**

இறைவனிடம் அடைக்கலம் புகுந்து அறிவால் மட்டுமே அறியக் கூடிய 'பீஜ' அட்சரத்தின் மறை பொருளைப் பிரமன் அறிந்திருக்கவில்லை. இறை அருள் பெறாத பிரமன் பிரணவத்தின் பொருள் அறியாது விழித்தான். 'சிவபெருமானிடம் வேத பாடம் கேட்டபோது இதனைக் கேட்டுத் தெரிந்துகொள்ள மறந்தேனே' என்று ஏங்கி வெட்கமுற்று விக்கித் திகைத்தான்.

பிரமதேவர் மயங்குவதைக் கண்ட கந்தவேள் ''குடிலையின் பொருள் தெரியாத நீ, படைத்தல் தொழிலை எவ்வாறு செய்வாய்?'' என்று சினந்து கூறி அவருடைய

நான்கு தலைகளும் குலுங்கும் வண்ணம் குட்டினார். பிரமதேவரின் எட்டு நாசித்துவாரங்களிலுமிருந்து உதிரம் பெருகியது. சிகை (தலைமுடி) பொடியாகி உதிர்ந்தது.

கந்தக் கடவுள் வீரவாகு தேவரை விளித்து "தம்பி இருண்ட மனத்தினனாகிய இவனைச் சிறையிடுக" எனக் கட்டளையிட்டார். வீரவாகு தேவரும் மற்றைய வீரர்களும் பிரமதேவரின் கைகளிலும், கால்களிலும் விலங்கு பூட்டிக் கந்தவெற்பில் உள்ள குகை ஒன்றில் சிறை வைத்தனர்.

முத்தொழிலுக்கும் முதல்வராகிய முருகப் பெருமான் கந்தவெற்புக்குச் சென்று ஒரு திருமுகமும் நான்கு திருக்கரங்களும் கொண்டு, ஒரு திருக்கரத்தில் ஜெபமாலையும், ஒரு திருக்கரம் கமண்டலமும் தாங்க, மற்ற இரு கரங்கள் அபயமும் வரதமும் வழங்கப் படைப்புத் தொழிலை மேற்கொண்டார்.

- உதயன், 25.10.1998



## தந்தைக்கே உபதேசம் செய்து சுவாமி நாதராகிய கந்தப் பெருமான்

கந்தவெற்பில் பிரமனைச் சிறையிட்ட பின்னர் படைத்தற் தொழிலை முருகப் பெருமான் தானே மேற்கொண்டார். அதற்கேற்ப நாராயண மூர்த்தியால் காத்தற் தொழிலையும், உருத்திர மூர்த்தியால் அழித்தல் தொழிலையும் செய்ய முடியவில்லை. எனவே அந்தத் தொழில்களையும் தாமே புரிந்து முத்தொழிலுக்கும் தானே முதல்வன் என்பதை அனைவரும் உணரச் செய்தார் சுப்பிரமணியப் பெருமான்.

சொற்பிரபஞ்சம், பொருட்பிரபஞ்சம் எனப்படும் இருவகைப் பிரபஞ்சங்களுக்கும் தாம் நிமிர்த்த (மூல) காரணமாக நின்று முதல் (ஆதி) காரணமாகிய மாயையில் இருந்து படைத்தும் துணை (உதவு) காரணமான சக்தியைக் கொண்டு காத்தும், அழித்தும் முத்தொழில்களையும் இயற்றி அருளினார் முருகப்பிரான்.

செவ்வேட்பரமன் புரிந்த படைப்பில் தோன்றிய ஆன்மாக்கள் பெற்ற பேற்றை அளவிட்டுக்கூற வல்லவர்

யார்? அவருடைய சிருட்டியின் அனைத்து உயிர்களும் அடிப்படையில் நற்குண, நற்செய்கை உடையனவாகவே தோன்றி விளங்கின. பாவம் என்பது அறவே ஒழிந்தது. எங்கும் மெய்ஞ்ஞானம் மலர்ந்து சிவமணம் (அன்பு மணம்) கமழ்ந்தது.

அளவற்ற காலம் சிறையில் இருந்த பிரமனை விடுவிக்க எண்ணிய நாராயணர், ஆதித்தர்களும், வசுக்களும், அகத்தியர் முதலாய முனிவர்களும், சப்த மாதர்களும், ஆதிசேடனும், ஏனையோரும் தொடர வெள்ளியங்கிரியை அடைந்தார். கைலைவாசனைப் போற்றிப் பணிந்து "தேவ தேவா! பிரணவப் பொருள் தெரியாத பிரமனைச் சுப்பிரமணியப் பெருமான் குட்டிச் சிறையிட்டுவிட்டு முத்தொழில்களையும் அவரே புரிவதால் எனதும், உருத்திரனதும் தொழில்கள் பங்கமடைந்தன. எனவே பிரமனைச் சிறையினின்றும் விடுவித்து அருள்புரிய வேண்டும்" என்று விண்ணப்பம் செய்தார்.

சிவபிரான் "தேவர்களே! பிரணவத்தின் பொருள் புரியாததால் பிரமன் எம்மையும், எமது குமாரனையும் வேறாகக் கண்டுள்ளான். இருவரையும் வேறாகக் காண்பவர்கள் ஒருபோதும் இன்பமடைய மாட்டார்கள். இந்த உண்மையை உணராத பிரமனுக்கு நல்லுணர்ச்சி ஊட்டவே நம் குமரன் அவனைத் தண்டித்துச் சிறையில் அடைத்தான்" என்று கூறி, திருநந்திதேவரைப் பார்த்து "நந்தி! நீ குமரக் கடவுளிடம் சென்று நமது ஆணையைக் கூறி நான்முகனைச் சிறை நீக்கி அழைத்து வருக" என்று பணித்தார்.

நந்திதேவர் கந்தவெற்பை அடைந்து ஆறுமுகவேளின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி, தான் வந்த காரியத்தைக் கூறினார். புன்னகை பூத்த முருகக்கடவுள் "நான் நான்முகனைச் சிறை நீக்கேன். இங்கு நின்றால் உன்னையும் சிறையிடுவேன், விரைந்து சென்று விடு" என்று சினத்துடன் கூறினார். நந்திதேவர் நடுக்கமடைந்து, வேறு ஒன்றும் கூறாது பெருமானை வணங்கி விட்டுச் சிவபிரானிடம் சென்று நடந்தவற்றைக் கூறினார். முருகனைக் காண விரும்பிய சிவமூர்த்தி திருமாலும் ஏனைய தேவர்களும் சூழக் கந்த வெற்பை அடைந்தார்.

தந்தையின் வருகையை அறிந்த கந்தவேள் இருக்கை விட்டெழுந்து அவரை எதிர்கொண்டழைத்து, தமது சிங்காசனத்தின் மீது இருத்தி, "உயிருக்கு உயிராகிய எந்தையே! பிரணவத்தின் பொருள் தெரியாதவன் படைப்புத் தொழில் புரிவதென்பது பேதமையே. குடிலையின் தத்துவம் உணராத நான்முகன் தங்களுக்குப் பூசை செய்வது வியப்புக்குரியது! தங்களைப் பலகாலம் பூசித்தும், அறியாமை, அகந்தை ஆகியன அகலப் பெறாத பிரமனுக்குச் சிறையே சிறந்த இடம்" என்றார்.

சிவபிரான் சற்றுச் சினம் கொண்டவர் போன்று குமரனைப் பார்த்து "மகனே! உனது செய்கை நன்றன்று. நமது ஆணைப்படி நந்தி வந்து வேண்டியும் நீ கேட்கவில்லை. நாமே வந்து கூறியும் மறுக்கலாமோ?" என்று வினவுதலும் முருகக் கடவுள் அருகில் நின்ற பூதர்களை அனுப்பிப் பிரமனைச் சிறையினின்றும்

விடுவித்தார். அகந்தை நீங்கிய பிரமதேவர் முருகப்பெருமானையும் சிவபிரானையும் மெய் அன்புடன் வணங்கி, துக்கத்துடன் வெட்கி நின்றார்.

"குழந்தாய் வருக" என்று கந்தக் கடவுளை அருகில் அழைத்த சிவமூர்த்தி, அவரைத் தமது மடியின் மீது அமர்த்தி "பிரமனுக்கும் தெரியாத பிரணவத்தின் பொருள் உனக்குத் தெரியுமா? தெரிந்தால் சொல்வாயா?" என்று கேட்டார்.

**காமரு குமரன் சென்னி கதுமென உயிர்த்துச் செக்கர்த்**
**தாமரை புரையுங் கையாற் றழுவியே, அயனுந் தேற்றா**
**ஓமென உரைக்கும் சொல்லின் உறுபொருள் உனக்குப் போமோ**
**போமெனில் அதனை யின்னே புகலென இறைவன் சொன்னான்.**

"ஐயனே! உலகெலாம் ஈன்ற அன்னைக்குத் தாங்கள் பிறர் அறியாது உபதேசித்த பிரணவத்தின் பொருளை இரகசியமாகக் கூறுவது அன்றி, யாவரும் கேட்கும் வண்ணம் உரைப்பது முறையோ? முறைப்படி கேட்டால் சொல்லுவேன்" என்றார் கந்தசுவாமி.

"குழந்தாய், நீ கூறுவது முற்றிலும் உண்மை" என ஒப்புக் கொண்ட, சிவபிரான் இருக்கை விட்டெழுந்து, கைகூப்பி, சிரம் தாழ்த்தி, பின்னர் வாய் பொத்தி, செவிசாய்த்து நிற்க பிரணவத்தின் பொருளை இரகசியமாக உபதேசித்து சுவாமிநாதர் ஆனார் முருகப்பெருமான்.

- உதயன், 26.10.98



## சடாட்சரமந்திரம் ஜெபித்து தவமிருந்த கன்னியர்க்கு அருளிய கந்தவேள்

திருமாலின் கண்மணிகளிலிருந்து சொரிந்த ஆனந்த அருவியினின்று பேரழகு மிக்க இரண்டு நங்கையர் தோன்றினர். அமிர்தவல்லி, சுந்தரவல்லி எனப் பெயர் பெற்ற இருகன்னியரும், முருகப் பெருமானின் இணையில்லாத அழகையும், பெருமையையும் வீரத்தையும் கேள்வியுற்று அவரைத் திருமணம் புரிந்து கொள்ள விரும்பினர். தங்கள் மனோரதம் நிறைவேறும் பொருட்டு இமயமலைச் சாரலில் உள்ள சரவணப் பொய்கைக் கரையில், சடாட்சர மந்திரத்தைச் செபித்து, நெடுங்காலம் தவம் இருந்தனர். தவத்துக்கு இரங்கிய முருகப்பெருமான் எழுந்தருளி, அவர்களுக்குக் காட்சி கொடுத்தார்.

கந்தக் கடவுளைக் கண்ட கன்னியர் இருவரும் மகிழ்ச்சி பொங்கிய மனத்தினராய், அவருடைய திருவடிகளில் பணிந்து வணங்கிப் பேச்சற்று, நாணி, நிலம் நோக்கி நின்றனர். கந்தவேள் அவர்களைக் கருணையுடன் பார்த்து ''நீங்கள் எதனை விரும்பித் தவம் செய்தீர்கள்?''

என்று வினவினார். அவர்கள் கைகூப்பி வணங்கி, "தேவசேனாதிபதி! அடியவர்களாகிய நாம் தங்களைத் திருமணம் புரியும் ஆவலால் தவம் இருந்தோம். எமக்குத் திருவருள் பாலிக்க வேண்டும்" என்று வேண்டினர்.

ஆறுமுக வள்ளல் அமிர்தவல்லியை நோக்கி, "நீ இந்திரனுக்கு மகவாகி தேவலோகத்திலும்," சுந்தரவல்லியைப் பார்த்து "நீ சிவ முனிவருக்குப் புதல்வியாகப் பிறந்து, மண்ணுலகத்தில் வேடர் குலத்திலும், வளர்ந்து வாழ்ந்து வரும் காலம் யாம் உரிய முறையில் உங்களைத் திருமணம் செய்து கொள்வோம்." என்று அருள்புரிந்தார், கன்னியர் இருவரும் கந்தவேளைக் கைதொழுது விடை பெற்றுச் சென்றனர்.

மூத்தவளாகிய அமிர்தவல்லி ஓர் அழகிய குழந்தை வடிவு கொண்டு மேருமலையில் மறைந்து வாழும் இந்திரன் முன் சென்று "தேவராஜனே, உன்னுடன் உபேந்திரனாகப் பிறந்த திருமாலின் மகள் நான். நீ (எனக்குத் தந்தை முறை ஆவாய். என்னை உனது மகளாக ஏற்றுக் கொள்" என்றாள். உள்ளம் பூரித்த இந்திரன் "தாயே, இங்கே வா" என்று கூறி குழந்தையை வாரியெடுத்து முத்தமிட்டு, ஐராவதத்தை அழைத்து "கைமா, இவள் நம்முடைய மகள். இவளை அன்புடன் வளர்த்து வரக்கடவாய்" என்று பணித்து "இவளால் இனி எமக்குச் சீரும் சிறப்பும் உண்டாகும்" என்று கூறிப் பெருமிதம் கொண்டார்.

ஐராவதம் அந்தக் குழந்தையைத் தன் பிடர் மேல் வைத்து சத்திய உலகத்தின் தலைநகரான மனோவதிக்கு

எடுத்துச் சென்று அங்கேயே வளர்த்தது. தேவராஜனின் யானை வளர்த்ததால் அந்தக் குழந்தை "தெய்வ யானை" என்று பெயர் பெற்றது. பொன்னுலக அரசும் சேனைகளும் இழந்து பூமியில் வாழ்ந்தபோது குழந்தையின் வரவு இந்திரனுக்கு சேனையும், ஆயுதங்களும் கிடைத்தது போன்ற உற்சாகத்தை ஏற்படுத்தியதால் 'தேவசேனை' என்றும் அவளைச் சொல்வதுண்டு.

தொண்டை மண்டலத்தில் 'வள்ளி மலை' எனப்படும் ஒரு மலை உண்டு. அதன் சாரலில் "சித்தூர்" என்ற பகுதி பொலிவும் புகழும் பெற்று விளங்கியது! அங்கு வாழ்ந்த வேடர்களுக்குத் தலைவனாகத் திகழ்ந்தவன் நம்பிராஜன். நம்பிராஜனுக்கு ஆண் மக்கள் இருந்தனர். பெண் மகவு இல்லாமையால் கவலை கொண்டு ஆறுமுகக் கடவுளை வழிபட்டும், குறிகேட்டும், வெறியாட்டயர்ந்தும் பெண் குழந்தைப் பேற்றை எதிர்பார்த்திருந்தான்.

கண்ணுவ முனிவரின் சாபத்தால் திருமால் சிவமுனிவராகவும், திருமகள் 'மான்' ஆகவும் மண்ணில் பிறந்தனர். சிவமுனிவர் சிவபிரானைச் சித்தத்தில் நிறுத்தி வள்ளி மலையில் நல்வாழ்வை மேற்கொண்டிருந்தார். ஒரு தினம் முருகப் பெருமானின் திருவருளால் இலக்குமியின் அவதாரமாகிய அந்த மான் சிவமுனிவரின் முன்பு சென்று உலாவியது. இலக்குமியை மான் உருவில் கண்ட சிவமுனிவர் காம உணர்வு பெற்றுக் கலக்கமடைந்து கண் மலரால் அம்மானிடத்து இன்பம் அனுபவித்துப் பின்னர் மெய் உணர்வால் தெளிவு பெற்று உறுதியான தவத்தில் நிலையானார்.

கந்தவேளைத் திருமணம் செய்து கொள்ளும் பொருட்டு வள்ளி மலையின் ஒரு புறம் தவம் செய்து கொண்டிருந்த சுந்தரவல்லி, அந்த மானின் வயிற்றில் கருவாகப் புகுந்தாள். சூல் கொண்ட மான் வேட்டுவப் பெண்கள் வள்ளிக்கிழங்கை அகழ்ந்தெடுத்த குழியொன்றில் ஒரு குழந்தையை ஈன்றது; தான் ஈன்றது மனித உருவில் இருப்பதைக் கண்ட மான் மருட்சி கொண்டு ஓடிவிட்டது. குழந்தை அழுது கொண்டு இருந்தது.

ஆறுமுகக் கடவுளின் திருவருள் தூண்டுதலால் அந்த வழியே சென்ற நம்பிராஜன் குழந்தையைக் கண்டு "என் தவம் பலித்தது" என்று ஆனந்தக் கூத்தாடி, அதை எடுத்துப் போய் மனைவியாகிய 'கொடிச்சி'யிடம் கொடுத்து வளர்த்தான்.

பருவமடைந்த வள்ளி குல வழக்கப்படி தினைப் புனம் காக்கச் சென்று, பரணில் இருந்து கவண் வீசி, கல் எறிந்து குருவி, மைனா, மயில் போன்ற பறவைகளை விரட்டி ஆடிப் பாடி இருந்தாள்.

**பூவைகாள் செங்கட் புறவங்காள் ஆலோலம்**
**தூவிமா மஞ்ஞைகாள் சொற்கிளிகாள் ஆலோலம்**
**கூவல் சேர்வுற்ற மயிலினங்காள் ஆலோலம்**
**சேவல் காள் ஆலோல்ம் என்றாள் திருந்தியழையாள்**

உரிய பருவம் வந்துற்ற காலத்தில் தெய்வயானை, வள்ளி ஆகிய இரு கன்னியர்களும் கந்தவேளை மணந்து இன்புற்றிருந்தனர்.

- உதயன், 27.10.98

## சூரபன்மனின் வரலாறு - 1

நெடுங்காலத்துக்கு முன்னர் சமுத்திர மத்தியில் சாகத்தீவு என்ற தீவு இருந்தது. அதை ஆட்சி செய்த அரசனான பிரபாகரனுக்கு சூரன், பதுமன் என இரண்டு சற்புத்திரர் பிறந்தனர்.

சூரனுக்கு வயது வந்ததும் அவனிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துத் தவம் செய்ய வனம் சென்றான் பிரபாகரன். சூரன் நீதி நெறி நின்று ஆட்சி புரிந்த ஒரு தினம் அகத்திய முனிவர் அவனிடம் சென்றார்.

அகத்திய முனிவரை சூரனும் பதுமனும் உபசரித்து வணங்கி நின்றனர். அன்பான உபசாரத்துக்கு மகிழ்ந்த அகத்தியர் ''சாத்வீக குணம் நிறைந்தவர்களே, உங்களைக் காண வேண்டும் என்ற ஆவலினால் இவ்விடம் வந்தேனாயினும் உங்களுக்குச் சொல்ல வேண்டிய செய்தி ஒன்று உண்டு. பொருள் நிறைந்த அந்தச் செய்தியை சித்த சுத்தமுடையவர்களுக்கு அன்றி ஏனையோர்க்குச் சொல்லக்கூடாது. கவனித்துக் கேளுங்கள்'' என்றார்.

''வேதங்களும் உபநிடதங்களும் விளக்க முடியாத சிறப்புகளை உடையவர் சுப்பிரமணியப் பெருமான்.

அவருடைய திருவடித் தாமரைகளைத் தாங்கிக் கொண்டிருக்கிறது மயில். சேவல் கொடியும், பகைவரை அழிக்கும் ஆற்றல் பெற்ற வேற்படையும் அவருடைய திருக்கரத்தில் விளங்கிக் கொண்டிருக்கின்றன. உயிர்களுக்குப் போகத்தை அருளுகின்ற கடம்பமாலை அவருடைய திருமார்பில் திகழ்கிறது. முத்திக்கு வித்தாகும் அவருடைய பாதார விந்தங்களைத் துதித்து ஆட்சி புரியுங்கள்'' என்று கூறிச் சென்றார்.

அகத்திய முனிவரின் அறிவுரைகளைக் கேட்ட சூரனும் பதுமனும், தாமும் முருகப் பெருமானுக்கு வாகனமாகவும் கொடியாகவும் சேவிக்க ஆவல் கொண்டு மயில் சேவல் ஆகியவற்றைத் தனித்தனி சிந்தித்து, அப்பதவிகளை அடைய, ஸ்ரீ சயில வனத்தில் நெடுங்காலம் தவம் இருந்தனர்.

கைலையங்கிரியின் ஒரு புறத்தே நின்ற விட்டுணுவின் வாகனமாகிய கருடனும், பிரமாவின் வாகனமாகிய அன்னமும் மயில், சேவல் ஆகியவற்றின் அருகே சென்று, ''சூரனும் பதுமனும் உங்கள் பதவிகளைப் பெறத் தவம் இயற்றுகின்றனர். விரைவில் அவர்கள் விரும்பிய பதவிகளைப் பெறுவர். விழிப்பாக இருங்கள்'' என்று கூறிச் சென்றன.

கோபம் கொண்ட மயிலும் சேவலும், பூமிக்கு வந்து சூரனுக்கும் பதுமனுக்கும் முன் தோன்றி ''நீங்கள் எங்கள் பதவிகளைப் பெற விரும்பினீர்கள். ஆகையால் நீங்கள்

பூதகணத் தலைவர்களாகிக் கயிலையங்கிரியில் இருங்கள் என்று சாபமிட்டுச் சென்றன.

பூதகணத் தலைவர்களாக மாறிய சூரனும் பதுமனும் கயிலையங்கிரிக்குச் சென்று மயிலையும் சேவலையும் வணங்கி ''அடியேங்கள் விரும்பிய தவம் எமக்குக் கிடைக்குமா?'' என்று இரந்து நின்றனர். மிகவும் இரக்கம் கொண்ட மயில் ''நீங்கள் இந்தக் கயிலை மலையில் அனேக காலம் இருந்தால் தவப் பயனைப் பெறுவீர்கள்'' என்றது.

கருடனும் அன்னமும் தங்கள் தவப் பயனை இழக்கும்படி செய்தன என்ற எண்ணத்தை மனதில் பதித்து பகை உணர்வுடன் இருந்தனர் பூதகணத் தலைவர்கள்.

- உதயம், 24.10.95

## சூரபன்மனின் வரலாறு - 2

கைலையங்கிரியின் ஒரு புறம் மயிலும் சேவலும் உலாவித் திரிந்தன. தமது தவப் பயனை அழித்த கருடனையும் அன்னத்தையும் பழி தீர்க்கத் தருணத்தை எதிர்பார்த்திருந்த பூதகணத் தலைவர்கள் மயிலின் அருகில் சென்று"ஓ பட்சி அரசே! சிவகுமாரரான முருகப் பெருமானின் திருவடித்தாமரைகளைத் தாங்கும் தகுதி பெற்ற உனது வல்லமையையும் கொடியாகிய சேவலின் பராக்கிரமத்தையும் அறியாதவர் உலகங்களில் யார் உளர்? விட்டுணுவும் பிரமாவும் உங்களைப் போற்றி நிற்கின்றனர். ஆனால் அவர்களுடைய ஊர்திகளாகிய கருடனும் அன்னமும் உங்களை அலட்சியம் செய்கின்றன. அவ்வாறு அவைகள் அவமதிப்பது உங்களுடன் சண்டையிடப் போலும். அவை உங்களுடன் சண்டையிட வந்தால் நாம் உங்களுக்குத் துணையாக நிற்போம்'' என்றனர்.

பூதகணத்தலைவர்கள் சொன்னவற்றைக் கேட்ட மயில் கோபம் கொண்டு சிறகுகளை அடித்து ஆரவாரம்

செய்து கருடனுடன் போர் செய்யத் தயாராகியது. சேவல் கூவிப் பறந்து அன்னத்தை நெருங்கியது. பூதகணத் தலைவர்களும் கண்களில் கோபக்கனல் பறக்கப் பற்களை நறுநறென்று கடித்துப் போருக்குத் தயாராயினர்.

போரில் தோல்வியடைந்த கருடன் வைகுந்த உலகத்திற்கு ஓடி மறைந்தது. அன்னம் சத்திய உலகுக்குப் பறந்து சென்று பதுங்கிக் கொண்டது. அவைகளைத் துரத்திச் சென்ற மயிலும் சேவலும் பூதகணத் தலைவர்களும் வைகுந்தம், சத்திய உலகம் பொன்னுலகம் ஆகியவற்றை அழித்துவிட்டுக் கயிலையங்கிரிக்கு மீண்டன.

தேவர்களின் முறையீட்டைக் கேட்ட வீட்டுணுவும் பிரமாவும் கவலையடைந்து முருகப் பெருமான் திருமுன் சென்று ''ஐயனே, காரணம் எதுவுமின்றிப் பூதகணத் தலைவர்களும் மயிலும் சேவலும் எமது ஊர்திகளுடன் போரிட்டனர். தோல்வி அடைந்த கருடனும் அன்னமும் புறங்காட்டிப் பறந்து ஓட இவர்கள் வைகுந்தத்தையும் சத்திய உலகையும் அமராவதியையும் அழித்துவிட்டார்கள்'' என்று கூறினர்.

பூதகணத் தலைவர்களைத் தம்முன் அழைத்த முருகப் பெருமான் ''நீங்கள் வைகுந்தத்தையும் சத்திய உலகையும் அமராவதியையும் அழித்தீர்கள். இதனால் உங்களை அடைந்த பழியும் பாவமும் நீங்கும் பொருட்டுப் பூவுலகத்திலே அசுரர் குலத்திற் பிறந்து தேவர்களுக்குத் துன்பம் செய்யக்கடவீர்கள். அதன் காரணமாக நமது

வேற்படை உங்களைச் சங்காரம் செய்து நல்வழிப்படுத்தும்" என்று சாபமிட்டார்.

கொடிய சாபத்தைக் கேட்ட பூதகணத் தலைவர்கள் ''தேவரீரின் வேற்படையால் நாம் இறக்கும்போது மயிலுருக்கொண்டு தங்களைத் தாங்கும் பேற்றையும், சேவல் உருக்கொண்டு கொடியாகிக் கூவும் பெருமையையும் தந்தருள வேண்டும்'' என்று இரந்தனர். அவ்வண்ணமே ஆகும் என்று அருள் புரிந்தார் ஆறுமுகப்பெருமான்.

- உதயன், 25.10.95

## அசுரன் பிறந்தான்

காலத்திற்குக் காலம் நடந்த தேவ அசுர யுத்தங்களில் எண்ணற்ற அசுரர்கள் அழிந்தார்கள். அசுரர்களுக்கு அரசனான அசுரேந்திரன் குலம் விளங்க வேண்டும் என்ற ஆசையால் மங்கலகேசி என்ற அரக்கப் பெண்ணை மணந்து 'சுரசை' என்னும் பெண் குழந்தைக்குத் தந்தையானான்.

சுரசை குல குருவாகிய சுக்கிராச்சாரியரிடம் கல்வி கற்றாள். சுக்கிரன் அவளுக்கு மாயையின் கல்விகள் அனைத்தையும் போதித்தார். அந்தக் கல்வியில் அவள் பெற்ற திறமையின் காரணமாக "மாயை" என்று பெயர் பெற்றாள். ஒரு தினம் சுக்கிராச்சாரியர் அவளை நோக்கி "மாயா, அசுரகுலம் இனி உன்னால்தான் விளங்க வேண்டும். நீ இரதிதேவியும் நாணும் அழகுடன் சென்று காசிபமுனிவரை மயக்கி அவரைக் கூடிப் புத்திரர்களைப் பெற்று அசுரர் குலம் ஓங்கச் செய்வாயாக" என்று பணித்தார்.

மாயை அதற்கு இசைந்து காசிபமுனிவர் தவம் செய்து கொண்டிருந்த வனத்தை அடைந்தாள்.

மாயையின் பேரெழிலைக் கண்ட காசிபர் சிந்தை மயங்கி மையல் கொண்டு அவளருகே சென்றார். ஆனால் அவள் மறைந்து விட்டாள்.

காசிபர் அவளை எவ்விடத்துத் தேடியும் காணாமல் கலங்கியபடி புலம்பி நின்றார். திரும்பிய திசையெல்லாம் மாயையின் தோற்றமே அவர் கண்களுக்குத் தெரிந்தது.

இதுவே தருணம் என்று உணர்ந்த மாயை மீண்டும் அவர் முன் தோன்றினாள். காசிபர் மகிழ்ச்சி பொங்க அவள் முன் சென்று "மாதரசி என்னை ஆட்கொள். தவறின் இறப்பேன்" என்று இரந்து நின்றார்.

"முனி சிரேட்டரே! என்னுடைய அழகுக்கு ஏற்ற வடிவத்தை இப்போது எடுத்துக் கொள்ளும். பின்னர் நான் எடுக்கும் ஒவ்வொரு வடிவத்துக்கும் ஏற்ற வடிவத்தை நீர் எடுக்க உடன்படுவீராயின், உம்மைக் கூடி மகிழ்விப்பேன்" என்றாள். காசிபர் அதற்கு இசைந்தார்.

முதலாம் சாமத்தில் மாயையுடன் காசிபர் கூடிய போது (பூதகணத் தலைவர்களாக இருந்த சூரனும், பதுமனும்) சூரபன்மன் பிறந்தான். இரண்டாம் சாமத்தில் இருவரும் சிங்க வடிவு கொண்டு கலந்த போது சிங்கமுகன் பிறந்தான். மூன்றாம் சாமத்தில் இருவரும் யானை உருக்கொண்டு புணர்ந்தபோது தாருகனும் பிறந்தான்.

- உதயன், 28.10.95

## சூரபன்மனின் ஆதிக்க வெறி

மாயையின் உபதேசப்படி சூரபன்மன் தம்பியருடன் பதினாயிரம் ஆண்டுகள் அரிய தவம் செய்தான். அவனுடைய பக்தி வைராக்கியத்திற்கு இரங்கிய பரமசிவன் அவன் முன் தோன்றி "நீ நம்மை நினைத்து நெடுங்காலம் தவம் இயற்றி இளைத்தனை, உனக்கு வேண்டும் வரம் என்ன சொல்லு'' என்று கிருபா நோக்கம் செய்து கேட்டார்.

சூரபன்மனுடைய கோரிக்கையைச் செவி மடுத்த சிவபிரான் சூரபன்ம! நீ இப்பிருதிவியிலுள்ள ஆயிரம் கோடி அண்டங்களுள் ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டு யுகம் ஆட்சி புரியக் கடவை. ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கும் செல்லத்தக்க வலிமை மிகுந்த இந்திர ஞாலம்' என்னும் தேரையும், தேவர்கள் யாவர்க்கும் முதல்வனாகும் தலைமையையும், யாவரையும் வெல்லும் வீரத்தையும், ஆற்றலையும், பாசுபதம் முதலாய தெய்வ அஸ்திரங்களையும், எந்நாளும் அழியாத வச்சிர உடலையும் தந்தோம்'' என்று கூறி மறைந்தார்.

சூரபன்மன் இந்திர ஞாலத்தேர் மீது ஏறி நாள் தோறும் ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் உலாவி ஆட்சி செய்து கொண்டிருந்தான். ஆதிக்க பலமும் ஆணவ

வெறியும் அவனுடைய கண்களை மறைத்தன. ஆசை அவனை அலைத்தது. இந்திரன் மனைவி இந்திராணியை அடைய ஆசை கொண்டு, இந்திரனைப் பிடித்து வரும் படி படைத்தலைவர்களையும், இந்திராணியை இழுத்துக் கொண்டு வருமாறு வீரம் நிறைந்த அரக்கப் பெண்களையும் ஏவினான்.

தம்மைப் பிடிக்க அசுரர் கூட்டம் வருவதை ஒற்றர் மூலம் அறிந்த இந்திரன் இந்திராணியோடு மாயா சக்தியால் மறைந்து பூமிக்கு வந்து சீர்காழிப்பதியை அடைந்தான்.

சூரபன்மனின் கொடுமையால் வருந்திய தேவர்கள் சீர்காழிக்கு வந்து இந்திரனிடம் முறையிட்டனர்.

இந்திரன் கலங்கினான். நெடுநேரம் யோசித்தான். அயர்ச்சி அடைந்து பெருமூச்சு விட்டு "சூரபன்மன் அளப்பரும் தவம் செய்திருக்கிறான். அவனால் நமது வாழ்வும் வளமும் குன்றிவிட்டது. இனி நாம் கயிலைக்குச் சென்று சிவபிரானுக்கு நம் குறைகளை முறையிடுவோம் வாருங்கள்" என்றான். தேவர்கள் பெருமகிழ்ச்சியடைந்தனர்.

தமது மனைவி இந்திராணியை அரிஹரபுத்திரரான ஐயனாரிடம் அடைக்கலம் கொடுத்துவிட்டு கயிலைக்குச் சென்றான் இந்திரன்.

- உதயன். 29.10.95

# குறுமுனி சமன் செய்த பூமி!

சிவபிரான் கயிலையங்கிரியில் சனகாதி முனிவர்களுக்குச் சிவாகமத்தின் நுட்பங்களாகிய சரியை, கிரியை, யோகம் என்ற மூன்று பாதங்களையும் கூறி "குழந்தைகளே, மனம் ஒடுங்க ஞானபாதம் போதிக்க வேண்டும். அதை வாக்கால் போதிக்க முடியாது. இப்படியாகச் சும்மா இருப்பதுவே அது ஆகும்" என்று தம்மார்பில் கையை வைத்துத் திருவிரலால் அமைந்த சின்முத்திரையைத் தாங்கி, யோகத்தில் அமர்ந்து, மோன நிலையைக் காட்டியருளினார். சிவபிரான் மோன நிலையில் இருந்த ஒரு கணப்பொழுதில், பிரமன் முதலாய தேவர்களுக்கு அனேக யுகங்கள் கழிந்தன.

'பார்வதி இமயமலையில் தவம் செய்து கொண்டிருக்க, பரமேஸ்வரன் கயிலை மலையில் மோன நிலையில் இருக்க, சூரபன்மனைச் சங்கரிக்கப் போகும் முருகனின் திருவவதாரம் எப்படி நிகழும்?' என்று சஞ்சலமடைந்த தேவர்கள் பரமேஸ்வரனைப் பலவாறாகத் துதி செய்யத் தொடங்கினர்.

மோன நிலை கலைந்த மகாதேவர் "தேவர்களே! வருந்தாதீர்கள், இமயமலையில் எம்மை நோக்கித் தவம் புரியும் மரகதவல்லியை மணம் புரிந்து, உங்கள் மனத்துயரை மாற்ற ஒரு மைந்தனைத் தந்தருளுவோம்" என்று ஆறுதல் மொழி கூறினார்.

பார்வதி பரமேஸ்வரன் திருமணத்தைக் காண எல்லாப் புவனங்களிலும் உள்ளவர்கள் வந்து இமயமலையில் கூடினர். பூமியின் வடகோடு தாழ்ந்து தென்கோடு உயர்ந்தது. உயிர்கள் துன்பம் அடைந்தன. சிவபிரான் அகத்திய முனிவரை விளித்து "குறுமுனியே, பூமியைச் சமன் செய்ய நீ உடனே தென்நாட்டில் உள்ள பொதிய மலைக்குச் செல்" என்று பணித்தார்.

இறைவனின் ஆணையைக் கேட்ட அகத்தியர் மனம் வருந்தி "அடியேன் என்ன குற்றம் செய்தேன்? தங்கள் திருமணக் காட்சியைக் காணும் பாக்கியம் எனக்கு இல்லையா?" என்று தயக்கத்துடன் கேட்டார்.

"நீ சற்றும் தயங்காது பொதியமலைக்குச் செல். நாம் நமது திருமணக் கோலத்தை அவ்வண் உனக்குக் காட்டுவோம். நீ கண்டு மகிழலாம்" என்று கூறினார் சிவபிரான். அகத்திய முனிவர் இறைவனின் திருவடியைத் துதித்துக் கொண்டு தென் திசையை நோக்கிச் சென்று பொதியமலையை அடைந்தார். பூமி சமனாகியது. உயிர்கள் துன்பம் நீங்கின.

**சிந்தைய தழுங்கலின்றித் தென்மலை சேறியங்கண்**
**வந்த நம் வதுவைக் காட்சி வழங்குதும் மகிழ்ந்து காண்டி**
**நந்தமை யுன்னி யாங்கே நாள் சில இருத்தி பின்னர்**
**முந்தைபி லெமது பாங்கர் வருதியால் முனிவ என்றான்**

(திருக்கல்யாணப்படலம்)

- உதயன், 04.11.1994



## கணபதியும் காவிரியும்

சூரபன்மனின் கொடுமைக்கு அஞ்சிய இந்திரன் இந்திராணியோடு பூமிக்கு வந்தான். சிவபிரானைப் பூசிக்க சீர்காழியில் ஒரு நந்தவனம் அமைத்தான். அரக்கர்களின் அநியாயத்தால் மண்ணில் மழை பொழியவில்லை. நந்தவனம் வாடியது.

கவலையடைந்த இந்திரன் விநாயகப் பெருமானைத் துதித்தான். விநாயகப் பெருமான் அவன்முன் தோன்றினார். ''ஐயனே, சிவபிரானைப் பூசிக்க நான் அமைத்த நந்தவனம் வாடி வளம் குன்றிவிட்டது. கொங்கு நாட்டில் தவம் செய்து கொண்டிருக்கும் அகத்திய முனிவருடைய கமண்டலத்தில் உள்ள காவிரியைத் தேவரீர் இங்கு வருமாறு செய்தால் நந்தவனம் செழிக்கும்'' என்றான் இந்திரன்.

''தேவராஜனே! அவ்வண்ணமே செய்வோம். கவலையடையாதே'' என அருள் புரிந்துவிட்டுக் கொங்கு

நாடு சென்று அகத்திய முனிவருடைய கமண்டலத்தில் காக வடிவெடுத்து அமர்ந்தார். அகத்திய முனிவர் கையை உயர்த்தி அதனை விரட்ட காக வடிவாயிருந்த கணபதி, கமண்டலத்தைக் கவிழ்த்துவிட்டுக் காவிரியைப் பூமியில் செல்லப் பணித்து சிறகடித்துப் பறந்தார்.

ஆத்திரமடைந்த அகத்தியர் காக்கையைத் துரத்திச் சென்றதும், விநாயகப் பெருமான், காக வடிவம் நீங்கி அந்தணச் சிறுவனாக உருவெடுத்து ஓடினார். இவன் மாய வித்தையில் வல்ல அசுரன் போலும் என்று எண்ணிய அகத்தியர் அவனைக் குட்டுவதற்கு உயர்த்திய கரங்களுடன் நெடுந்தூரம் பின் தொடர்ந்து ஓடினார். அகத்தியரை மேலும் வேதனைப் படுத்தலாகாது என்று கருணை கொண்ட கணபதி, ஞான சொரூபமான திருமேனியுடன் காட்சி கொடுத்தார்.

மனம் தெளிந்த அகத்தியர், ''ஐயனே, அறியாமையினால் நான் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும்'' என்று கூறியபடி குட்டுவதற்கு ஓங்கிய கரங்களினால் தனது தலையில் குட்டிக் கொண்டார்.

'முனி புங்கவ! உனக்கு என்ன வரம் வேண்டும்?' என விநாயகப் பெருமான் வினவ, ''ஞானமே உருவான ஆனைமுகத் தெய்வமே! அடியேன் தேவரீரிடத்திலும் சிவபிரானிடத்திலும் குன்றாத அன்புடையவனாக இருக்க வேண்டும். இப்பொழுது அடியேன் செய்வது போலத் தேவரீருடைய சன்னிதானத்தில் குட்டி வழிபடுவோருக்கு அவர்களுடைய குறைகளைப் போக்கி, தாயைப் போன்று

அருள்பாலிக்க வேண்டும்' என வேண்டிக் கொண்டார் அகத்தியர். ஐங்கரத்து அண்ணனும் 'அவ்வண்ணமே ஆகுக' என அருள்புரிந்து மறைந்தார்.

**இன்னே தமியேன் எனவே இனிநின்**
**முன்னே நுதலின் முறையால் இருகை**
**கொன்னே கொடுதாக்கினர் தங்குறை தீர்த்து**
**அன்னே எனவந்து அருள்செய் எனவே.** - காவிரி நீங்குபடலம்

- உதயன், 05.11.1994

## குறுகு குறுகு குற்றாலா!

காவிரி நீங்கிய பின்னர் விநாயகப் பெருமானிடம் வரம் பெற்ற அகத்திய முனிவர் கொங்கு நாட்டைவிட்டுப் புறப்பட்டுச் சிவபிரானின் திருநாமங்களைக் கூறித் துதித்துக் கொண்டு திருக்குற்றாலத்தை அடைந்தார். அங்கு விஷ்ணு கோயில் ஒன்று இருந்தது. அந்தத் தலத்திலே இருந்த வைஷ்ணவர்கள், மதங்களில் தங்கள் மதம்தான் சிறந்தது என்ற மத வெறி பிடித்தவராக இருந்தனர். சைவர்களைக் கண்டால் வெறுப்படைந்தனர்.

அவர்களுடைய மத அகங்காரத்தை அடக்க வேண்டும் என்று தீர்மானித்த அகத்தியர் திருமாலின் திருக்கோயிலை நோக்கி நடந்தார். அவரைத் தொலைவில் கண்ட வைஷ்ணவர்கள் பெருமூச்செறிந்து கோபித்து திருநீறும் உருத்திராக்கமும் அணிந்தவர் தமது திருத்தலத்தை மிதிக்கலாகுமோ என வெகுண்டனர். அவர் அருகில் சென்று, ''நீர் இந்தத் திவ்வியப் பதியில் தங்காமல் விரைவில் புறப்படும்'' என்று துரத்தினர்.

மிகவும் அச்சமடைந்தவர்போல வந்த வழியே திரும்பிய அகத்தியர் துவாதத் திருமண் நெற்றியில் விளங்கவும், துளசி மாலைகள் மார்பில் புரளவும், பரம பாகவதர் கோலம் பூண்டு மீண்டும் வந்தார். வைஷ்ணவர்கள் அவரை எதிர்கொண்டு அழைத்து உபசாரம் செய்து சேவித்து நின்றனர்.

அகத்திய முனிவர் அவர்களிடம் "இங்கு கோயில் கொண்டிருக்கும் பெருமாளை சேவிக்க என் மனம் விரும்புகிறது" என்றார். மிகவும் மகிழ்ச்சியடைந்த கோயில் அர்ச்சகர்கள் திருமஞ்சனம், அமுதுமலர், பழம், பட்டு ஆகியவற்றைக் கொடுத்து, "சுவாமி, உங்கள் திருவுளப் படி பூஜை செய்யுங்கள்" என்றனர்.

"அன்பர்களே, நீங்கள் இதுவரை பெருமாளை வழிபட்டு வந்தீர்கள். இன்று நாம் இப்பெருமாளை அர்ச்சிக்கும் முறைகளை யாவரும் தரிசிப்பீர்கள்" என்று கூறி, அவர்களைத் திருமால் பீடத்தருகே அழைத்துச் சென்றார்.

அகத்தியர், அறுகு, மதி, நதி சூடிய சிவபிரானை நெஞ்சாரத் துதித்து, நாராயணக் கடவுளின் திருமுடி மீது தமது குறுகிய கரங்களை வைத்து "குறுகு குறுகு குற்றாலா" என்று கூறியபடி அழுத்தினார். திருமாலின் திருவுருவம் ஒரு சிவ லிங்கமாக மாறியது! அதைக் கண்ட வைஷ்ணவர்கள் அவரைப் பிடிக்கவும் அடிக்கவும் முயன்றனர். அகத்தியரின் கோபத்தீயினால் வெருண்டும் மருண்டும் ஓடினார்கள். அன்று முதல் திருக்குற்றாலா ஒரு சிவத்தலமாக விளங்குகிறது.

**அறுகுமதி நதிபுனையுஞ் செஞ்சடையெம் பெருமானை அகத்துட் கொண்டு**
**சிறுகு முருவுடைய முனி நாரணர் திருமுடி மேற் செங்கையோர்சிக்**
**குறுக குறுகென இருத்திஒன் அரக்கிற் புனை பாவை கோலமீது**
**மறுக தழலுற் றென்னக் குழைவித்தோர் சிவலிங்க வடிவஞ் செய்தார்.**

(திருக்குற்றாலப் படலம்)

- உதயன், 06.11.1994

## வீரவாகு கேட்ட வரம்

மூன்றாம் நாள் போரில் மகாவீரனான பானுகோபன் எண்ணற்ற மாயங்களைச் செய்து வீரவாகு தேவருடன் போர் புரிந்தான். பானுகோபனுடைய மாயங்கள் அனைத்தையும் ஞானாஸ்திரத்தால் அழித்து அவனையும் இயமனுடைய உலகுக்கு அனுப்பினார் வீரவாகு தேவர்.

எல்லையில்லா மகிழ்ச்சியடைந்த வீரவாகுதேவர் "வெல்லுதற்கரிய பானுகோபனை முருகப்பெருமானின் திருவருள் திறத்தால் வெல்ல முடிந்தது. அவனைக் கொன்றல்லாது முருகவேள் முன்பு செல்லேன் என்ற எனது சபதமும் நிறைவேறியது" என்று எண்ணியபடி கந்தவேளைத் தரிசிக்கும் ஆவலுடன், பூதப்படைகள் வெற்றிச் சங்குகளை முழங்கியபடி சூழ்ந்துவரப் பாசறை சென்றடைந்தார்.

கந்தவேளின் கழலிணைகளைப் பலமுறை பணிந்து எழுந்த வீரவாகு தேவரின் கண்களினின்றும் ஆனந்த அருவி பெருகியது. கருணை பொங்கும் விழிகளால் அவரைத் திருவருள் நோக்கம் செய்த முருகவேள், தமது திருக்கரங்களால் அன்புடன் தழுவி, "தம்பியே! நீ பானு கோபனுடன் போர் செய்து வருந்தி அவனைக் கொன்றாய்.

உனது வீர பராக்கிரமத்தைக் கண்டு யாம் மகிழ்ந்தோம். உனக்கு என்ன வரம் வேண்டும்? தருவோம்'' என்றார்.

வீரவாகுதேவர் ''எம்பெருமானே! செல்வத்தால் சொல்லொணா அல்லல் விளையும். ஆகையால் சங்கநிதி பதுமநிதி இரண்டுமுடனான தரணியெல்லாம் ஆளுகின்ற குபேரனுடைய வாழ்வை அடியேன் எண்ணமாட்டேன். மேலுலகங்களுக்கு அதிபதியான இந்திரனது அரசினைக் கனவிலும் கருதேன். திருமால், பிரமன் முதலானோருடைய பதங்களையும் ஒரு பொருளென மதியேன். ஐயனே, முத்தியிலும் அரியதொரு பேரின்பம் உண்டு. பலகாலம் சிந்தித்து பலநாள் தவம் கிடந்த தபோதனர்களும் அதை இன்னும் பெற்றிலர். எனவே தேவரீருடைய திருவடிகளில் மாறாத அன்பு செலுத்தும் பேரின்பமாகிய அந்த வரத்தை அடியேன் உய்யும் பொருட்டு அருள் செய்ய வேண்டும்'' என்று கூறி இரந்து நிற்ப, கந்தவேள் ''வீரவாகுவே! உனக்கு அது தந்தோம்'' எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

> **கோல நீடிய நிதிபதி வாழ்வையுங் குறியேன்**
> **மேலை இந்திரன் அரசினைக் கனவிலும் வெஃகேன்**
> **மால் அயன் பெறு பதத்தையும் பெரிதென மதியேன்**
> **சால நின் பதத் தன்பையே வேண்டுவன் தமியேன்**

(பானுகோபன் வதைப்படலம்)

- உதயன், 07.11.1994

# கடலிற்குள் இறுதிக் கிரியை

வேற்படை சீற்றத்துடன் மிக வேகமாகச் சென்று சூரபன்மனின் உடலை இரு கூறுகளாக்கி கடலில் எறிந்து விட்டு, ஆகாய கங்கையில் மூழ்கி, அக்கினி வடிவத்தை மாற்றி, அனுக்கிரக வடிவு பெற்று மீண்டும் முருகப் பெருமானின் திருக்கரத்தில் அமர்ந்தது. கூறான உடலின் வலப்பக்கம் மயிலாகவும், இடப்பக்கம் சேவலாகவும் மாறிச் சண்முகப் பெருமானைச் சரணடைந்தன.

அவுணர்கள் சிலர் மகேந்திரபுரிக்கு ஓடிச் சென்று சூரபன்மன் இறந்த செய்தியை அவன் மனைவி பதுமகோமளைக்கும் ஏனைய இல்லக்கிழத்தியருக்கும் கூறினர். 'மணவாளன் இறந்தான்' என்ற சொல் காதிற்பட்டதும் இடியேறுண்ட சர்ப்பம் போலப் பதுமகோமளை உயிர் நீத்தாள்.

சூரபன்மனுடைய இல்லக்கிழத்தியர் அழுது புலம்பி வயிற்றிலடித்துக் கொண்டு பெரிய தீக்குண்டம் அமைத்து இறந்த பதுமகோமளையின் உடலை அதில் இட்டுத் தாமும் வீழ்ந்து இறந்தனர். மங்கல நாணும், மாலையும் தீவாய்ப்பட்டு எரியும் அத்தருணம் இலக்குமிதேவியும் வீரமகேந்திரபுரியை விட்டு நீங்கினள்.

முன்னர் வீரவாகுதேவருடன் போர் புரியப் பயந்து, கடலுள் புகுந்து மீனாகச் சஞ்சரித்துக் கொண்டிருந்தான் சூரபன்மனின் கடைசி மகனான இரணியன். தன் தந்தை

இறந்து சேவலும் மயிலுமாகிக் கந்தவேளைச் சரணடைந்ததை அறிந்த இரணியன் வானவெளியில் நின்று புலம்புவானாயினன்.

''தந்தையே, அரிபிரமேந்திராதி தேவர்கள் வாழ்ந்த வளத்துடன் அரசிருந்த நீ, இன்று சிவன் மைந்தன் தேரில் சேவலாய் நின்று கூவுகின்றனையோ? அண்டங்களில் உள்ளோர் அனைவரும் வணங்கித் தழும்பு பெற்ற பாதங்களை உடைய நீ இன்று வேற்கரனை மயிலாய் நின்று சுமக்கின்றனையோ? அரசனே! உனது பழைய வடிவையிழந்து வேறான பட்சி வடிவங்கொண்டாய். ஆதலால் நீ இறந்தாயில்லை. எனவே, உனக்கு ஈமக்கிரியை செய்யும் பேறு கிடையாத நான் வீணாக என் உயிரைப் பாதுகாத்திருந்தேனே'' என்று பலவாறு புலம்பிய இரணியன், பூதர்கள் தன்னைக் கண்டால் கொன்று விடுவர் என அஞ்சி மீண்டும் கடலுள் புகுந்தான். கடலுள் புகுந்த இரணியன் மிகவும் வாட்டமடைந்து, அந்தக் கணமே தமது குருவாகிய சுக்கிராச்சாரியரிடம் சென்று இறந்த தந்தையருக்கும், சகோதரருக்கும், தாய்மாருக்கும், ஏனையோருக்கும் செய்ய வேண்டிய கடன்களை எல்லாம் விதிமுறைப்படி செய்தான்.

**புக்க கனகன் புலர்ந்து புகரோன்பால்**
**அக் கணமே யெய்தி யழிவுற்ற தந்தையர்க்கும்**
**தக்க துணைவர்க்குந் தாயர்க்கும் ஏனையர்க்கும்**
**மிக்க கடன்களை விதிமுறையே செய்தான்.**

(கனகன் : இரணியன்; புகரோன் : சுக்கிரன்)

- இரணியன் புலம்புறுபடலம்

- உதயன், 08.11.1994



# கந்தன் நாமம் பாடி அமைதி காண்போம்

யுகங்கள் நான்கு. அவை கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்பன. இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கலியுகம் நான்கு இலட்சத்து முப்பத்திரண்டாயிரம் (4,32,000) ஆண்டுகளைக் கொண்டது. இதில் இற்றைவரை கழிந்தது ஐயாயிரத்து எண்பத்தொன்பது (5089) ஆண்டுகள் மட்டுமே.

ஒவ்வொரு யுகத்திலும் வேறு வேறு முறையான வழிபாடுகளாலும் தர்ம கைங்கர்யங்களாலும், மானுடருக்குச் செல்வ சம்பத்துக்கள் நிறைந்த வாழ்வும், உயர்ந்த பதவியும், அதிகாரமும், ஈற்றில் முத்தியின்பமும் கிட்டும் என்பது வேதசாஸ்திர நூல்களின் முடிவு.

கிருதயுகத்தில் ஞானத்தினாலும், திரேதாயுகத்தில் தானத்தினாலும், துவாபரயுகத்தில் யாகத்தாலும், கலியுகத்தில் பக்தியினாலும், இறையருள் துணை நின்று முத்தியின்பத்துக்கு வித்திடுமென்று அவை கூறுகின்றன.

'பக்தி' என்ற வடசொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல் 'அன்பு,' 'அன்பே தெய்வம்' என்று பேசும் திருமந்திரம். அன்பே தெய்வமெனில், இறைவனில் உண்மை அன்பு செலுத்தும் ஆன்மாவும், தெய்வத்தின் கருணாகடாட்சத்தால், இரண்டறக் கலக்குமென்பது அதன் தத்துவம்.

இடையறாத பக்திப் பெருக்கால் கந்தவேளின் கருணைக்கடலில் மூழ்கித்திளைத்து, முத்தியின்பப் பேறுபெற்ற முதன்மையாளர் அருணகிரிநாதர். அவர் பாடிய மந்திர நூலாகிய கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி என்பவற்றில் முருகப் பெருமானை விளித்து விண்ணப்பம் செய்யும் போதெல்லாம் 'முருகா, குமரா, குகா, கந்தா, கடம்பா, கார்மயில் வாகனா, காங்கேயா, கார்த்திகேயா' என்றெல்லாம் அன்புடனும் தாழ்மையுடனும் அழைக்கிறார்.

நினைத்தபொழுது நினைத்த இடத்தில் முருகப்பெருமானைக் கண்டு களிக்கும் பேறுபெற்றவர் அருணகிரிநாதர்.

> **பங்கே நிரைத்த பன்னிருதோளும் பதும மலர்க் கொங்கே**
> **தரளம் சொரியும் செங்கோடைக் குமரனென**
> **எங்கே நினைப்பினும் அங்கேயென் முன்வந்தெதிர் நிற்பனே**

என்று பெருமிதத்துடன் அவர் கூறும் கந்தர் அலங்காரப்பாடல் (104) நம்மை வியக்கவும் சிந்திக்கவும் தூண்டுகிறது.

ஆகவே முருகப்பெருமானுடைய நாமங்களை அருணகிரியார் மீண்டும் மீண்டும் கூறி, ஆறுமுகக் கடவுளை, விளிப்பது தனக்காக அல்ல. இந்த நூல்களைப் பாராயணம் செய்யும் அடியார்களும் முருக நாமங்களை மனதில் நிறுத்தி, மெய்யன்புடன் ஓதி உய்வு அடைய வேண்டும் என்ற சீரிய, பரந்த எண்ணத்தினாலேயே என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மண்ணுலகில் மானுடனாகப் பிறந்த அருணகிரியார் மட்டுமன்றி விண்ணுலக வாழ்வு பெற்ற தேவர்களும் முருக நாமத்தைச் சொல்லித் துன்பங்களிலிருந்து விடுதலை பெற்றிருக்கிறார்கள்.

- சஞ்சீவி, 22.08.1987

## ஞானக் குழந்தையாக அவதரித்த அழகன் முருகப் பெருமான்தானா?

சமணரின் வருகையால் பாண்டி நாட்டில் சைவமும் தமிழும் வளம் குன்றின. மன்னன் சமண சமயத்தைச் சார்ந்தான். அரசனின் வழி, குடிகளும் சமணத்தைத் தழுவினர். சமணப் பள்ளிகள் தோன்றின. சிவ சின்னங்களாகிய விபூதி, உருத்திராக்கம் என்பன மறைந்தன.

பாண்டியனும் பாண்டிநாட்டு மக்களும் செய்த பூர்வ புண்ணியத்தின் பயனால் தேவி மங்கையர்க்கரசியாரும் முதல் அமைச்சர் குலச்சிறையாரும் சைவர்களாகவே இருந்தனர். மன்னனுக்கும் மக்களுக்கும் நேர்ந்த அவலநிலையை எண்ணி மனம் கலங்கினர். அந்த நாள்களில் -

ஞானசம்பந்தப் பெருமான் திருமறைக்காட்டிலே (வேதாரணியத்திலே) வேதங்கள் அர்ச்சித்துத் திருக்கடைகாப்புச் செய்த திருக்கதவுகள், அந்த நாள் முதல் நெடுங்காலம் திறக்கப்படாமல் இருந்தது கண்டு அவை திறக்கவும் அடைக்கவும் திருப்பதிகம் பாடி அங்கு தங்கியிருந்தார்.

பாண்டிமா தேவியின் அழைப்புக்கு மகிழ்ந்த ஞான சம்பந்தப் பெருமான் மதுரைப் பதியை அடைந்து, ஒரு மடத்தில் தங்கியிருந்தார். இதை அறிந்த சமணர்கள் பாண்டியனிடம் சென்று,

''மன்னா, சீர்காழியில் பிறந்து சிவன் அருள் பெற்ற அந்தணச் சிறுவன் ஒருவன் எங்களை வாதில் வெல்லும் பொருட்டு வந்திருக்கிறான். அவனுடன் வெண்பொடி பூசிய தொண்டர்களும் வந்திருக்கின்றார்கள்'' என்று வெறுப்புடன் கூறினார்கள்.

பண்டைய தீ வினைப் பயனால் சமணத்தைத் தழுவிய பாண்டியன் சினங்கொண்டு ''அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?'' என்று வினவினான். சமணகுருமார், ''அரசே! அந்தப் பாலகன் தங்கியிருக்கும் மடத்தில் தீ பிடிக்குமாறு மந்திரம் செபித்தல் வேண்டும். அப்படிச் செய்யின் அவனும் தொண்டர்களும் மதுரையை விட்டு ஓடிவிடுவார்கள்'' என்றனர். ''மிகவும் நன்று! அப்படியே செய்யுங்கள்'' என்று அனுமதி வழங்கினான் அரசன்.

தங்கள் மந்திர உச்சாடனங்கள் பலிதமடையாமையைக் கண்ட சமணர்கள், நடு இரவில் சிவனடியார் தங்கியிருந்த மடத்திற்குத் தீ வைத்தனர். தொண்டர்கள் தீயை அவித்துவிட்டுச் சம்பந்தப் பிள்ளையாரிடம் சென்று நிகழ்ந்ததைக் கூறினர்.

அதைக் கேட்ட ஞானசம்பந்தர் ''தவத்தோர் தங்கியிருக்கும் மடத்துக்குப் பாவிகள் தீ வைத்தார்களோ? அரசனின் ஆட்சிமுறையே இதற்குக் காரணம். குடிகள்

செய்த குற்றம் கொற்றவனையே சார்தல் அரசியல் தர்மமாகும், ஆலவாய்ப் பெருமானின் அருளால் சமணர்கள் இட்ட தீயைப் பாண்டியனிடம் செல்லப் பணிப்பதே முறையாகும். ஆனால் அந்தத் தீயின் வெப்பம் பாண்டியனை அழித்துவிடுமே'' என்று கவலையுற்றார்.

பின்னர் மங்கையர்க்கரசியாரின் மங்கலநாண் காப்பாற்றப்பட வேண்டும். பாண்டியன் மீண்டும் சிவநெறியில் நிற்க வேண்டும். திருநீற்றின் மகிமையை அனைவரும் அறிய வேண்டும் என்பனவற்றைத் திருவுள்ளத்திற் கொண்டு ''பையவே சென்று பாண்டியற்காகவே'' என்ற அடியை இறுதியாகக் கொண்ட திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

### வெந்தழல் வெப்பு நோயானது

சமணர்கள் இட்ட வெந்தழல் வெப்பு நோயாக உருவெடுத்துப் பாண்டியனைச் சுட்டது. மருத்துவர்களும் சமணர்களும் ஒன்று சேர்ந்து செய்த சிகிச்சைகள் அனைத்தும் பயனற்றுப் போயின. மங்கையர்க்கரசியாரும் குலச் சிறையாரும் பணிந்து வேண்ட ஞானசம்பந்தப்பெருமான் ''மந்திரமாவது நீறு'' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடியருளி பாண்டியனுடைய உடலில் திருநீறு பூசினார். வெப்பு நோய் அகன்றது.

**சமணர்களின் துர்ப்போதனையால், தான் செய்தது தவறு என்று உணர்ந்த பாண்டியன், ஞானசம்பந்தப் பெருமானின் பாதங்களில் வீழ்ந்து 'அடியேன் உய்ந்தேன்! உய்ந்தேன்!' என்று கூறி வணங்கினான். பின்னர்**

அனல்வாதம். புனல் வாதம் என்பனவற்றிலும் தோல்வியடைந்த சமணகுருமாரும், அவர்களைச் சார்ந்த எண்ணாயிரம் பேரும் தங்களுக்குத் தாங்களே தண்டனை விதித்து ஏற்றுக் கொண்டபடி கழுவில் ஏற்றப்பட்டனர்.

பாண்டியன் மீண்டும் சிவநெறியில் நின்றான். பாண்டி நாட்டில் தமிழும், சைவமும் முன்போல் தழைத்து ஓங்கின.

ஞானப்பால் உண்டு மூன்று வயதிலேயே ''தோடுடைய செவியன்'' என்று தேவாரம் பாடிய ஞானக் குழந்தையாக முருகப் பெருமானே அவதாரம் செய்தார் என்பதை உணர்ந்து தெளிந்த அருணகிரிநாதர், "உமையம்மை தந்த கற்கண்டு போன்ற இனிமையான பாலை உண்டவனே, தேவர்களுக்குத் தலைவனே, கடம்ப மாலையை அணிவதால் வாசனை பொருந்திய பன்னிரு தோள்களையுடையவனே, அழகனே'' என்று முருகனை வியந்து திருப்புகழ் பாடுகின்றார்.

**கண்டாகும் பாலுண்டாய் அண்டார்**
**கண்டா கந்தப் - புயவேளே.**

- உதயன், 23.5.97

# அம்பிகையின் சாபம் அனைவருக்கும் வரம்!

சிவபிரானின் நெற்றிக் கண்கள் ஆறிலுமிருந்து புறப்பட்ட அக்கினிப் பொறிகள் ஆறும், அளவிறந்த வெப்பத்துடன் உலகெங்கிலும் பரவிப் பரந்தன. அந்தச் சோதியின் வெப்பத்தைத் தாங்கொணாத வானவர்கள் எட்டுத்திக்குகளிலும் சிதறி ஓடினார்கள். வாயுக்கள் உலைந்து ஓய்ந்தன. கடல்கள் வற்றின. வடவாமுக அக்கினியும் தன் செருக்கு அடங்கிற்று. உயிர்கள் அனைத்தும் நடுங்கின. ஆயினும் அந்தப் பொறிகள் சிவபிரானின் அருளால் கருணைபுரிவதற்கென்றே தோன்றினவாகையால் எந்த உயிருக்கும் தீங்கு செய்யவில்லை, அச்சத்தை மட்டுமே ஏற்படுத்தின.

அக்கினிப் பொறிகள் புறப்பட்டபோது, அருகே வீற்றிருந்த உமையம்மையார், சுடர்களின் வெம்மையால், திருவுள்ளம் கலங்கித் திருக்கோயிலுள்ளே ஓடினார், அப்பொழுது அவருடைய திருவடிகளில் உள்ள சிலம்புகள் புலம்பி, ஒன்றோடொன்று தாக்கிச் சிதைவுற, அவற்றுள் இருந்த நவரத்தினங்கள் சிதறிப் பரவின.

பயந்து ஓடிய தேவர்கள் அனைவரும் நடுக்கடலின் பாய் மரத்துக் காக்கைகள் போல மீண்டு சிவபிரான் திருமுன் வந்து, அக்கினிப் பொறிகளின் வெம்மையைத் தணித்துத், தம்மையும் உலகங்களையும் காத்தருளுமாறும், சூரனைச் சங்காரம் செய்ய ஒரு புதல்வனைத் தந்தருளும்படியும் வேண்டினர்.

மஹாதேவர் தேவர்களை அஞ்சாதீர்கள் என்று அபயமளித்து ஆறுமுகத் திருக்கோலத்தை மறைத்து, முன்போல் ஒரு முகத்தோடு எழுந்தருளி உலகம் எங்கும் பரந்த அக்கினிப் பொறிகளைத் தம்முன் வரும்படி திருவுள்ளம் கொண்டார். எம்பிரானின் ஆணைப்படி அவற்றை வாயுவும், தேயுவும், கங்கையும் சரவணப் பொய்கையில், கொண்டு சென்று சேர்த்தனர்.

தேவர்களைக் காத்து இரட்சிக்கும் பொருட்டே எம்பிரான் அக்கினிப் பொறிகளை உதவி சரவணப் பொய்கையில் முருகனைக் குழந்தையாகத் தோற்றுவிப்பதே சிவபிரானின் திருவுள்ளம் எனத் தெளிந்த உமையம்மை மீண்டும் சென்று பரமனைப் பணிந்து நிற்கும் முன்போலப் பிராட்டியை இடப்பாகத்தில் இருத்தியருளினார் இறைவன்.

எனினும் சினமுற்ற பார்வதி அம்மையார் தேவர்களின் பொருட்டு, என்னையும் பேணாது, சிவபிரான் தனிமையில் முருகனைத் தோற்றிவிக்கக் காரணமாகிய, அமராவதி அரசன், பிரமதேவர், நாராயணக்கடவுள் முதலாய தேவர்களின் மனைவியருக்குப் புதல்வர்கள் இல்லாமற் போகக்கடவது'' என்று சாபமிட்டார்.

**அன்ன தற்பினர் உமையவள் எனதுபால் அமலன்**
**தன்ன ருட்பெறு மதலை தோன்றாவகை தடுத்த**
**பொன்னகர்க் கிறை விரிஞ்சன் மால புத்தேளிர்**
**பன்னியர்க் கெலாம் புதல்வரின்றாக எனப் பகர்ந்தாள்**

(பொன்னகர்க்கிறை; இந்திரன் - விரிஞ்சன்; பிரமதேவர், மால் - விட்டுணு : பன்னியர் - பெண்கள், மனைவியர்)

உமையம்மை, முன்னர் சுடர்ப் பொறிகளைக் கண்டு அஞ்சி ஓடிய போது சிதறுண்ட சிலம்புகளில் இருந்த நவரத்தினங்கள் முழுவதும் சிவபிரான் முன்னர் பிரகாசித்து இலங்கி நின்றன. ஒன்பது இரத்தினங்களில், எல்லாவற்றையும் ஆக்குகிற இறைவனின் ஆணைப்படி நிர்மல சொரூபியான அம்பிகையின் அழகிய திருவுருவங்கள் தோன்றின. அவற்றை நோக்கிச் சிவபிரான், கருணையுடன் "இங்கு வாருங்கள்" என அழைத்தலும் ஒவ்வொரு இரத்தினத்துக்கு ஒவ்வொரு சத்தியாக ஒன்பது சத்திகள் தோன்றினர். பார்வதி அம்மையாரை ஒத்த ஒன்பது சத்திகளும் சிவபிரானின் திருப்பாதத்தில் பணிந்து வணங்கி அவரிடத்து விருப்பம் வைத்தலும், உடனே அவர்கள் முனிவர் பத்தினிகளாயினர், ரிஷி பத்தினிகள் எவ்வாறு கணவன்மாருடன் உடல் உறவு இன்றிப் பார்வையால் கருக்கொள்வரோ அதே போன்று ஒன்பது சத்திகளும் கருக்கொண்டனர்.

ஈசன் மேல் மனம் போக்கிக் கருக் கொண்ட, தன் வடிவே கொண்ட ஒன்பது சத்திகளின்பால் மிகவும் கோபம் கொண்ட சிவசக்தி, "ஒரே இனமான நீங்கள் எல்லோரும்

எனக்கு மாறாகிய நிலையை அடைந்தமையால் இந்தக் கருவோடு பலகாலம் இருப்பீர்களாக'' எனச் சாபமிட்டாள்.

அம்பிகையின் சாபத்தால் நடுங்கிய நவசக்திகள் மாற்றற்கரிய சாபத்தின் வலிமையை உணர்ந்து எம்பிராட்டியைத் துதித்துக் கொண்டு சாப நிவர்த்தி பெறும் வகையறியாது பலகாலம் இருந்தனர். நவசத்திகள் கருவில் இசை வல்லுனரான நந்திகணத்தவர்கள் குழந்தை வடிவாகப் புகுந்து, நிகரற்ற இளைஞர்களாக வளர்ந்து சிவபிரானைத் தியானித்த வண்ணம் யோக நெறியில் இருந்தனர்.

நவசத்திகளின் துயரத்தைத் துடைக்கத் திருவுளங் கொண்ட சிவபிரான் கௌரியைக் கடைக்கண் நோக்கம் செய்தருள, புன்முறுவல் பூத்த புவனேஸ்வரி ''நவசத்திகளே! பலகாலம் கருவைச் சுமந்து உடலும் உள்ளமும் நொந்து துன்புற்றீர்கள், இனி வலிமை நிறைந்த புதல்வர்களைப் பெறுவீர்களாக'' என அருள்புரிந்தாள்.

நவசத்திகள் பெற்றெடுத்த வீரவாகுதேவர் முதலாய ஒன்பது வீரர்களும் (நவவீரர்கள்) முருகப் பெருமானுக்குத் தம்பியர்களாகும் பேறு பெற்று சூரசம்ஹாரத்தின் போது படைத்தலைவர்களாக விளங்கினர். கந்தபுராண வரலாறு இது.

முருகனின் தோற்றத்திற்குக் காரணமான தேவர்களின் பத்தினிகளும் தம்மைப் போலவே பிள்ளைப் பேறு வாய்க்கப் பெறாதிருக்க வேண்டுமென அம்பிகை சபித்தாள் (இது முதற்சாபம்). அதன் பயனாகத்

தேவர்களுக்கும் குழந்தைகள் இல்லாது போயின. சிவகுமாரனான முருகன் தேவர்களின் நலன் கருதித் தேவ சேனாதிபதியாக வீற்றிருந்தமையால் தேவர்களுக்கு இட்ட சாபம் முருகனையும் பற்றித் தொடர அவனுக்கும் குழந்தைகள் இல்லாது போயின.

சிவபிரான் மேல் காதல் கொண்ட நவசத்திகள் கர்ப்பங் கொள்ளலும், சினமடைந்த பார்வதி அம்மையார் கருவுடன் பலகாலம் இருக்கக் கடவீர்கள் எனச் சபித்தார் (இது இரண்டாவது சாபம்).

கருணையே வடிவான அம்பிகையாம் உலகமாதா சாபமிடுவாளா? ஞானக் கண் கொண்டு நோக்குவோருக்கு இரண்டும் சாபமே அல்ல என்பது புரியும். தம்மைப் போலவே தேவமாதர் யாவரும், உயிரினம் முழுவதையும் குழந்தைகளாகக் கருதித் தேவசக்திகளைப் பரப்பவேண்டும் என்பதும் - கந்தவேளும், கலியுகத்தில் விரும்பித்தொழும் அன்பர்களுக்குத் தோன்றாத் துணையாக இருந்து அருள்பாலித்து, முத்தி இன்பம் வழங்க வேண்டும் என்பதும் அம்பிகையின் திருவருள்.

அது மட்டுமன்றி -

கருவிலே கனகாலந்தங்கி, இணையற்ற வலிமை பெற்ற வீரர்களாகப் பிறந்து (நவ வீரர்கள்) சூரசம்ஹாரத்துக்குத் துணை போக வேண்டும் என்பதும் அம்பிகையின் திருவுள்ளம்.

ஆம்! அம்பிகையின் சாபம்... அனைவருக்கும் வரம்!

ஞானக்கிளி

## ஐந்தாம் குரவரெனப் பக்தர் பரவசப்படும் அருணகிரிநாதர்

முருகப் பெருமானின் முழுமுதற் தன்மையை முழுதொருங்குணர்ந்த முனீந்திரர் அருணகிரிநாதர். இவர், நினைக்க முத்தியளிக்கும் புனித இடமான திருவண்ணாமலையில் 15-ஆம் நூற்றாண்டில் அவதரித்தவர். சைவசமய குரவர்களில் நால்வருக்குப் பின் வந்த ஐந்தாவது குரவர் எனப் போற்றப்படுபவர். இவருடைய பெருமை அளவிடற்கரியது.

இவர் இயற்றிய நூல்கள், திருப்புகழ், கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, வேல்விருத்தம், மயில் விருத்தம் முதலியன. இந்த நூல்களை அருணகிரிநாதர் இலக்கண இலக்கிய அறிவின் துணையைக் கொண்டு மட்டும் பாடவில்லை. முருகப் பெருமானின் பூரண அருளும் பெற்றே இவைகளைப் பாடியருளினார்.

இளமைக் காலத்தின் பெரும்பகுதியை பெண்கள் மையலில் செலவிட்ட இவரைத் தீராத தொழுநோய் பற்றிக் கொண்டது. பிணியின் முதிர்ச்சியால் துன்பம் தாங்க முடியாமல் ''இனி உயிர் துறப்பேன்'' என்று தீர்மானித்து எல்லாளன் என்ற அரசன் நிர்மாணித்த கோபுரத்தின்

உச்சியில் ஏறித் தற்கொலை செய்து கொள்ளத் துணிந்தார். (திருவண்ணாமலை என்னும் சிவஸ்தலத்தில் எல்லாளன் கட்டிய கோபுரத்தின் தென்புறத்தில் விநாயகரும், வடபுறத்தில் முருகப் பெருமானும் எழுந்தருளியுள்ளனர்.)

கோபுரத்தின் உச்சியில் ஏறிய அருணகிரிநாதர் "முருகா" எனக் கூறிக் கொண்டு கீழே பாய்ந்தார். பிராரத்துவ வினையால் நோயையும் அதன் துன்பத்தையும் அனுபவித்த அருணகிரியாருக்குப் பண்டைத் தவ வலிமையும், முருகவேளின் கருணையும் இருந்தது. மேலிருந்து வந்த அருணகிரியை முருகப் பெருமான் நெடுவேலைத் தாங்கும் தனது சிவந்த கைகளால் தாங்கிக் கொண்டார். இறைவனின் கருணையாகிய ஸ்பரிசம் பட்டதும் அவரைப் பீடித்திருந்த தொழுநோய் பகலவனைக் கண்ட பனிபோல மறைந்தது. நோய் தீர்ந்து பொலிவுடன் அழகும் பெற்ற அருணகிரியார் இதுவரையில் தான் கண்டறியாத காட்சியைக் கண்டு பூரிப்படைந்து, சொல்லும் செயலும் அற்ற நிலையில் முருகவேளையே பார்த்தபடி இருந்தார். முருகன் அன்புடன் தழுவி, அவருடைய செவியில் "சும்மா இரு" என்று கூறி மறைந்தார்.

கணநேரத்தில் கண்டு களித்து, கனவாகிவிட்ட காட்சியை எண்ணியபடி முருகப் பெருமானின் கட்டளைப்படி சிவயோக சமாதியில் இருந்தார். நினைப்பு மறப்பற்ற நிலையில் நிட்டையில் இருந்த அருணகிரியாரின் அகக் கண்ணில் தோன்றிய முருகவேள் 'அன்பனே' உலகம் உய்யும் பொருட்டுத் 'திருப்புகழ் பாடுதி' என வேண்டிக் கொண்டார்.

'ஐயனே! வேத ஆகமங்களுக்கும் எட்டாத நின்புகழை எழுத்து அறிவு ஞானம் இல்லாத என்னால் எப்படிப் பாட முடியும்?' என்று கவலையுடன் தொழுது உருகி நின்றார். கந்தவேள் அவருடைய நாவிலே தன் சக்தி வேலால், 'ஓம்' என்ற பிரணவ மந்திரத்தை எழுதி 'முத்து' என்று பாடு என அடியெடுத்துக் கொடுத்தார். கந்தனின் கருணையால் மடை திறந்த வெள்ளம் போல வாக்கினில் திருப்புகழ் வெள்ளம் பொங்கிப் பாய்ந்ததும் 'முத்தைத் தரு பத்தித் திருநகை' என்ற திருப்புகழ் பாடலை முதலாகவுள்ள பதினாயிரம் பாடல்கள் பிறந்தன!

அவர் பாடிய கந்தர் அலங்காரம் என்னும் நூல் முருகப் பெருமானுடைய பாதாதி கேச அழகு நலன்களையும், அவருடைய கொடியாகிய சேவலையும், வாகனமாகிய மயிலையும் சிறப்பித்துக் கூறுவது - ஆகையால் இந்த நூல் முருகனுக்கு மிகவும் பிரியமானது. முருகனடியார்கள் விரும்பிப் படிக்கும் இந்த நூலில் 'முருகா' என்ற நாமத்தின் பெருமையைப் பல இடங்களில் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

'முருகா' என்ற நாமத்தின் பெருமை, சொல்லில் அடங்காது. நான்கு வேதங்களில் கூறப்பட்டுள்ள மந்திரங்களைப் பாராயணம் செய்பவர்களுக்கும் மேலான உயர் நிலையையும், சிறப்பையும், பெருமையையும், கந்தர் அலங்காரத்தை ஓதும் அடியவர்கள் பெறுவார்கள் என்பதைப் பல பாடல்களில் அருணகிரியார் கூறியுள்ளார். 'முருகா' என்னும் நாமத்தை இடையறாது செபிப்பவர்களை நோய், பிணி, துன்பம், வறுமை, மரணபயம் முதலியன


அணுகாது என்பதையும் அழகாகக் கூறியிருக்கிறார். அது மட்டுமல்லாமல் காலனை வெல்லும் மன வலிமையையும், எதிர்க்கும் அஞ்சாமையையும் அடைவார்கள் என்றும் முருகனடியார்களைக் கண்டால் இயமன் கூடப் பணிந்து விலகிச் செல்வான் என்பதையும் ஆணித்தரமாக அடித்துச் சொல்லியுள்ளார்.

கந்தப் பெருமானுடைய பாத தாமரைகள் விழிக்கும், 'முருகா' எனும் நாமம் மொழிக்கும், பன்னிரு புயங்கள் பழிபாவங்களுக்கும், செல்லும் வழிக்கு வேலும் மயிலும் துணையாக நின்று அருள்புரிய அனைவரும் அவனருள் வேண்டி வணங்கி நிற்போம். 'முருகா' என இடையறாது செபித்து உயர்வு அடைவோம்.

- உதயன், 24.10.1986



# நூலாசிரியர் பற்றி...



இவர் வடமராச்சி கரணவாயைப் பிறப்பிடமாகவும், வலிகாமம் மேற்கு மூளாயினை வசிப்பிடமாகவும் கொண்டவரும், இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தரும் ஆவர். யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளான ஈழநாடு, உதயன், சஞ்சீவி என்பவற்றுக்கும், தலைநகரில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளான, தினகரன், வீரகேசரி என்பவற்றுக்கும் மூளாய் அருணாசலம் என்னும் பெயரில் ஆன்மீகம் சம்பந்தமான ஆக்கங்களையும், எண் சோதிடவியல், சிறுகதை, நாடகம் என்பவற்றையும், இந்துநெறி சம்பந்தமான பல ஆக்கங்களையும் எழுதியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற இவரின் ஆக்கங்கள் சிங்களப் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. 'எண்களில் உங்கள் அதிஷ்டம்' என்னும் தலைப்பில் சிங்கள தமிழ் நூல்கள் எழுதியுள்ளமை குறிப்பிட்டத் தக்கது.

அமைதியும், அடக்கமும், மென்மையும் கொண்ட இவர் 1931ஆம் ஆண்டு பிறந்து 1999 ஆம் ஆண்டு இறைவனடி எய்தினார். அவர் ஆன்மா இவ்வுலகைவிட்டு நீங்கினாலும், அவர் எழுதிய ஆக்கங்களில் இன்னும் எம்முடன் வாழ்கின்றார்.

அன்புடன்
**S. வைத்தீஸ்வரக் குருக்கள்**
காரைநகர்